

## ஐ.நா. எனும் கடவுளும் மனித உரிமை எனும் மதமும்

03



09

## அமெரிக்க - சீன வணிகப் போரும் உலகப் பொருளாதாரமும்





# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 404 • 12 ஒக்டோபர் 2018 வெள்ளிக்கிழமை • ஸபர் 1440 • விலை 40.00





# மாகாண சபையில் முஸ்லிம் சமூகமே தனது பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் பரிதாப நிலை

மாகாண சபை தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவினரின் அறிக்கை பாராளுமன்றில் தோற்கடிக்கப்பட்டு அதனை மீளாய்வு செய்வதற்கு பிரதமர் தலைமையிலான புதிய குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்ட பொழுதும் முஸ்லிம் சமூகத்திடமிருந்து எந்தவித முன்மொழிவுகளும் இதுவரை வந்தடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய அறிக்கையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு பெரிதும் பாதிப்பு இருக்கிறது என மாகாண எல்லை நிர்ணயக் குழுவின் அங்கத்தவராக இருந்து மறைந்த கலாநிதி ஹஸ்புல்லாஹ் பல தடவைகளில் சுட்டிக் காட்டியிருந்ததோடு அறிக்கையும் வெளியிட்டிருந்தார்.

(பக். 14)

## அரச செலவீனம் 19400 கோடியால் அதிகரிப்பு



நிதியமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்துள்ள வரவு செலவுத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி 2019 ஆம் ஆண்டுக்கான அரச செலவீனமாக 4367 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2018 ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் முன்வைக்கப்பட்ட தொகையை விட 194 பில்லியன் அதிகமானதாகும்.

பாதுகாப்புக்கென 30611 கோடியும், சுகாதாரத்துக்கு 18558 கோடியும், கல்விக்கு 10500 கோடியும், பொதுநிர்வாகம், சட்ட ஒழுங்கு அமைச்சுக்கு 29515 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக்கு கடந்த வருடம் 29000 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

(பக். 14)

## முன்மொழிவுகளை குழுவினர் கவனத்தில் எடுக்க வேண்டும்



மாகாண எல்லை நிர்ணயக் குழுவினருக்கு தேசிய ஷூறா சபையும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியும் இணைந்து பல முன்மொழிவுகளை முன்வைத்துள்ளன. மாகாண எல்லை நிர்ணய அறிக்கையை மீளாய்வு செய்வதற்கான குழுவினர் அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி அஜ்வதீன் தெரிவித்தார்.

மாகாண எல்லை நிர்ணயம் சம்பந்தமாக நாடு முழுவதும் விஜயம் செய்து தேசிய ஷூறா சபையும் அகில இலங்கை முஸ்லிம் (பக். 14)

## அறிக்கையின்றி கருத்துச் சொல்ல முடியாத நிலை

Ministry of Justice
Sri Lanka

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தத்தை முன்மொழிவதற்காக நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினரின் அறிக்கை நீதி அமைச்சின் இணையத் தளத்தில் இன்றுவரை ஆங்கிலத்திலேயே பதிவேற்றப்பட்டிருப்பது தொடர்பில் முஸ்லிம் சமூகம் அதிருப்தியை வெளியிட்டு வருகிறது.

ஜனவரி மாதம் முன்வைக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பில் பொதுமக்களது அபிப்பிராயங்களை நீதி அமைச்சு கோரியுள்ளது. (பக். 14)

## யுத்த வெற்றி நினைவுச் சின்னங்கள் சிங்களவர்களின் ஆதிக்கத்தைக் காட்டுகின்றன



வடக்கிலும் கிழக்கிலும் நிறுவப்பட்டுள்ள யுத்த வெற்றி நினைவுச் சின்னங்கள் சிங்களவர்கள் தமிழர்களின் காணிகளை கையகப்படுத்துவதைக் காட்டுகின்றன என ஒக்லண்ட் நிறுவனத்தின் தலைவர் அனுராதா மிட்டல் தெரிவித்துள்ளார்.


இலங்கையில் தொடரும் இராணுவ மயமாக்கலும் காணி கையகப்படுத்தலும் தொடர்பிலான தனது கண்டறிதல்கள் பற்றி, தமிழ்த் தேசியமும் இலங்கையின் இனஒழிப்பும் என்ற தொனிப் பொருளிலான இரண்டாவது சர்வதேச மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (பக். 02)

## 20 இன் 30 அத்தியாயங்களுக்கு அறுதிப் பெரும்பான்மை தேவை

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக ஜேவிபியினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கான முன்மொழிவின் 38 விடயங்களில் 30 விடயங்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் சர்வஜன வாக்கெடுப்பையும் வேண்டி நிற்பவை என (பக். 02)

## அறிக்கையில் கைச்சாத்திடும் வழமையிலேயே ஒப்பமிட்டேன்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை முன்வைப்பதற்காக நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்த வேளையில், நீதியமைச்சினால் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டவரும் அறிக்கையில் கைச்சாத்திட்டது தொடர்பில் பல கேள்விகள் எழுந்துள்ளன. (பக். 02)



## வனவிலங்குகள் காடழிப்பை தவிர்க்க நடவடிக்கை

வனவிலங்குகள் மூலம் காடுகள் அழிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவசாய அமைச்சு மக்களிடமும், புத்திஜீவிகளிடமும் கருத்துக்களைக் கோர எதிர்பார்த்துள்ளது.

நாட்டிலுள்ள காட்டின் பரப்பளவிற்கு இணைவாக இருக்க வேண்டிய விலங்குகளின் அளவு தொடர்பான எதுவித ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனினும், விவசாயிகள் மேற்கொள்ளும் பயிர்ச் (பக். 02)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்"கொலை"ஷிப்



இரண்டு மாணவர்கள் 199 புள்ளிகளை பெற்று இம்முறை Scholarship பரீட்சையில் முதலிடம் பெற்றுள்ளார்கள்.

பரீட்சை முடிந்த கையோடு வினாத்தாள்கள் இலகுவாக இருந்ததாக மாணவர்கள் மத்தியில் ஒரு கருத்து இருந்தது.

அது உண்மை என்பதை cut off marks உணர்த்தி நிற்கிறது.

கொழும்பில் சிங்கள மொழி மூல மாணவர்கள் 168 புள்ளிகளை பெறவேண்டும். தமிழ் மொழி மூல மாணவர்கள் 165 புள்ளிகளை பெற வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 164 ஆக வந்திருக்கிறது.

இந்த முடிவுகளின் அடிப்படையில் 80 புள்ளிகளை சராசரியாக பெற்ற பல மாணவர்கள் சித்தி பெறவில்லை என்ற நிலை தோன்றியுள்ளது. இதனால் பலரும் தங்களது விசனங்களை பகிர்ந்து வருகிறார்கள்.

ஆனால், இந்த பரீட்சையின் இலக்கு பற்றி கொஞ்சம் ஆராய்ந்தால் விசனம் கொள்ளவேண்டிய அவசியம் வராது. இது நாடளாவிய ரீதியில் நடைபெறும் ஒரு போட்டிப்பரீட்சை.

குறித்த ஒரு தொகை மாணவர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஒரு பரீட்சை.

அதுவும் பிள்ளை அரசாங்க உத்தியோகத்தருக்கு பிறந்திருந்தால் அந்த கொடுப்பனவும் கிடைக்காது.


ஆனால் பெரிய பணக்காரனின் பிள்ளைக்கு காசு கிடைக்கும். Area GSO குறைந்த வருமானத்தை போட்டு form நிரப்பி sign பண்ணி கொடுப்பார்!

இதில் வரையறை செய்யப்படும் வெட்டுப்புள்ளிகளை தாண்டுகிறவர்கள் Scholarship pass என்ற தகுதியை பெறுகிறார்கள்.

சிலவேளை பரீட்சை வினாத்தாள் கஷ்டமாக அமைந்தால் வெட்டுப்புள்ளியாக 130ம் வரலாம்.

ஒரு பச்சப்பிழையான education system நமக்கு முன்னே இருக்கும் போது 80+ average எடுத்த பிள்ளை தேறவில்லை என்று கவலைப்படுவதில் எந்த வித பிரயோசனமும் இல்லை.

## CARTOON OF THE WEEK




## யுத்த வெற்றி... (01 ஆம் பக்கத் தொடர்)

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ள பல பெயர்ப்பலகைள் சிங்கள மயமாக்கலின் தீவிரத்தைக் காட்டுகின்றன என அவர் அங்கு தெரிவித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளினதும் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டதிலும் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு அவர் கண்டறிதல்களை வெளியிட்டார்.

புதுமாத்தளன், முல்லைத்தீவு, கொக்காவிலில் இருக்கும் யுத்த வீரர்களின் நினைவுச் சின்னங்கள், கிளிநொச்சியில் இருக்கும் யுத்த வெற்றி நினைவுச் சின்னம், தண்ணீர்த் தாங்கி கோபுரம், ஆனையிறவில் உள்ள புல்டோசர், யாழ்ப்பாணக் குடாவுக்கு அருகில் உள்ள யுத்த வீரர் நினைவுத் தூபிகள் என முக்கியமான கேந்திர நிலையங்களில் எல்லாம் தமிழரின் நிலங்களை சிங்களவர் கையகப்படுத்துவதற்கான அடையாளங்களாக உள்ளன என அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

ஒட்டாவாவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஐந்து விடயங்களில் கவனம் குவிக்கப்பட்டிருந்தது. சிங்கள பௌத்த இனத் தேசியவாதமும் இலங்கையில் அதன் தாக்கமும், மனித உரிமை மீறலும் நீதிக்கான தேடலும், இனஅழிப்பு அது எந்தப் பெயரில் இருந்தாலும், டயஸ்போரா வளங்களும் பொறுப்புக்களும், இன்றைய பூகோள அரசியலில் தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்புதல் ஆகிய தலைப்புக்களில் கவனம் செலுத்தப்பட்டன.


## அல் ஆகில் புலமைப் பரிசில் நிதியம் 2019 தெரிவுகள்

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கம்பியூட்டர் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முதலாம் ஆண்டில் பயிலும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- 30% புலமைப் பரிசில்கள் இஸ்லாம் அல்லாத சமயங்களைப் பின்பற்றும் மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.
- விண்ணப்பதாரிகள் UGC ஆவணத்தின் போட்டோ பிரதி, சொந்த Email முகவரி என்பவற்றுடன்

**Al-Agil Scholarship Fund**

23/3, Market Road, Dharga Town - 12090

எனும் முகவரிக்கு எழுதிப் படிவங்களைக் கோரலாம்.

- விண்ணப்பப் படிவம் Email மூலம் மாத்திரமே அனுப்பப்படும்.

படிவ விநியோக கடைசித் திகதி 20-10-2018

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதி 05-11-2018

- தகுதியானவர்களுக்கு மாத்திரமே பதில் அனுப்பப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளலாம்.





## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

### சின்ன மீனைப்போட்டு பெரிய மீனைப் பிடிக்கின்ற கதை



கடந்த வாரம் சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தினம் ஆகியன கொண்டாடப்பட்டன.

சிறுவர் தினமன்று எனது மகளுக்கு ஒரு கைக்குட்டை வகுப்பாசிரியரினால் பரிசாகக் கொடுக்கப்பட்டது. அதே போல ஆசிரியர் தினமன்று ஒரு கைக்குட்டையை வகுப்பாசிரியருக்கு பரிசாக கொடுக்க முடியுமா?

வகுப்பாசியருக்கும் மற்றைய ஆசிரியர்களுக்கும் கொடுப்பதற்கு நல்லதொரு பரிசு வாங்கித் தருமாறு மூன்றாம் தரத்தில் கல்வி கற்கும் எனது மகள் விடாப்பிடியாக இருந்தாள்.

எனக்கு பரிசு வாங்கிக் கொடுக்க வசதியுண்டு. ஆனால் எல்லா பெற்றோர்களுக்கும் அந்த வசதி இருக்க வாய்ப்பில்லை. ஒரு குழந்தை பரிசு கொடுத்து மற்ற குழந்தை பரிசு கொடுக்க வாய்ப்பு இல்லாமல் போகும் போது அந்த குழந்தை ஒரு தாழ்வு மனப்பான்மையை எதிர்நோக்கும்.

எல்லா ஆசிரியர்களும் தனக்கு பரிசு திரும்ப கிடைக்கும் என்ற எண்ணத்தில் தன்னிடம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பரிசுகள் கொடுப்பதில்லை. ஆனாலும் கொடுப்பதும் நிறுத்தப் பட வேண்டும். எடுப்பதும் நிறுத்தப்பட வேண்டும். இந்த போலிக் கலாச்சாரங்கள் களையப்பட வேண்டும்.

-ஸஹ்ரான் கரீம்

## வனவிலங்குகள்... (01 ஆம் பக்கத் தொடர்)

செய்கைகளுக்கு விலங்குகள் மூலம் ஏற்படும் பாதிப்பு அதிகரித்துள்ளது. அதனால், தமது விவசாய நிலத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான தகவல்களை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்ட மொன்றை விவசாய அமைச்சு ஆரம்பித் துள்ளது.

தற்போது நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் விவசாயிகள் தமக்கு ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்கள் தொடர்பான தகவல்களை அமைச்சிற்கு வழங்கி வருகின்றன.

இந்தத் தகவல்களுக்கு அமைய, காட்டுப் பன்றிகள், குரங்குகள், மயில்கள், முள்ளம்பன்றிகள், காட்டு யானைகள் என்பவற்றால் கூடுதலான பயிர்ச் சேதங்கள் ஏற்படுவதாகத் தெரியவந்துள்ளது.

விவசாயிகளின் இந்த பிரச்சினைகளுக்குரிய நிரந்தர தீர்வாகக் கருதும் யோசனைகளை முன்வைக்குமாறு புத்திஜீவிகளும் பொதுமக்களும் கேட்கப்பட்டுள்ளனர். 0112-872-094 என்ற தொலைநகல் இலக்கத்தின் வாயிலாக தகவல்களை வழங்க முடியும்.

## 20 இன் 30... (01 ஆம் பக்கத் தொடர்)

உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள 08 விடயங்களில் 06 விடயங்கள் பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும்.

பிரேரணையின் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 19, 20, 21, 22, 23, 26, 27, 28, 29, 30, 32, 34, 35, 36, 37 ஆம் பகுதிகள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் சர்வஜன வாக்கெடுப்பையும் வேண்டி நிற்கின்றன. 17, 18, 24, 25, 31, 33 ஆம் பிரிவுகள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வேண்டி நிற்கின்றன.

இந்தத் திருத்தச் சட்டப் பிரேரணை கட்சியின் பெரும்பான்மை முடிவின்றி கட்சிமாறுவதனை தடை செய்கிறது. ஜனாதிபதி தேர்தல் மூலமன்றி பாராளுமன்றத்தினாலேயே தெரிவு செய்யப்பட வேண்டும் என்கிறது. நாட்டுத் தலைவராகவும் அமைச்சரவையின் தலைவராகவும் ஜனாதிபதியே இருப்பார். ஆனாலும் அவர் அரசாங்கத்தின் தலைவராகவும் அமைச்சரவையின் தலைவராகவும் இருக்க மாட்டார். குறித்த 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் சட்டமாக்கப்பட்டால் அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பதவிக் காலம் முடிந்ததன் பின்னரே அமுலாகும்.

அந்த வகையில் பிரதமரே அரசின் தலைவராகவும் அமைச்சரவைத் தலைவராகவும் இருப்பார். ஜனாதிபதியின் அதிகாரங்கள் அமைச்சரவை, பிரதமர், அரசியலமைப்புப் பேரவை, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு பகிரப்பட்டிருக்கும். எனினும் மாகாணங்களுக்கான ஆளுனர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே காணப்படும். வெளிநாடுகளுக்கான தூதுவர்களை நியமித்தல், மன்னிப்பு வழங்குதல் போன்றவை அமைச்சரவை அங்கீகாரத்திலேயே நடைபெறும்.

## தலை வேலை செய்ய மறுக்கும் தலைவர்கள்



காசோலை ஒன்றை மாற்ற வங்கிக்கு சென்றாராம் அரச தலைவர்களில் ஒரு வர்...

தேசிய அடையாள அட்டையை மறந்து வந்து விட்டேன்... ஆனால் இதனை மாற்றியாக வேண்டும்.. நான் யார் தெரியுமா? என்று தனது பதவியை சொன்னாராம் தலைவர்.

உடனே பதிலளித்த வங்கி காசாளர்... ''சேர்... அப்படி சொன்னால் மட்டும் போதாது... போன கிழமை இப்படித்தான் ... ஐடென்டி கார்ட்ட மறந்திட்டு விமல் வீரவன்ச வந்திருந்தார்... எங்க கொஞ்சம் அரசியல் வீரவசனம் பேசிக்காட்டுங் கன்னு சொன்னோம் அவரும் பேசிக் காட்டினார் ... உடனே ஓகே...

ஏன் நேத்து கூட ரஞ்சன் ராமநாயக்க வந்திருந்தார்.. ஐடென்டி கார்ட் மறந்திட்டு ...இதே மாதிரி தான்... சரி.. கொஞ்சம் படத்தில மாதிரி எக்சன் போட்டு காட்டுங்கன்னு சொன்னோம்... காட்டினார்... கொடுத்திட்டோம்..''

என்று காசாளர் சொன்னதும் நீண்ட மௌனத்துக்கு பிறகு வாய் திறந்த தலைவர்... ''எனக்கு என்ன செய்ற தெண்டே தெரியல.. தலையே வேலை செய்ய மறுக்குது'' என்றாராம்...

''ஓகே சேர் உங்களுக்கு இரண்டாயிரம் தாளா ஐயாயிரம் தாளா வைக்கட்டும்...?'' என்றாராம் காசாளர்...

(யாவும் கற்பனை )

- ராமசாமி சிவராஜா

### சீனாவின் ஆதிக்கம்

பத்து வருடங்களுக்கு முன் கொழும்பில் வாழ்ந்து மரணித்த ஒருவர் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டார். கண்களை திறந்தவுடன் அதிர்ச்சியடைந்த மனிதர்,

''யாரப்பா என்னை கொழும்புல எழுப்பாம சீனாவில் எழுப்பியது. நான் என்ன பாவம் செய்தேன்'' என்று புலம்பினார்.

- பஸ்ஹான் நவாஸ்

## சமூக சேவைக்கான சாம-ஸ்ரீ தேசகீர்த்தி விருது வென்ற இலாம் காசிம்

மாத்தறையை பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு பெரியமுல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட இலாம் காசிம் அவர்கள் சமூக சேவைக்கும் சமாதானத்துக்குமான சாம-ஸ்ரீ தேசகீர்த்தி விருதினை வென்றுள்ளார்.

இவர் மாத்தறை ராஹுல வித்தியாலயம், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் வெகுசன ஊடக பட்டப்படிப்பையும், டிப்லோமாவையும் பெற்றவர். தற்போது சிங்கள மொழி மூலமான 'ப்ரபோதய' இஸ்லாமிய இதழில் எழுத்தாளராகவும் காணப்படுகின்றார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் நிர்வாக உத்தியோகத்தரான இவர், நீர்கொழும்பு ஹிலாலியன் நூற்றாண்டு குழுவின் உயர்மட்ட உறுப்பினரும், மஸ்ஜித் கல்வி போரத்தில் தனாதிகாரியாகவும், ஆமிலுல் இஸ்லாம் கலாசார நிலைய உறுப்பினராகவும், முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணியின் கம்பஹா கிளை நிர்வாக உறுப்பினராகவும், நீர்கொழும்பு நிவ்ஸ்டட் மகளிர் கல்லூரியின் அபிவிருத்தி சங்க உறுப்பினராகவும், நீர்கொழும்பு காதி நீதிமன்றில் ஜூரி சபை அங்கத்தவராகவும் சேவை புரிகின்றார்.



சாம-ஸ்ரீ தேச கீர்த்தி விருதானது நாட்டின் அமைதிக்காக பாடுபடுவோருக்கு வழங்கப்படும் விருதாகும். இவ்விருது இன நல்லிணக்க மேம்பாட்டுக்கான ஒரு அங்கீகாரமாகவும் திகழ்கின்றது.

வாழ்த்துக்கள்!

## அறிக்கையில்... (01 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பில் குழுவின் செயலாளராக இருந்த சட்டத்தரணி தில்ஹாரா அமரசிங்கவிடம் மீள்பார்வை வினவிய போது, பொதுவாக எல்லா அறிக்கைகளிலும் கைச்சாத்திடுகின்ற ஒழுங்கிலேயே நானும் கைச்சாத்திட்டிருக்கிறேன். குழுவொன்றில் செயலாளராக நியமிக்கப்படுபவர் அறிக்கையில் கைச்சாத்திடுவது வழமை. முஸ்லிம் தனியார் சட்ட விவகாரத்தில் சஹாப்தீன் அறிக்கையிலும் செயலாளர் கைச்சாத்திட்டிருக்கிறார். பாரூக் அறிக்கையிலும் செயலாளர் கைச்சாத்திட்டிருக்கிறார். இது சர்ச்சைப்படுவதற்குரிய விடயமல்ல என்று தெரிவித்தார்.

குழுவில் இல்லாத ஒருவர் ஒப்பமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறதே என்று கேட்டதற்கு, நான் குழுவின் அங்கத்தவராகக் கையொப்பமிட வில்லை. வழமையாக குழுவின் செயலாளர்கள் ஒப்பமிடுகின்ற விதத்திலேயே நான் கைச்சாத்திட்டிருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. எனும் கடவுளும் மனித உரிமை எனும் மதமும்

• பியாஸ் முஹம்மத்

கருதினால் மல்கம் ரஞ்சித்தின் ஞாயிறு உரை புதிய பல பொருள்கோடல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஜாஅல தேவாலயத்தில் அவர் ஆற்றிய உரையில், மேற்குலகின் புதிய மதமாக மனித உரிமை மாறியிருக்கிறது. இந்த மனித உரிமைகள் இன்று நேற்று வந்தவை. எமது நாட்டு மக்கள் பல வருடங்களுக்கு முன்பிருந்தே மதங்களைப் பின்பற்றி வருகிறார்கள் எனக் கூறியுள்ளார்.

கருதினாலின் இந்தக் கூற்றுக்கு அரசாங்கத்தின் அமைச்சர் மங்கள சமரவீர காட்டமாகப் பதிலளித்திருந்தார். அவர் மட்டுமல்ல, காமினி வியங்கொட, ஜனரஞ்சன, நீல் கிறிஸ்டோபர் எனப் பலரும் கருதினாலின் கருத்துக்கு எதிராக, சில நேரம் அதனையும் தாண்டி கருதினாலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்கள். கருதினால் சொன்ன புதிய மதத்துக்கு எத்தனை ஆதரவுப் புலம் இங்கே இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் இந்தக் கூப்பாடுகள் அமைந்திருந்தன.

கருதினாலின் கருத்துக்கு எதிராகப் பேசுபவர்களின் கருத்துப்படி மனித உரிமைகள் தொடர்பிலான மதங்களின் தோல்வியே மதங்களை விட்டு மனித உரிமையை மேலாகக் கருதும் நிலைக்கு உலகத்தைத் தள்ளி இருக்கிறது. கடந்த காலங்களில் மதத்தின் பெயரால் நடந்த சிலுவைப் போரினால் மனித உரிமைகளையும் மீறி பல படுகொலைகள் மனித சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. புதிய கருத்துக்களையும் கண்டு பிடிப்புக்களையும் வெளியிட்ட ஆராய்ச்சியாளர்கள் கிறிஸ்தவ திருச்சபைகளினால் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு உள்ளானார்கள். சிலர் கொல்லப்பட்டார்கள். கலீலியோவும் ஆகிமிடீஸும் இதற்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளப்பட்டார்கள். இப்படிப் பல காரணங்களினால் கிறிஸ்தவ மதத்தை மனித உரிமையை மீறும் மதமாக ஏற்க வேண்டிய நிலை தோன்றியது.

யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையில் மதங்களின் செல்வாக்கு அதிகரிக்காத வண்ணம் கலகொட அத்தே ஞானசாரர் செயற்பட்டார். பௌத்த மதத்தை மனித உரிமைகளை மதிக்காத மதமாக எடுத்துக் காட்டுவதில் அவர் தன்னையே உதாரண புருஷராக அவதரிக்கச் செய்தார். பௌத்த மதத் தலைவர்கள் கூட மதத்தின் பெயரால் மனித உரிமைகளை மீறும் நிலைக்குச் செல்கின்றன என்பதனை உலகுக்கு எடுத்துக் காட்டினார்.

தனது இனத்தை முன்னிலைப்படுத்துவதில் மனித உரிமைகளை மதிக்க வேண்டியதில்லை என்பதை உள்ளங்களில் பதிய வைத்தார். மதம் என்று வரும் போது மதத்தைக் காப்பதில் கரிசனை செலுத்த வேண்டுமேயன்றி மனித உரிமைகளை எல்லாம் பொருட்படுத்த வேண்டியதில்லை என்ற நிலைக்கு இலங்கைச் சமூகத்தின் மனோபாவத்தை வடிவமைத்தார்.

இப்பொழுது இந்து மதம் இந்தத் தொடரில் இணைந்திருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் இயங்குகின்ற சிவசேனா அமைப்பு மலையகத்திலும் கால்பதித்திருக்கிறது. ஏனைய எந்த இனத்தை மிதித்தேனும் தன்னுடைய இனத்துக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்ளும் சித்தாந்தத்தை அது நடைமுறைப்படுத்துகிறது. இந்த வகையில் சில இடங்களில் பௌத்தத் தீவிரவாதமும் இந்துத்துவா தீவிரவாதமும் கைகோர்த்துச் செயற்படுகின்றன. இதனூடாக அவை மதங்களுக்கு இருக்கின்ற பெறுமானங்களை சிதைத்து வருகின்றன.



இவை அனைத்தும் கருதினால் கூறுகின்ற மேற்குலகின் புதிய மதத்தை இறக்குமதி செய்வதற்கான முன்னேற்பாடுகளாக அமைந்துள்ளன. மேற்குலகின் தத்துவவியலாளரான இமானுவேல் கான்ட் சொல்லுகின்ற உலக அளவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய பண்பாட்டொழுங்கொன்று இருக்க வேண்டும் என்ற கருத்தே தற்பொழுது நடைமுறைக்கு வருகிறது. ஒரே ஒரு உண்மை (there is only one truth) என்ற மேற்கின் கோட்பாட்டைத்தான் உலகளாவிய முறைமையாக உலகில் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கான்ட் உடைய தத்துவத்தின்படி விளைவை வைத்து நன்மையையும் தீமையையும் தீர்மானிப்பதை விட (teleology) விளைவு எதுவாக இருந்தாலும் அதனை நடத்தி முடிப்பதே நன்மையாக அமையும் என்ற அடிப்படையில் நன்மையையும் தீமையையும் தீர்மானிக்கின்ற முறைமை (deontology) ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும். அதாவது விளைவு எப்படி அமைந்தாலும் குறித்த விடயத்தை செய்து முடிப்பது தான் சிறந்தது என்றிருந்தால் அதனை நடத்தி முடிப்பது தான் நன்மையாகும்.

நவீன அரசியல் கோட்பாடுகளின் கையேடாகக் கருதப்படுகின்ற ஜோன் ரோல்ஸின் A theory of Justice *(1971)* கான்ட்டின் பண்பாட்டுச் சித்தாந்தங்களின் அடியொட்டியே வரையப்பட்டிருக்கின்றன. இதன் அடிப்படையில் உலகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய நன்மை பற்றிய, நேர்மை பற்றிய, உரிமைகள் பற்றிய பிரகடனங்களை வரைந்து கொள்வதற்கு உல குக்கு இயலுமாகிறது. இது தான் இன் றைய மனித உரிமைப் பிரகடனங்கள் வரையப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

காலத்துக்குக் காலம் மனித சமுதாயத்தில் பாதிப்புக்குள்ளாக்கியவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையில் நடக்கின்ற மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் அடைந்துகொள்கின்ற குறிப்பிடத்தக்க வெற்றியாகவே மனித உரிமை பார்க்கப்படுகின்றது. தொழிலாளர் தினத்துக்குக் காரணமாக அமைந்த தொழிலாளர் போராட்டம் அதுவரை செல்வாக்குச் செலுத்திய மதங்களுக்கு எதிராகப் போராடிப் பெற்றுக் கொண்ட மனித உரிமையாகக் கருதப்படுகிறது.

இன்று மனித உரிமை என்பது பால் சமத்துவத்தையும் தாண்டி LGBT எனும் ஒரு பால் புணர்ச்சியில் ஈடுபடுபவரையும் கூட நெகிழ்வுத் தன்மையுடன் பார்க்கும் அளவுக்கு ஐரோப்பியக் கலாச்சாரம் வளர்ந்திருக்கிக்கிறது என நீல் கிறிஸ்டோபர் எடுத்துரைக்கிறார். இப்படியான தொரு கலாச்சாரம் இலங்கையிலும் வளர்ந்து வரும் நிலையில் தான் கருதினால் மல்கம் ரஞ்சித் மதங்களுக்காகக் குரல் கொடுத்திருக்கிறார். இதற்கு முன்னர் சட்டவிரோத கருக்கலைப்பினை சட்ட ரீதியானதாக மாற்றுவதற்கு எடுத்த முயற்சியின் போதும் கருதினால் அவர்கள் குரல் கொடுத்தார். அப்போதும் அவருக்கு எதிராக சரமாரியான விமர்சனங்கள் எழுந்தன. அதேபோல இன்னொரு சந்தர்ப்பத்தில் சமூகச் சீரழிவுக்கு பிள்ளைகள் சமயக் கல்வியில் இருந்து தூரமாகியதே காரணம் என அவர் தெரிவித்திருந்தமையும் பலத்த விமர்சனத்துக்குள்ளாகியது.

ஜாஅலவில் கருதினால் நடத்திய ஞாயிறு உரையில் அவர் மேலும் கூறும் போது, மதங்கள் அற்ற சமூகமொன்றைப் பற்றிப் பலரும் இப்போது பேசுகிறார்கள். மதங்கள் அற்ற சமுதாயமொன்று கிடையாது. நாங்கள் மதங்களைச் சரியாகப் பின்பற்றினால் அங்கு மனித உரிமை பற்றிய பேச்சுக்கே இடம் கிடையாது. மதங்களைப் பின்பற்றாதவர்களே மனித உரிமை பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறியிருந்தார்.

மதம் குறித்த இவருடைய பேச்சுக்குக் கிடைத்த எதிர்ப்பிலிருந்து தற்போது இலங்கையிலும் மதம் சவாலை எதிர் கொள்ளும் நிலைக்கு வந்திருக்கிறது என்பது புலனாகிறது. உலகின் அனைத்து மதங்களையும் ஓரங்கட்டி விட்டு, உலகப் பொது மதமாக மனித உரிமைகள் என்பதனை ஐ.நா. எனும் கடவுளால் உலகெங்கும் பரப்பப்பட்டு வருகிறது. நாடுகளில் இருக்கின்ற மதங்களுக்குப் பகரமாக புதிய மனித உரிமை மதம் பிரதியீடு செய்யப்படுகிறது. பௌத்த இந்துத் தீவிர வாதங்கள் தமது மதங்களை இதற்குத் தாரை வார்த்துவிட்டன. கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாத்துக் கொள்ள கருதினால் குரல் கொடுத்து வருகின்றார். இனி இஸ்லாமிய மதத்தின் நிலை என்ன ?

ஷரீஆச் சட்டத்தின் மூலம் அரச அதிகாரத்தை நடத்திச் செல்லும் சமூகங்கள் தனிமனித சுதந்திரத்தை அலட்சியப்படுத்துகின்றன. இதில் முஸ்லிம்களின் விசுவாசத்துக்கு மாற்றமான உலக நீதியும் நியதியும் எந்தப் பெறுமானமும் இன்றிப் புறக்கணிக்கப்படுகின்றன. இது இறுதியில் மனித உரிமைகளைக் கணக்கிலெடுக்காத ஒரு நிலைக்கு இட்டுச் செல்லும் என அமெரிக்காவின் கோர்னேல் பல்கலைக்கழகத்தின் ஆசியக் கல்வித் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பண்டார ஹேரத் தெரிவிக்கின்றார்.

எனவே இஸ்லாத்தையும் மனித உரிமைகளுக்கு எதிரான மதமாகக் காட்டுவதற்கான முயற்சிகள் நாட்டிலே நடந்தேறுகின்றன. நாட்டில் நிலவுகின்ற நான்கு மதங்களையும் மனித உரிமைகளுக்கு எதிரான மதங்களாக சித்திரித்துக் காட்ட முடிந்தால் மதங்களுக்குரிய முன்னுரிமைகள் நீக்கப்பட்டு கருதினால் கூறிய புதிய மதமான மனித உரிமைகள் அந்த இடத்தைப் பிடிக்கும்.

இந்த நிலைமைக்கு இஸ்லாம் மதத்தையும் ஆளாக்குவதற்கு தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவே தெரிகிறது. தற்பொழுது அதிகம் பேசப்படுகின்ற முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த முன்மொழிவுகள் இதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பு இருக்கிறது. இளவயதுத் திருமணம், காதி மற்றும் ஏனைய விடயங்களில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுதல், தான் விரும்பியவரை திருமணம் முடிப்பதில் பெண்ணுக்கு நடக்கின்ற உரிமைத் துஷ்பிரயோகங்கள் எனப் பல காரணங்களைக் காட்டி இஸ்லாமிய சட்டங்கள் மனித உரிமையை மீறும் வகையில் அமைந்துள்ளன என்று கருத்துருவாக்கம் செய்யப்பட முடியும். தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் எந்தத் தரப்பு வெற்றி பெறும் என்ற விவாதமும் தமது தரப்பினை வெற்றி கொள்ளச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களும் இப்படியே மேலோங்கிச் சென்றால் முஸ்லிம் சமூகம் முஸ்லிம் தனியார் சட்டத்தை மட்டுமன்றி இஸ்லாத்தையே இழந்து புதிய மதத்திடம் மண்டியிட நேரிடலாம்.

இந்த நேரத்தில் மதத்தைப் பாதுகாப்பதற்காக கருதினால் மல்கம் ரஞ்சித் எழுப்புகின்ற குரலோடு ஒத்தூதுவதும் கூட சிந்திக்க முடியுமானதாக அமையலாம்.

# சரியானதை நிலைநாட்ட பிழையான வழிமுறை சரிதானா

• அஜ்மல் மொஹிடீன்

இருநூறுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட திருத்த ஆணைகுழுவின் அறிக்கை தொடர்பாக வெளிவருகின்ற அறிக்கைகள், அதற்கான தீர்வு காணப்படும் முறையின் முறையீனங்கள் தொடர்பாக இங்கு சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இக்கருத்துக்கள் ஒரு பக்க சிபார்சுகளை நியாயப்படுத்துவதற்கானது அல்ல.

இருநூறு பக்கத்திற்கு மேற்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையில் ஒன்றாக கையெழுத்திட்டு, ஒரு சில அதாவது சுமார் 10 விடயங்களில் மட்டும் வேறுபட்ட சிபார்சுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் இரண்டாகப் பிரிந்து அச்சிபார்சுகளுக்கு கையெழுத்து சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக் குழுவின் அறிக்கையில், ஒரு பிரிவினரின் அறிக்கைதான் ஷரீஆவிற்குப் பொருத்தமானது, மற்ற பிரிவினரின் அறிக்கை ஷரீஆவிற்கு முரணானது என மக்கள் முன் விளக்கமளிக்கப்படுகின்றது.

இதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இடம் நடுநிலை பேணி முழு சமூகத்தையும் ஒற்றுமையாக்கி ஒழுங்குபடுத்த வேண்டிய தளமான பள்ளிவாசல்களும், மிம்பர் ஆசனங்களும். மிம்பரில் ஏறி நின்று கூறப்படும் ஜும்ஆ உரைகளானது, பிரசாரங்கள் அல்ல, சமூகத்தை நோக்கிய பிரகடனங்கள். அவ்வாறான ஜும்ஆ பிரகடனங்கள் ஒரு பிரிவு சார்ந்ததாகவோ ஒரு ஜமாஅத் சார்ந்ததாகவோ இருக்கக் கூடாது.

இங்கு எந்த பிரிவின் சிபார்சுகள் சரியானது என்பதை நிலைநாட்ட பிழையான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றமை கவலையானதும், கண்டனத்துக்குரியது மாகும். சரியானது என்பதை நிலைநாட்ட பிழையான வழிமுறையை கையாள்வதென்பது சரியானதுதானா?

அவ்வாறு பிழையான வழியில் ஒரு பிரிவின் சிபார்சுகளை சரியானது என நிலைநாட்ட முயற்சிப்பதன் மூலம், அத்தகைய சிபார்சுகளை பலவீனப்படுத்துவதாகவே அமையுமே தவிர வலுவூட்டாது.

எந்த பிரிவினரது சிபார்சுகள் சரியானது என்பது சாதாரண மக்களுக்கு தெரிந்ததல்ல, ஆனால் சரியானது இதுதான் என மக்கள் முன் தெளிவுபடுத்த சரியானதும், நீதியானதுமான வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.



சமூகத்தின் சாதாரண பொதுவான ஒரு உறுப்பினர் என்ற அடிப் படையில் நாம் புரிந்து கொள்வது, இரண்டாகப் பிரிந்து நிற்கும் குழுக்களின் அங்கத்தவர்களது கல்வி, கௌரவம், பட்டம், அனுபவம், சமூகப் பொறுப்பு என்பன சமூகத்தால் மதிப்பளிக்கப்பட வேண்டியவை. சமூகத்தின் முக்கியமான பொறுப்புக்களில், பல்வேறு சமூக கடமைகளில் இருப்பவர்கள் அதற்குரிய கண்ணியமும், மதிப்பும் கொடுக்கப்பட வேண்டும்.

ஒரு பிரிவினர் முற்று முழுதாக இலங்கையில் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையினர் *(99%)* பின்பற்றும் ஷாபி மத்ஹப் என்ற நிலைப்பட்டில் நின்று அந்த மத்ஹபுக்கு வெளியில் செல்லாமல் அதன் வரையறைக்குள் இறுக்கமாக இருந்து சிபார்சுகளை முன்வைத்துள்ளனர்.

மற்றப் பிரிவினர் ஒரு மத்ஹப் என்ற நிலைப்பாட்டிட்குள் மட்டும் என்று நில்லாது, தற்போது அமுலில் உள்ள சட்டத்தின் குறைபாடுகளால், நடைமுறையில் சமூகம் சந்திக்க நேரிட்ட பிரச்சினைகள், பெண்கள் அதிகமாக பாதிக்கப்பட்டமை, காதி நீதிமன்றங்களின் நடைமுறை குறைபாடுகள், [illegible] தேறிய நிகாஹ், அவை இடையில் பிரிந்தமையால் பெண் சட்டரீதியாக தனது இழப்புக்களை பெற முடியாதிருந்தமை, பதியப்படாது நடந்தேறிய நிகாஹ் மூலமான குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் பதிவு செய்வதில் ஏற்படும் சிக்கல்கள், பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்தலின் பேரில் பெற்றோரால் செய்து வைக்கப்பட்ட கட்டாய திருமணங்கள் போன்ற விடயங்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டு தமது சிபார்சுகளை அடுத்த பிரிவினர் முன்வைத்துள்ளனர்.

இங்கே கவனிக்கப்பட வேண்டிய மிக முக்கிய விடயம் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் ஏன் திருத்தப்பட வேண்டும், எத்தகைய குறைபாடுகளினால் சட்டத் திருத்தங்களை வேண்டி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இங்கே ஒரு பிரிவின் குழுவில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர், செயலாளர், உபசெயலாளர் என உலமா சபையின் நிறைவேற்றுக் குழுவின் மிக முக்கிய பதவிநிலை உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருக்கும் போது அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் நிறைவேற்று குழுவோ, அல்லது அதன் கிளைகளோ இந்தப் பிரிவின் சிபார்சுகள்தான் சரியானது, ஷரீஆவிற்கு பொருத்தமானது என்று சமூகத்தின் முன் தெளிவுபடுத்துகின்றார்கள். இது நடுநிலைத் தன்மையானதல்ல.

இலங்கையில் உள்ள பள்ளிவாசல்கள் யாவும் ஜம்மியத்துல் உலமா சபையின் கட்டுப்பாட்டில் அல்லது அவர்களது வழிகாட்டலில்தான் இயங்குகின்றன. எனவே பள்ளிவாசல்களூடாக ஜம்மியதுல் உலமாவின் கிளைகள் தமது செல்வாக்குகளை பயன்படுத்தி ஒரு பிரிவின் சிபார்சுதான் சரியானது, ஷரீஆவிற்கு பொருத்தமானது என பயான்களிலும், ஜும்ஆமாக்களிலும் பிரசாரப்படுத்துவது பிழையான வழிமுறையாகும்,

இதற்கும் மேலாக மக்களுக்கு தெளிவுபடுத்துகிறோம் என்ற பெயரில் பள்ளிவாசல்களில் விசேட பயான்களுக்கு ஏற்பாடு செய்து,அங்கு அடையாள அட்டையைக் கொண்டு வாருங்கள் என்று கூறி ஒரு குறிப்பிட்ட பிரிவின் சிபார்சுகள் தான் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது (Mandate) என கையெழுத்து திரட்டுதல் மிக மோசமான பிழையான வழிமுறையாகும்,

அதே சந்தர்ப்பத்தில் அடுத்த பிரிவினர் சர்வதேச,தேசிய அங்கீகாரம் பெற்ற மனித உரிமைகள், இன்றைய காலத்தில் பேசப்படும் பெண்ணுரிமை, நவீன கால மார்க்க அறிஞர்களது கருத்துக்கள், போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிபார்சுகளை முன்வைத்துள்ளனர். மனித உரிமை, பெண்ணுரிமை, சுதந்திரம் என்பதெல்லாம் இஸ்லாமிய அடிப்படையில் வரையறைக்குட்பட்டவையே,

படைப்பும், பராமரிப்பும் வல்ல அல்லாஹ்வுக்குரிய தென்றால் எமது ஆண், பெண் உரிமைகள், சுதந்திரம் என்பதும் அல்லாஹ்வின் குர்ஆன், றஸூலுல்லாஹ்வின் வழிமுறை என்பவற்றுக்குட்பட்டவைதான், இதில் இரு பிரிவினரும் தெளிவான விளக்கமுடையவர்கள்.

நவீனகால அறிஞர்களது கருத்துக்கள் என்பது பெரும்பாலும் தீர்வுகள் தேவைப்பட்ட காலசூழ்நிலை, இடம், (பக்.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# உறுதியான கொள்கை இல்லாத பொருளாதாரம்

நாடு பொருளாதார நெருக்கடியில் இல்லை என ஆட்சி தொடங்கியதில் இருந்த மக்களுக்கு எடுத்துக் கூற முனைந்தவர்களின் கட்டுப்பாட்டைத் தாண்டி, நாடு நெருக்கடியில் இருக்கின்றது என்ற செய்தியை அடிமட்ட மக்கள் வரை இப்போது உணரத் தலைப்பட்டுள்ளார்கள்.

சமையல் வாயுவின் விலை அதிகரிப்பு சமையலறை வரை பொருளாதார நெருக்கடியை உணர வைத்திருக்கிறது. எரிபொருள் விலை அதிகரிப்பு நாட்டின் அனைத்து மட்ட மக்களையும் இது தொடர்பில் பேச வைத்திருக்கிறது. இவ்வளவு காலமும் மஹிந்த ராஜபக்ஷவின் தலையில் கட்டிவிடப்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்கள் எல்லாம் இப்போது திசைதிருப்பப்பட்டு வருகிறது.

நல்லாட்சி எனச் சொல்லப்பட்ட அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது மஹிந்த ராஜபக்ஷ சூறையாடிய நிதியைத் திரட்டினாலேயே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும் என்றனர். மஹிந்த ராஜபக்ஷ தரப்பிடமிருந்து திருப்பிப் பெற வேண்டிய 1000 மில்லியன் ரூபாவுக்கான தரவுகள் கிடைத்திருக்கின்றன, விரைவில் அவற்றை மீட்டெடுப்போம் எனப் பிரதமர் சூளுரைத்தார். இன்றுவரை மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரிடமிருந்தான எந்த நிதியும் திறைசேரிக்கு வந்து சேரவில்லை. சாதாரணமாக போக்குவரத்துப் பொலிசாரின் தண்டப்பணம் அறிவிடுகின்ற வேலையையாவது இந்த அரசாங்கத்தினால் செய்ய முடியவில்லை.

தற்போது டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்வதை காரணம் காட்டி தனது ராஜபக்ஷ தரப்பு விசுவாசத்தை பிரதமர் காட்டி வருவதாகவே தெரிகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு டொலரின் பெறுமதி அதிகரித்தமையே காரணம் என அவர் பல இடங்களிலும் சொல்லி வருகின்றார். போதாக் குறைக்கு இது இன்னும் பல மாதங்களுக்கு நீடிக்கும் எனவும் அவர் ஆரூடம் தெரிவித்து வருகின்றார்.

இந்தப் போக்கை அவதானிக்கும் போது அடுத்த மாதம் முன்வைக்கப்படப் போகின்ற வரவு செலவுத் திட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ கடன் என பிரதமர் வர்ணிக்கின்ற கடன்சுமைகள் அனைத்தும் டொலரின் பெயரால் மக்களின் தலையில் சுமத்தப்படுவதற்கான வாய்ப்பு வெகுவாகவே இருக்கிறது. உண்மையில் இது மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரைக் காப்பாற்றுவற்கான ஒரு வழியாகவே அமையும். அல்லது மஹிந்த ராஜபக்ஷ கொள்ளை அடித்ததாகச் சொல்லப்படுகின்ற நிதியைத் திரட்டியெடுப்பதில் அரசாங்கம் தனது இயலாமையை ஒத்துக் கொள்ள வேண்டும்.

இவற்றை விடுத்து அரசாங்கத்தின் இயலாமையையும் பலவீனங்களையும் மக்களின் தலையில் சுமத்துவதற்கு முயற்சிப்பது கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடாகும். இதற்கு முக்கிய காரணம் எந்தத் தொலைநோக்கும் இல்லாத, எந்த இலக்கும் இல்லாத தலைவர்களை நாடு தொடர்ந்தும் பெற்றுவருவதுதான். இதுவரையிலான எந்தத் தலைவர்களும் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான நிரந்தரப் பொருளாதாரக் கொள்கையொன்றை வகுக்கவில்லை என்பது நாடு பெற்ற துர்ப்பாக்கியமே.

அண்டை நாடுகளில் மலேஷியா இந்த வகையில் எமக்குச் சிறந்த முன்மாதிரியாக விளங்குகிறது. கடன் எடுக்கும் விடயத்தில் அந்த நாடு பின்பற்றுகின்ற கொள்கைகள் முன்னுதாரணமானவையாக இருக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் கடன் எடுத்து நாட்டை அடகு வைக்கின்ற தலைவராக மலேஷியாவின் தலைவர் இருந்ததில்லை. அதேபோல துருக்கிய ஜனாதிபதியும் தமது மக்களை பொருளாதாரச் சுதந்திரவான்களாக மாற்றிய மைத்து சாதனை படைத்துக் காட்டினார். துருக்கி மக்கள் இப்போது எந்த நாட்டுக்கும் கடனில்லை.

இப்படிப் பல முன்மாதிரிகள் எமக்கு முன்னால் இருக்கின்றன. பாரிய பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்த நாடுகளே அதிலிருந்து தம்மை மீட்டுக் கொள்வதற்காகப் போராடி எழுந்திருக்கின்றன. அதற்கு அந்த மக்களுக்கு சிறந்த திட்டமிடலும் கொள்கையும் கொண்ட தலைவர்கள் கிடைத்திருக்கிறார்கள்.

நமது நாட்டைப் பொறுத்தவரை கடந்த ஆட்சியாளர் கொள்ளையடித்தவற்றை மீட்பது தான் நடப்பு ஆட்சியாளரின் பணியாக தொடர்ந்தும் அமைகிறது. இதனால் நாட்டில் நிதி நெருக்கடி ஏற்படும் போது நாட்டை அடகுவைப்பதைத் தவிர இவர்களுக்கு வேறுவழி தெரிவதில்லை. அடுத்த மாதம் வரவிருக்கின்ற வரவு செலவுத் திட்டம் இதனைத் தான் உணர்த்தப் போகிறது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழிலசார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : sroclwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# இலங்கையின் ஜனநாயகம்: எதிர்நோக்கவிருக்கும் பெரும் சவால்கள்

• பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

நாட்டின் அரசியல் கலந்துரையாடல்கள் தற்போது பின்வரும் இரு கருப்பொருள்கள் மீதே அதிக கவனத்தை குவித்திருக்கின்றன. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் நபர் யார்? அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறும் கட்சி எது?

இவை முக்கியமான கேள்விகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதை விட மிக சீரியசான கேள்வி, எதிர்வரும் காலங்களில் இலங்கையின் ஜனநாயகமயப்படுத்தல் வேலைத் திட்டத்திற்கு நடக்கப் போவது என்ன என்பதாகும்.

2015 ஆட்சி மாற்றத்தில் நேரடிப் பங்காளிகளாக இருந்த அரசியல், சமூக ஆர்வலர்கள் இக்கேள்வியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியிருக்கின்றனர். ஜனநாயகம் மீதான நேரடி தாக்குதல்கள் நடைபெறும் கட்டத்தை நோக்கி இலங்கை நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அறிகுறிகள் அவர்களை இன்னும் கவலையில் ஆழ்த்தியுள்ளன. உளவியல் சுட்டிகளை மையமாக வைத்து நாட்டுப் பிரஜைகளை தேசப்பற்றுள்ளவர், தேசத்துரோகி என்ற இரு வகையில் பிரித்துப் பார்க்கும் அண்மைக்கால அறிக்கைகள் நாசிசத்தின் சிறியதொரு பரிமாணத்தைக் காட்டிநிற்கின்றன.

ஜனநாயக ஆர்வலர்களுக்கான இவ்வபாய எச்சரிக்கை நாடு சில தீவிரமான அரசியல் பிரச்சினைகளுக்குள் இருக்கின்றது என்பதைக் காட்டுகிறது. கடந்த காலங்களில் ஜனநாயகத்தைப் பாதுகாத்தலில், அதன் மறுமலர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பு விடயங்களில் ஈடுபட்ட இலங்கையின் சமூக இயக்கங்களிடமிருக்கும் தாக்கம் செலுத்தும் தேர்வுகள் பற்றிய புதியதொரு கலந்துரையாடலை ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது.

### மூன்று நிறுவனங்கள்

அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் பின்வரும் மூன்று அரசியல் உருவாக்கங்களுக்கு மத்தியில் போட்டி நிலவலாம்: UNP யும் அதன் கூட்டு கட்சிகளும், SLFP யும் அதன் கூட்டு கட்சிகளும், தற்போதைய கூட்டு எதிர்கட்சியும் அதன் கூட்டு கட்சிகளும். ஜனநாயகமயப்படுத்தல் வேலைத் திட்டத்தில் இம் மூன்று நிறுவனங்களும் மிகச் சிறியளவு நேர்மறையான சாத்தியப்பாடுகளையே வழங்க முடியும்.

தற்போதைய பிரதமர் தலைமை தாங்கும் UNP மற்றும் தற்போதைய ஜனாதிபதி தலைமை தாங்கும் SLFP ஆகிய இரண்டும் கடந்த மூன்றரை ஆண்டுகளாக செய்தவை பற்றிப் பார்ப்பது பொருத்தம். பின்வரும் எதிர்மறையான பாடங்களை அது எமக்குக் கூறுகின்றது:

(அ) ஆட்சி மாற்றம் என்பது ஜனநாயக மறுமலர்ச்சிக்கும் ஒருங்கிணைப்புக்கும் போதுமானதாக இல்லை, அது அவற்றுக்கான ஒரு முன்நிபந்தனையாக இருப்பினும் கூட.

(ஆ) அரசியல் கட்சிகளும் தலைவர்களும்- ஜனநாயக சீர்திருத்தம் என்ற வாக்குறுதிகளால் தேர்தல்களில் வென்றவர்கள் கூட- போதியளவு துணிவு, உறுதி பெற்றவர்களாகவோ அல்லது தொடர்ந்தேர்ச்சியான சீர்திருத்தமொன்றை வளர்த்தெடுக்கும் அரசியல் தேவை கொண்டவர்களாகவோ இல்லை.

(இ) ஊழல்களற்ற ஆட்சி, நிலையான ஜனநாயகமயமாக்கல், சமாதானத்தை கட்டியெழுப்பல் போன்ற பகுதிகளில் அரைமனதோடு மேற்கொள்ளப்பட்ட முழுமையற்ற முயற்சிகள் வலதுசாரிக்கும், போதிய மக்கள் ஆதரவு கொண்ட எதேச்சாதிகாரத்திற்குமான அரசியல் தளம் ஒன்றை உருவாக்கியிருக்கின்றன.

UNP மற்றும் SLFP கட்சிகளும் அதன் தலைவர்களும் இலங்கைக்கான சீர்திருத்த வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்பதில் தங்கியிருப்பவர்கள் அல்லர். ஜனநாயக மாற்றத்தின் தலைவன் எனும் நாமத்தை எதிர்காலத்தில் தமக்குச் சூட்டிக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. இவை கசப்பான உண்மைகள். அரசியல் உண்மைகளும்தான். எமது காலத்தின் சில அரசியல் கொடூரங்களையும் கூட அவை உள்ளடக்கிருக்கின்றன.

இன்னும் ஒரு வருடத்தில் அல்லது அதன் பின் அதிகாரத்துக்கு வரத் தயாராகுபவர்கள் எப்படிப்பட்டவர்கள்? கூட்டு எதிர்கட்சி, அதன் புதிய அரசியல் கட்சியான இலங்கை மக்கள் முன்னணி ஆகிய இரு நிறுவனங்களினதும் தலைவர்கள் மற்றும் 2019 இல் பொது ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்குவதை எதிர்பார்த்திருக்கும் ஆதரவாளர்கள் ஒரு விடயத்தை தமக்குள் பகிர்ந்துகொள்கின்றனர்: ஜனநாயக சீர்திருத்த வேலைத்திட்டம் மீதான தம் வெறுப்பு மற்றும் அவமதிப்பு. தற்போது அவர்கள் ஜனநாயகத்துக்குப் பின்னரான மற்றும் மக்கள் ஆதரவு பெற்ற எதேச்சாதிகார அரசியல் மாற்றத்துக்கான மக்கள் ஆணையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளை உருவாக்கி வருகின்றனர். அவர்கள் தம்முடைய இலக்கை அடையவும் முடியும். அவர்களது தேர்தல் வெற்றி - நடந்தால் - ஆரம்பத்தில் நல்லதொரு உணர்வைத் தோற்றுவிக்கும். இலங்கை குடிமக்களுக்கு அதன் அரசியல் பின்னடைவை காட்டி நிற்க குறிப்பிட்டதொரு காலம் எடுக்கலாம்.

அவ்வாறானதொரு ஆட்சி மாற்றம் நிர்வகிக்க முடியாத அரசியல், சமூக முரண்பாடுகள், மென்மேலும் துரிதப்படுத்தப்படும் அரசியல் ஸ்தீரமின்மை, இன -சமூக பிளவுகள் போன்ற மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் ஆட்சியை நிலைக்கச் செய்யவும் சமூக எதிர்ப்பைக் கட்டுப்படுத்தவும் வன்முறையை கட்டாயமான சாதனமாக பயன்படுத்தவும் கூடும். இவ்வகையானதொரு ஆட்சியை அதிகாரத்திலிருந்து கலைப்பது வன்முறை கலந்ததாகவும் இரத்தக்களரியுடையதாகவுமே இருக்கும் என்பதை பல சர்வதேச மாதிரிகள் சுட்டிக் காட்டுகின்றன.




அணியின் பங்குதாரர்களாக மாறிவிடலாம். மிக மோசமான இவ்வாறான நிலைமை, எதிர்க் கட்சியைச் சிதைக்கவும் கட்டுப்படுத்தவும் ஜே.ஆர் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகளை ஓரளவு ஒத்ததாக இருக்க முடியும்.

இச்சாத்தியப்பாட்டை ஏற்படுத்த பல்வேறுபட்ட தேசிய மற்றும் சர்வதேச காரணிகள் துணைசெய்ய முடியும். அவற்றுள் மிக முக்கியமானவை:

(அ) தோற்றம்பெறும் புதிய அரசாங்கத்தின் சீனாவுடனான இறுக்கமான பிணைப்பு, சீன பொருளாதார, அரசியல் மாதிரி மீதான அதன் ஈர்ப்பு, சர்வதேச சந்தையில் தோன்றியிருக்கும் புதிய குழுக்களுடனான அதன் தொடர்பு.

(ஆ) முன்னெப்போதுமில்லாத கடும் பொருளாதார நெருக்கடி சூழலில் அது முன்வைக்கும் துரித பொருளாதார வளர்ச்சித் திட்டம் மற்றும் அதிக கரிசனை கொள்ளும் அரசியல் ஸ்திரநிலை.

(இ) முன்னாள் இராணுவ - சிவில் அதிகாரத்தின் கூட்டாக உருவாகும் எதேச்சாதிகாரம் புதிய அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைத்திட்டங்களை வரையலாம்.

### ஜனநாயக வட்டம்

அண்மைக்கால இலங்கை ஜனநாயகத்தின் ஒரு பக்கமே மேலே கூறிய காட்சி. அதன் இன்னொரு பக்கமிருக்கிறது. ஜனநாயகமென்பது குடிமக்களது அரசியல் அபிலாஷைகள், அர்ப்பணிப்புகள், போராட்டங்கள், ஜனநாயகத்தின் வீழ்ச்சிக்காலம், பின்னடைவுகளின் போதான எதிர்ப்பு, மீளுருவாக்க முயற்சி போன்ற மக்கள் மயப்படுத்தப்பட்டதொரு சமூக இயங்குதளம். இலங்கையின் அண்மைய வரலாற்று அரசியல் மாற்றங்களில் இதுவொரு முக்கிய பரிமாணம். ஜனநாயகத்தை விட்டு பின்வாங்கும் வகையிலான எதேச்சாதிகார இலக்குகள் கொண்டதாக அரசாங்கம் அமையும் போதெல்லாம் எதிர்ப்பு தோற்றம் பெற்று இறுதியில் ஜனநாயகத்தின் பின்னடைவை மிகைக்கும் மறுமலர்ச்சி ஒன்று உருவாகிவிடுகிறது.

ஜனநாயகத்தின் பின்னடைவும், அதனைத் தொடர்ந்த மீளுருவாக்கமும் எனும் தொடரியக்க வட்டம் இலங்கை அரசியல் மாற்றத்தில் நீண்டகால பரிமாணத்தில் நிகழ்ந்தே வந்திருக்கிறது. ஒவ்வொரு குடிமக்கள் பரம்பரையும் இதனை முகம்கொடுக்கவும் அதன் மோசமான விளைவுகளைத் தாங்கிக்கொள்ளவும் நல்ல விளைவுகளை அனுபவிக்கவும் வேண்டியிருக்கிறது.

அதேநேரம், அரசியல் கட்சிகளும் அரசியலை தொழிலாகச் செய்பவர்களும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் போராட்டத்தில் நம்பத்தகுந்தவர்களல்லர் என்ற பாடத்தை 2015 அனுபவம் இலங்கை பிரஜைகளுக்கு கற்றுத் தருகிறது. அவர்களைப் பொறுத்தவரை பொது மக்களது ஜனநாயக ஆசைகளும் அபிலாசைகளும் வெறும் சாதன விழுமியங்களே. தம் தேர்தல் தொகுதி மீதான அவர்களது கவனக்குவிப்பும் நம்பிக்கையும் தற்காலிகமானவையாகவும், சந்தர்ப்பம் சார்ந்தவையாகவும் தியாகம் செய்யக்கூடியவையாகவுமே உள்ளன.

### ஜனநாயகத்தின் வாழ்வு

UNP மற்றும் SLFP ஆகிய இரு கட்சிகளும் புதிய அரசாங்கத்தின் பின் - ஜனநாயக அரசியல் வேலைத்திட்டத்தில் மிகவும் பலவீனமடைந்த நிலையில் - எதிர்க்கட்சியாக - இருப்பின் ஜனநாயகத்தின் வாழ்வு மிகவும் சவால் மிக்கதாகவே இருக்கும். தெற்கில் JNP வடக்கில் ஓரிரண்டு தமிழ் கட்சிகள் தவிர ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் மிரட்டல்களுக்கு அடிபணிந்து, புதிய எதேச்சாதிகார

(ஈ) ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து ஜனநாயக பின்னடைவை தடுத்து நிறுத்தி, அதனை எழுச்சி நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படலாம்.

(உ) தேசிய பாதுகாப்பு அரசாங்கம் எனும் ஆட்சி மாதிரி நோக்கி மீளுதல். இப்பின்னணியில், இலங்கை மாலைத்தீவை ஒத்த, புதியதொரு தோற்றம்பெற சாத்தியமிருக்கிறது.

இலங்கை ஜனநாயக நிறுவனங்கள் பின்வரும் கேள்விகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளன: 2019 - 2020 தேர்தல்களின் பின் ஜனநாயகம் மிக தீவிரமான பின்னடைவை சந்திப்பது ஊர்ஜிதமாகுமாயின், அதனை மீளுருவாக்கம் செய்வது எவ்வாறு? தவிர்க்க முடியாத அடக்குமுறை சூழலிலும் அணிதிரட்டலுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தலுக்குமான வாயில்கள் மூடப்படும் சூழலிலும் ஜனநாயக சிவில் சமூகம் மற்றும் அரசியல் சமூக தொகுதிகள் தம் வாழ்வை முன்னெடுத்துச் செல்வது எவ்வாறு? மக்கள் ஆதரவுடன் தோற்றம் பெறும் வலதுசாரி, எதேச்சாதிகார ஆட்சியின் நிபந்தனைகளின் கீழ் ஜனநாயக இயக்கங்களது மீளுருவாக்கம் எவ்வாறு சாத்தியமாகும்?

### ஜனநாயகத்தின் பாதுகாப்பு

மாலைத்தீவை ஒத்த ஒரு நாடாக இலங்கை உருவாக்கப்பட்டுவிடாமல் இருக்க, எமது சமூகத்தில் இருக்கும் ஜனநாயக பாதுகாப்புகளைப் பலப்படுத்தி, 'கட்டியெழுப்புவதே முடியுமான ஏக வழியாக இருக்கக்கூடும். ஜனநாயக நிறுவனங்களான அரசியல் கட்சிகளது வீழ்ச்சி, நாட்டு பிரஜைகள் மீதும் அவர்களது சுயாதீனமான அணிதிரட்டல் மீதும் பொறுப்புக்களை சுமத்திவிடுகிறது.

எதிர்த்தியங்கும் கலாச்சாரம் இலங்கை சமூகத்தின் நிரந்தர அரசியல் பண்புகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. சமூகத்தின் ஜனநாயக மையத்தை வடிவமைக்கக் கூடிய செயற்பாட்டுக் குழுக்களால் எதிர்த்தியங்கும் நடைமுறை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது. இலங்கை ஜனநாயக சிவில் சமூகத்தையும் அவர்களே ஒழுங்குபடுத்தினர். சிவில் சமூக ஈடுபாடு பின்வரும் அரசியல் பண்புகள் கொண்டிருந்தன:

(அ) ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகும் போதெல்லாம் அதனைப் பாதுகாத்தல்.

(ஆ) சிவில் எதிர்ப்பை தோற்றுவித்தல்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (CTA)

# யாருடைய தேவை? யாரை இலக்கு வைக்கின்றது?

• ஷகீப் அர்ஸலான்

முஸ்லிம்கள் -குறிப்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் சிவில் அமைப்புகளும் முஸ்லிம்-விவாக விவாகரத்து திருத்தச் சட்டம் தொடர்பில் வேண்டாத விவாதங்களிலும் விடாப் பிடிகளிலும் வீழ்ந்து நேரத்தையும் முயற்சிகளையும் வீணடித்துக் கொண்டிருக்கின்ற ஒரு தருணத்தில் பாராளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் யாரை நம்பியிருக்கிறார்களோ அத்தகைய தானைத் தளபதிகளோ தனித்துவத் தலைவர்களோ ஏறெடுத்துப் பார்க்காத நிலையில் குருட்டு ஆன்மீகத்தில் மூழ்கித் திழைத்திருக்கும் ஆலிம்கள் இது குறித்து கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்.

கடந்த ஆண்டில் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் 'உரிமைகள்' எனும் பத்தி எழுதும் ஒருவர், இச்சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றினால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிறைவேற்றப்பட்ட மிக மோசமான சட்டம் நல்லாட்சியிலேயே நிறைவேற்றப்பட்டது என்ற களங்கத்தை வரலாற்றில் பதித்துக் கொள்வார்கள் என்று எழுதினார்.

இப்போது அவரது ஆதங்கத்தைக் கடந்து சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. 30 ஆண்டு காலமாக அமுலில் இருந்து வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) மாற்றீடாகவே இப் புதிய சட்டம் நிறைவேற்றப்படுகின்றது.

1970 களின் முதற் கூறுகளில் தற்காலிக எனும் அடைப்புக் குறியுடன் பயங்கரவாத தடைச் சட்டம் ஆசியாவின் அதிபுத்திசாலி என்று அறியப்பட்ட, கிறிஸ்தவத்திலிருந்து அரசியல் அதிகாரத்திற்காக மதம் மாறிய ஜூனியரிச்சட் ஜயவர்தனவினால் கொண்டு வரப்பட்டது. 3 தசாப்தங்கள் பாதுகாப்பு என்ற பெயரிலும் பயங்கரவாதத்தை அழித்தல் என்ற பெயரிலும் ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கிய அச்சட்டம் கருத்துச் சுதந்திரத்தின் குரல் வளையை கொடூரமாக நசுக்கியது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த சிங்களம் பேசத் தெரியாத தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படவும் புலி ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்படவும் சிங்கள அதிகார வர்க்கத்தால் அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அரசியல் கைதிகள் என்ற பெயரில் இன்று களுத்துறையிலும் பிற சிறைச்சாலைகளிலும் அடைபட்டுக் கிடக்கின்ற தமிழ் கைதிகள் பெரும்பான்மையானவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களே.

பொதுவாக, சமீபத்திய அனுபவங்களின்படி ஒரு நாட்டில் இயற்றப்படும் பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள் எதுவுமே அந்நாட்டின் பொதுவான குற்றவியல் சட்டக் கோவைகளுக்கு உட்படுவதில்லை. சாதாரண சிவில் நீதிமன்ற விசாரணை முறைகளுக்கும் உட்படுவதில்லை. கேள்வி பார்வையின்றி சந்தேகத்தின் பெயரில் யாரையும் எந்த நேரத்திலும் நீதிமன்றத்தின் பிடியாணையின்றியே கைதுசெய்வதற்கான அதிகாரத்தை அது பொலிஸாருக்கு வழங்குகின்றது.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஏற்கனவே அமுலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றீடாகக் கொண்டு வரப்படுவதன் பின்னணி என்ன? இந்தக் கேள்வி மிகவும் முக்கியமானது. வெளிநாடுகளில் வாழும் தமிழ் டயஸ்பொரா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா போன்றவற்றினூடாக இலங்கை அரசின் மீது -குறிப்பாக ரணில்-மைத்திரி நல்லாட்சி அரசின் மீது தொடர்ச்சியாகப் பிரயோகித்த அழுத்தங்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசாங்கத்திற்கான ஆதரவு என்பவற்றின் பின்புலத்திலேயே சட்டம் மாற்றத்திற்கு உள்ளாகின்றது. அதாவது, தடைச் சட்டத்திற்குப் பகரமாக எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது.


இதன் மூலம் தமிழ் பிரஜை ஒருவர் இனிமேல் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமலாக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான சட்டத்தரணி சுமந்திரன் புதிய பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் குறித்து தமிழ் மக்களை ஆறுதல்படுத்திய போது, ''தமிழர்கள் இதற்கு அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில், இது தமிழர்களுக்கு எதிரானதல்ல'' என்கிறார்.

இலங்கை பெரும்பான்மை பௌத்தர்களைக் கொண்ட நாடு. போருக்குப் பின்னர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் தம்முடன் கொண்டு வந்த ஆயுதங்களை கள்ளச் சந்தையில் விற்பனை செய்துள்ளனர். அன்றாடம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் கொலைகளும் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன. பெரும்பான்மை இளைஞர்களிடம் குறிப்பிடத்தக்களவு ஆயுதங்கள் உள்ளன என்பது கண்கூடு.

ஆனால், அவை எதுவும் பயங்கரவாதச் செயலாகப் பார்க்கப்படுவதில்லை. அதனால் நிறைவேற்றப்பட்டுள்ள பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் சிங்கள இளைஞர்களையோ சிவில் சமூகத்தையோ இலக்கு வைக்கவில்லை என்பதும் தெளிவானது. அவ்வாறாயின் இது யாரை இலக்கு வைக்கின்றது எனும் கேள்வி முக்கியமானது.

இந்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தவர் வெளிநாட்டு அமைச்சர் திலக் மாரப்பன. இதில் சில மாற்றங்கள் வேண்டும் என்று கோரிக்கை விடுத்தவர்களுள் ஒருவர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க. கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு மதவாதத்தின் பின்னணியில் ஜாதிக ஹெல உறுமய கட்சியைத் தொடங்கியவர். அல் காயிதா அல் ஜிஹாத் நூலின் ஆசிரியர்.

அடுத்தவர் பாராளுமன்றத்தில் நீதியமைச்சராக இருந்த போதே அப்பட்டமாக இஸ்லாமிய அடிப்படைவாதம் இலங்கையில் உள்ளதென்று வாதிட்டவர். இவர்கள் இருவரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கோரியுள்ளமை மிகுந்த சந்தேகத்தைக் கிளறுகின்றது.




2009 இறுதிக் கட்டப் போரில் புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. இனி இலங்கையில் யாரும் சிறுபான்மை இல்லை என்று அறிவித்தார் மஹிந்த. உண்மையும் அதுதான். போருக்குப் பின்னர் வடமாகாணத்தின் முழுக் கரையோரங்களும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகள் மீளவும் தலையெடுப்பதற்கு இங்கு வாய்ப்பே இல்லை. தமிழ் இளைஞர்களை தேசிய உணர்விலிருந்து திசை திருப்பும் பல சதிக் கோட்பாடுகள் வடக்கில் அமுல்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் தமிழ் சமூகத்திலிருந்து பிரிவினை கோரும் அல்லது ஆயுதமேந்தும் பயங்கரவாதம் மீளெழுச்சி பெற எந்த வாய்ப்பும் இல்லை.

இந்நிலையிலேயே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்டது. அப்படியென்றால் இது யாருடைய தேவைக்காக நிறைவேற்றப்படுகிறது? 2001 இற்குப் பின்னர் உலகளவில் முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாம் குறித்து யூத-சியோனிஸ பூகோள வலைப் பின்னல் உருவாக்கி வரும் இஸ்லாமிய பீதியை உலகமயமாக்கி, அந்தப் பூச்சாண்டியிலிருந்து முஸ்லிம் அல்லாத அரசுகளைக் காப்பாற்ற அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து நாடுகளிலும் இதுபோன்ற சட்டங்களை நிறைவேற்றுமாறு வொஷிங்டன் வற்புறுத்தி வருகின்றது.

அத்தகைய அரசியல் நிர்ப்பந்தத்திற்கு இலங்கை போன்ற அரசாங்கங்கள் கட்டுப்படுவதற்கும் காரணங்கள் உண்டு. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடமிருந்து அரசாங்கம் பெறும் பெருந்தொகைக் கடனுக்கு கைமாறாக இது போன்ற பொருத்தமற்ற அனாவசியமான அரசியல் செயற்பாடுகளில் அரசாங்கம் இறங்குவது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. மாற்றத்தைக் கோரியுள்ள விஜயதாச மரண தண்டனைக்குப் பதிலான ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

சாதாரண குற்றச் செயல்களை விசாரணை செய்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும் இலங்கையிலுள்ள குற்றவியல் சட்டக் கோவை (Penal Code) போதுமானது. கொலைக் குற்றங்களை பயங்கரவாதச் செயல்களுடன் முடிச்சுப் போடுவதன் அதன் பின்புலம் என்ன? விவாதிக்கப்பட்டு வந்த இந்தச் சட்டத்தில் முற்போக்கான சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சிலர் வாதிக்கின்றனர். ஆனால், அது ஏற்புடையதல்ல.

சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்படுபவரின் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாத குற்றச் செயல் குறித்த விசாரணைகளை முன்னெடுக்கலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த சட்டம் தற்போது அத்தகைய ஒப்புதல் வாக்கு மூலமொன்றை வைத்துத் தீர்ப்பளிக்க முடியாது என்று திருத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால், இவையெல்லாம் வெறும் கண்துடைப்பு.

கருத்துச் சுதந்திரத்தையும் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் அரசின் மீதான விமர்சன உரிமையையும் முற்றாகவே கேள்விக்குள்ளாக்கும் இத்தகைய சட்டம் சர்வதேச பின்புலமொன்றில் உருவாக்கப்பட்டுள்ளதால் முஸ்லிம்கள்தான் இங்கு இலக்கு வைக்கப்படுகின்றார்களா என்ற சந்தேகம் வலுவாக எழுகின்றது.

நல்லாட்சி என்ற வெற்றுக் கோஷத்தோடு அதிகாரத்திற்கு வந்த அரசாங்கம் கொண்டு வரும் ஒவ்வொரு சட்டங்களும் (மாகாண எல்லை நிர்ணயம், தேர்தல் முறை மாற்றம், அரசியலமைப்பு மாற்றம்) முஸ்லிம் சிறுபான்மையின் நலன்களுக்கு எதிராகவே உள்ளது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்று இலங்கைக்கு அவசியமில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் முகவர்கள் ஊழல் மோசடிகளோடு தொடர்புற்றிருப்பதனால் தான் நாட்டில் குற்றச் செயல்கள் பெருகிச் செல்கின்றன.

இந்நிலையில் நிறைவேற்றப்படும் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை அடுத்த கட்டம் அதிகாரத்திற்கு வரும் அரசாங்கங்கள் எவ்வாறெல்லாம் துஷ்பிரயோகம் செய்யப் போகின்றது என்பதை ஊகிப்பது கடினமாயினும், இதன் விளைவுகள் முஸ்லிம்களையே அதிகம் பாதிக்கும் என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

எமது அரசியல் வாதிகள் இது குறித்து சிந்திப்பார்களா?

# விமானம் போல் ஏறும் வாழ்க்கைச் செலவீனம்

# எந்த அரசாங்கம் வந்தாலும் இதே கதிதானா?


2015 ஆட்சி மாற்றத்தின் அடிப்படையாக இருந்தது சர்வதிகாரம் மட்டுமல்ல. மக்களின் வாழ்க்கைச் செலவீனம் குறைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பலமாக இருந்தது. ஆயினும், கடந்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்து வந்த வாழ்க்கைச் செலவீனம் இன்று விமானம் போல் ஏறிச் செல்கின்றது.

இந்த வருடத்தில் எரிவாயுவின் விலை இரண்டு முறையும் பேருந்துக் கட்டணம் மூன்று முறையும் எரிபொருளின் விலை மூன்று முறையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுள் ஒன்றான பால்மாவின் விலை எந்த அறிவித்தலுமின்றியே 25 ரூபாவினால் அதிகரித்தது.

இலங்கையின் நாணய வரலாற்றில் என்றென்றைக்கும் இல்லாதவாறு டொலரின் பெறுமதி 172 ரூபாவாக அதிகரித்ததனால் ரூபாய் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. பணவீக்கம் அதிகரித்துள்ளதால் வாழ்க்கைச் செலவீனம் இயல்பாகவே உயர்ந்து வருகின்றது.

உலக சந்தையில் பெற்றோலிய விலை அதிகரித்ததனாலும் ஈரானின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டமையினாலுமே இலங்கை சடுதியான பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டு வருவதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஊடகவியலாளர்களை அமைதிப்படுத்துகிறார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற பல ஊடக சந்திப்பின்போது ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளும் வகைதொகையற்ற வெளிநாட்டுக் கடன்களுமே நாட்டைக் குட்டிச் சுவராக்கியது என்று ராஜித கூறி வந்தார்.




ஆனால், நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து பொருளாதாரத்தை முன்கொண்டு செல்வதில் எதிர்கொண்ட திணறலை மக்கள் நன்கு அறிவர். நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ராஜபக்ஷவின் அதே பழைய பாதையையே ரணில் அரசாங்கமும் தேர்ந்தெடுத்தது. 9000 பில்லியனுக்கு அதிக மாக இருந்த ராஜபக்ஷ யுக வெளிநாட்டுக் கடன் தொகையை தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் 11000 பில்லியனுக்கு அதிகமான தொகையாக மாற்றியுள்ளது. அதுதான் இந்த அரசாங்கத்தின் பெரும் சாதனை.

என்டபிரைஸ் சிறி லங்கா போன்ற கவர்ச்சிகரமான சுலோகங்களை ரணில் அரசியல் மேடைகளில் பொரிந்து தள்ளுகிறார். வரட்சி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களால் பொருளா தாரம் பெருமளவு சரிந்துள்ளது. நிலையான பேண்தகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட தெளிவாக பொருளாதாரக் கொள்கையொன்று இலங்கைக்கு இல்லை என்பதை ஒவ்வொரு அரசாங்கமும் நிறுவிக் கொண்டே இருக்கிறது. அதனால் முதலாளிகள் ஊதிக் கொண்டே இருக்க, வறியவர்கள் நலிந்து கொண்டே செல்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் மென்மேலும் சரிவதற்கான வாய்ப்பு உள்ளது என்று பிரதமரே சொல்லி விட்டார். ஆட்சிக்கு வந்தவுடன் எரிவாயுவின் விலையை 250 ரூபாவால் குறைத்த அரசாங்கம் இப்போது பழைய விலைக்கே கொண்டு வந்து விட்டது.

டொலர் பெறுமதி ஏற்றத்தால் இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் விலையும் அதிகரித்துள்ளது. அது மக்களின் தொழில் முயற்சிகளை பாதித்திருப்பதனால் வருமானத்தை விட செலவீனம் அதிகரிக்கும் ஒரு வாழ்க்கை முறைக்கு இலங்கை மக்கள் தள்ளப்படுகின்றனர்.

ஆட்சியாளர்களுக்கு அடிமட்டமக்களின் பிரச்சினைகள் குறித்து ஏதெனும் உணர்வுள்ளதா என்பது புரியவில்லை. ஒன்று மட்டும் உண்மை. மக்களின் நாடித் துடிப்பை புரிந்துகொள்ளாத அதிகார வர்க்கம், தாம் புதையும் குழிகளை தாமே தோண்டிக் கொள்கிறார்கள் என்பதுதான் வரலாறு. அதை எந்த 'நல்லாட்சியால்தான்' மாற்ற முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை இதழ் - 404




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# வேற்றுமையில் ஒற்றுமை: தேவை ஒரு கவனக் குவிப்பு

கடந்த தினம் களனி பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை விரிவுரையாளர் கல்கந்தே தம்மானந்த தேரர் மற்றும் பத்தேகம சமித தேரர் ஆகியோருடன் நீண்ட நேரம் கலந்துரையாடும் வாய்ப்பு கிடைத்தது. இதன்போது கல்கந்தே தம்மானந்த தேரர் என்னிடம் தெரிவித்த விடயமொன்று என் நினைவுக்கு வருகிறது.

இலங்கையிலிருந்து வருடந்தோறும் பெருமளவிலான சிங்கள பக்தர்கள் தம்பதிவ யாத்திரைக்குச் செல்கின்றார்கள். இங்கிருந்து செல்லும் யாத்திரிகர்களுக்கு வழிகாட்டும் சிலர் தம்பதிவ விகாரைகளை முஸ்லிம் மன்னர்களே அழித்திருப்பதாக பொய்யான கதைகளைக் கூறி வருவதாகவும் அது உண்மைக்குப் புறம்பான விடயமென்றும் தெரிவித்திருந்தார்.

அன்றைய காலப்பகுதியில் இருந்த இந்து மன்னர்களே அரசியல் காரணங்களுக்காக வேண்டி விகாரையின் சில பகுதிகளை அழித்திருப்பதாக வரலாறு தொடர்பில் ஆழ்ந்த புலமையுள்ள தம்மானந்த தேரர் எம்மிடம் தெரிவித்திருந்தார். உண்மை நிலை இப்படியிருக்கும் போது இலங்கையிலிருந்து யாத்திரைக்குச் செல்லும் சிங்கள பக்தர்களின் மனதில் முஸ்லிம்களுக்கு எதிராக கோபாவேஷங்களை தூண்டும் வகையில் தொடர்ந்தேர்ச்சியாக கருத்துக்களை தெரிவித்து வருவது எந்தப் பின்னணியின் அடிப்படையில் என்பதனை பொறுப்புவாய்ந்தவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்று உலகம் முழுவதிலும் முஸ்லிம்கள் குறித்த அச்சத்தை ஏற்படுத்தும் இஸ்லாமியப் பீதி islamophobia தொடர்பாக நாம் நிறைய விடயங்களை அறிந்துள்ளோம். இன்று உலகில் மிகப் பெரும் ஊடக வலையமைப்புக்களுடன் தொடர்புபட்டுள்ள ஊடகவியலாளர்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாத்து, அவதானம் மிக்க பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். உலகின் பலம் பொருந்திய அரசியல் சக்திகள், ஊடகங்கள், வர்த்தகர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்படாமல் சத்தியத்திற்காக வேண்டி தம் உயிரை துச்சமாக மதித்து சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவது இன்று ஊடகவியலாளர்களின் முன்னாலுள்ள மிகப்பெரும் சவாலாகும்.

ஊடகவியலாளர்கள் எதிர்கொண்டிருக்கும் இந்தக் சவால்களுக்கு தேச எல்லைகள் கிடையாது. இந்தச் சவால்கள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கும் பொதுவானவை. தேச எல்லைகள் கடந்து இவ்வாறான சவால்களுக்கு முகம்கொடுத்து கூட்டுப் பொறுப்புடன் செயலாற்றுவது ஊடகவியலாளர்களின் சமகாலக் கடமையாகும்.

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா உள்ளிட்ட உலகின் எப்பாகத்திலும் சிறந்த ஆட்சியாளர்களையும் கொடிய ஆட்சியாளர்களையும் வரலாறு நெடுகிலும் கண்டு வருகின்றோம். இங்கு சகல இந்து ஆட்சியாளர்களையும், சகல இஸ்லாமிய ஆட்சியாளர்களையும், சகல கிறிஸ்தவ ஆட்சியாளர்களையும், சகல பௌத்த ஆட்சியாளர்களையும் துஷ்டர்கள் என வகைப்படுத்த முடியாது. எல்லா மதங்களிலும் கொடிய ஆட்சியாளர்கள் இருந்துள்ளார்கள்.

இந்தியாவை ஆட்சி செய்த அசோக மன்னன் துவக்க காலத்தில் கொடுங்கோல் மன்னனாகக் காணப்பட்டார். பிற்பட்ட காலத்திலேயே அவர் மதத்தை காக்கும் அசோகனாக மாற்றம் பெற்றான். இன்று இவரது பெயர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தியாவை ஆண்ட அக்பர் மன்னன் மற்றுமொரு சிறந்த அரசனாவார். பல்மதம், பல்கலாசாரம் நிலவும் சமூகத்தில் அந்நியோன்யமாக நல்லிணக்கத்துடன் வாழ்வது தொடர்பில் அவரவர் மதங்களில் கூறப்பட்டுள்ள நல்ல பண்புகளை கொண்ட வரலாற்றை அலங்கரித்த இத்தகைய மன்னர்கள் தொடர்பில் இன்றளவும் உலகம் பாராட்டி வருகின்றது.

இன்று இந்திய சனத்தொகையில் 80 வீதமான மக்கள் இந்துக்களாகக் காணப்பட்டாலும் இந்திய முஸ்லிம்களின் சனத்தொகையானது உலகில் முஸ்லிம்களின் சனத்தொகை அதிகமாக காணப்படுகின்ற நாடுகளின் பட்டியலில் 3ஆம் இடத்தில் உள்ளது. 14ஆம் நூற்றாண்டில் வங்காளதேஷத்தை ஆட்சி செய்த இஸ்லாமிய Pathan ஆட்சியாளர்கள் சமஸ்கிருத மொழியிலுள்ள மகா பாரதம் மற்றும் இராமாயணத்தை வங்க மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்ததின் மூலம் அறிவை தேடிச் செல்லல் மற்றும் இந்திய கலாசாரம் தொடர்பில் அவர்களிடம் காணப்பட்ட ஆர்வத்தையும் முன்மாதிரியையும் காட்டி நிற்கின்றது.

அறிவைத் தேடுதல் மற்றும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் அன்று காணப்பட்ட சுமுகமான நிலையையும் நாடுகளுக்கிடையில் காணப்பட்ட ஒற்றுமையையும் இந்தச் சம்பவங்கள் எமக்குப் பறைசாற்றுகின்றன. அத்துடன் இந்து வேத இலக்கியத்தில் வரும் உபநிச கிரந்தத்தை 14ஆம் நூற்றாண்டில் தாஜ்மஹாலை கட்டிய ஷாஜஹான் மன்னனினதும் மும்தாஜ் இளவரசியினதும் புதல்வரும் மோகல் இளவரசருமான Para Shikoh பாரசீக மொழிக்கு பெயர்ப்புச் செய்துள்ளார். அந்தக்காலப் பகுதியில் இந்த இலக்கியம் தொடர்பில் புத்திஜீவிகளின் அவதானம் குவிவதற்கும் இந்த மொழிபெயர்ப்பு ஒரு காரணம் என சொல்லப்படுகின்றது.

வரலாற்றில் மோதல் ஏற்பட்ட இடங்களை தேடிச் சென்று மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ளாமல் வரலாற்றிலிருந்து பெறவேண்டிய இத்தகைய படிப்பினைகளை ஆராய்ந்து எமது எதிர்காரல சந்ததியினருக்கு நிம்மதியாகவும சந்தோசமாகவும் வாழக்கூடிய சூழலொன்றை ஏற்படுத்திக்கொள்ள அனைவரது கவனம் குவிக்கப்பட வேண்டியுள்ளது.

# நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள்






2030 வரை நடைமுறைப்படுத்துவதற்கு உலகம் ஏற்றுக் கொண்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 17 அபிவிருத்தி இலக்குகளில் (SDG) நான்காவதாக தரமான கல்வி (Quality Education) அமைந்துள்ளது. நிலைபேறான இந்த அபிவிருத்தித் திட்டங்களை இலங்கையில் அமுலாக்கும் அலகாக ஜனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விஷேட கருத்திட்டப் பிரிவு காணப்படுகிறது. இதில் கல்விக்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் நிலைபேறான பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களாக கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின்படி திறனாய்வு மற்றும் புத்தாக்கச் சிந்தனைகள் மேலோங்கும் வகையில் அறிவையும் தொழில்நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட சுற்றாடல், தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு பற்றிய திறமைகளைப் பயன்படுத்தி அச்சு மற்றும் அச்சுசாரா கற்றல் வளங்களை உபயோகிப்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தும் வகையிலான பாரிய கடமைகள் பாடசாலை நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு அறிவையும் தொழில்நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட உலகில் வாழ்வதற்கும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அவசியமான மென்மைத் தேர்ச்சிகளைப் (Soft Skills) பெற்ற பிள்ளைகளை கல்வியின் ஊடாக உருவாக்கும் பொறுப்பும் பாடசாலை நூல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த வகையில், மாணவர்களின் மூளையை சமநிலைப்படுத்துகின்ற வேலை நூலகங்களின் தலையாய பணியாகின்றது. பொதுவாக மூளையின் இடது அரைப்பகுதி அறிவை மையப்படுத்தியும் வலது அரைப்பகுதி சிந்தனை அல்லது ரசனையை மையப்படுத்தியும் அமைகிறது. இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் தற்போது நிலவும் பரீட்சைகளை மையப்படுத்திய கற்றல் கலாசாரத்தின் மூலம் மாணவர்கள் தமது மூளையின் இடது பக்கத்தையே நிரப்பி வருகிறார்கள். இதனால் மூளையின் பயன்பாட்டில் சமநிலையற்ற தன்மை காணப்படுகிறது.

சிந்தனை, ரசனை, விழுமியங்கள், அழகுணர்ச்சி, அன்பு, நெறிமுறைகள் போன்றவற்றை இயக்கும் மூளையின் வலது அரைப் பகுதியையும் வளர்த்துக் கொண்ட சமநிலையான மாணவர் சமூகத்தை உருவாக்கிக் கொள்வதற்கான முறைசார் நிகழ்ச்சித் திட்டமொன்றின் அவசியம் தற்போது கல்வி முறையில் தோன்றியுள்ளது. இதற்கமைய 2017 ஆண்டிலிருந்து கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திக் கிளை, ஜனாதிபதி செயலணி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நூலக மற்றும் தகவல் அறிவியலுக்கான தேசிய நிறுவனம் என்பன ஒன்றிணைந்து பாடசாலைகளில் தரம் 6-13 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு ''நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள்'' என்ற பெயரில் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பூராவும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களின் வாசிப்பை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு 2017.11.27 ஆம் திகதியிட்ட 44/2017 இலக்க சுற்றறிக்கை யினூடாக சகல பாடசாலைகளின் அதிபர் களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. வாசிப்பை மேம்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நான்கு மட்டங்களில் செயற்படுத்தப்படு கின்றது. இதில் முதலாவது மட்டம் பாட சாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப் படுகிறது. 06 முதல் 13 வரையான வகுப்புக் களைக் கொண்ட பாடசாலைகளில் இது நடைமுறைப்படுத்தப்படும். தரம் 6 - 9 வரை கனிஷ்ட பிரிவாகவும் தரம் 10 - 13 வரை சிரேஷ்ட பிரிவாகவும் கொள்ளப்படும். இந்த இரண்டு பிரிவுகளையும் உடைய சகல மாணவர்களும் தமது வகுப்பு மட்டத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்ற முடியும்.

பாடசாலை நூல் நிலையத்தில் உள்ள நூல்களுக்கிடையில் அல்லது கல்வி அமைச்சின் மூலம் பாடசாலைகளில் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நூல்களுக்கிடையில் மாணவர்கள் தெரிவு செய்கின்ற தகுதியான இலக்கிய நூலை வாசித்து அதற்கு ஏற்புடைய செயற்திறன் குறிப்புப் பத்திரக் கோவையை (இந்தக் கோவையின் மாதிரி ஒன்று பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது) பூரணப்படுத்தி வகுப்பாசிரியர்களுக்கு ஒப்படைக்க வேண்டும். வகுப்பின் பொறுப்பாசிரியரால் வகுப்பு மட்டத்தில் சிறந்த 5 குறிப்புப் பத்திரக் கோவைகளைத் தேர்ந்தெடுத்து பாடசாலையின் போட்டிக்கான செயற்குழுவிடம் ஒப்படைத்தல் வேண்டும். பின்னர் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் தெரிவான குறிப்பேடுகளை வைத்து கனிஷ்ட பிரிவிலிருந்து 03 குறிப்பேடுகளும் சிரேஷ்ட பிரிவிலிருந்து 02 குறிப்பேடுகளுமாக மொத்தமாக 05 குறிப்பேடுகள் ஒரு பாடசாலையிலிருந்து வலய மட்டத் தெரிவுக்காக அனுப்பப்படல் வேண்டும்.

பாடசாலையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் செயற்திறன் குறிப்புப் புத்தகங்கள் வலயக் கல்வி அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னரும் அவர்கள் தமது வாசிப்புத் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் தொடரந்து கலந்து கொள்ள முடியும். இதற்கமைவாக பாடசாலை நூல் நிலையத்தின் ஊடாக நூல்களை வாசித்தல் மற்றும் செயற்றிறன் குறிப்புக்களைப் பதிவு செய்தல் என்பன தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு 50 க்கு மேற்பட்ட வெற்றிகரமான செயற்திறன் குறிப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் மாணவர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படும். 50 செயற்திறன் குறிப்புகளைப் பூர்த்தி செய்து 50 வீதத்துக்கும் அதிகமான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு வெள்ளிப்பதக்கம் வழங்கப்படும். 75 செயற்திறன் குறிப்புகளைப் பூர்த்தி செய்து 50 வீதத்துக்கும் அதிகமான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படும். 100 செயற்திறன் குறிப்புக்களைப் பூரணப்படுத்தி 50 வீதத்துக்கும் அதிகமான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பிளாட்டினம் விருது வழங்கப்படும். நவம்பர் மாதம் முடிவடைவதற்குள் பாடசாலைகள் இவர்களின் பெயர்களை வலயத்தின் பாடசாலை நூல்நிலையப் பணிப்பாளரிடம் அறிவிக்க வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் சிறந்த வாசகர்களுக்கிடையில் இருந்து வலய மட்டத்தில் சிறந்த 20 பேர் (கனிஷ்ட பிரிவு 10, சிரேஷ்ட பிரிவு 10) தெரிவு செய்யப்படுவர். வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் சிறந்த வாசகர்களில் 10 பேர் மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்படுவர். மாகாண மட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டோரைத் தெரிவு செய்ததன் பின்னர் அவர்கள் தொலைக்காட்சியில் ரியலிட்டி வினாவிடை நிகழ்ச்சியொன்றில் பங்குகொள்வர்.

வாசிப்பை மேம்படுத்தும் அரசாங்கத்தின் இந்த நிலைபேறான நிகழ்ச்சித் திட்டம் பற்றிய அறிவுறுத்தல்கள் 2017 நவம்பரிலேயே அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளன. அதற்குரிய தமிழ்க் கையேடு 2018 இலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் தற்பொழுது தான் இந்தக் கையேடுகள் முஸ்லிம் பாடசாலைகளுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில பாடசாலைகள் கிடைத்தும் கவனிக்காதிருக்கின்றன.

# போரில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கும் சட்டம் நிறைவேற்றம்


இலங்கையில் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க வகை செய்யும் சட்டம், அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இலங்கை அரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையே நீடித்து வந்த உள்நாட்டு போர் கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இப்போரில் உயிரிழந்து விட்டனர். போரின் இறுதி மாதங்களில் மட்டும் 40,000 தமிழர்கள் இலங்கை ராணுவத்தின் தாக்குதல்களில் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இலங்கை அதிபராக மைத்ரிபால சிறீசேன பொறுப்பேற்று 3 ஆண்டுகள் ஆகியும், பெரும்பான்மை மக்களான சிங்களர்கள், சிறுபான்மையினரான தமிழர்கள் இடையிலான பாகுபாடு நீடிப்பதாக சர்வதேச பார்வையாளர்கள் கூறி வருகின்றனர். அதிபராக பொறுப்பேற்றபோது, போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்படும்; போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று சர்வதேச சமூகத்திடம் சிறீசேன உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில், போரில் பாதிக்கப்பட்டோர், உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வகை செய்யும் முக்கியமான சட்ட மசோதா, நீண்ட தாமதத்துக்கு பிறகு அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக 59 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் பதிவாகின. முன்னாள் அதிபர் மகிந்த ராஜபட்சவின் ஆதரவு உறுப்பினர்கள், இந்த மசோதாவுக்கு எதிராக வாக்களித்தனர்.

முன்னதாக, போரில் காணாமல் போனோரை கண்டுபிடிப்பதற்காக பிரத்யேக அலுவலகத்தை அமைக்க வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தி வந்த நிலையில், அந்த அலுவலகத்தை இலங்கை அரசு கடந்த மார்ச்சில் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தாம் இழந்தவைகளுக்காகவே நீதியைக் கோருகின்றனர்



அனுஷா சிவலிங்கம்

சிவலிங்கம் அனுஷா கிளிநொச்சியைச் சேர்ந்தவர். கொழும்பு பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி ஊடகத் துறை பட்டப் படிப்பை நிறைவுசெய்து தற்போது ஊடகத்துறை, மொழிபெயர்ப்பு, புகைப்படத்துறை, எழுத்துத் துறை ஆகிய வற்றுடன் சேர்ந்து பயணிக்கிறார். சிங்கள மொழியில் இவர் பெற்றுள்ள புலமை யினால் இதுவரை முக்கியமான இரண்டு நூல்களை சிங்களத்துக்கு மொழி மாற்றம் செய்துள்ளார். இன்னும் இரண்டு நூல்கள் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் ஊடாடும் அனுஷா போன்றவர்களால் சமூகங்களுக்கிடையிலுள்ள இடைவெளிகளைக் குறைப்பதில் மகத்தான பணிகளை மேற்கொள்ள முடியும். ஒரு சிங்கள நூல் வெளியீட்டு விழாவில்தான் அனுஷாவை முதலில் சந்தித்தேன். இது அவருடனான நேர்காணல்.

**இன்ஸாப் ஸலாஹுதீன்**

- **சிங்கள மொழியுடனான பரிச்சயம் எப்படி ஏற்பட்டது? விரும்பியாஅதைப் படித்தீர்கள்?**

பாடசாலை காலத்தில் சிங்கள மொழியைக் கற்றிருந்தன். அதனால் சிறுவயதிலேயே சிங்களமொழி எழுதவாசிக்கும் அளவுக்கு பரிச்சயமாக இருந்தது. சிங்கள மொழியைக் கற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதனால், சிங்கள மொழியைக் கற்றேன்.

ஆரம்பத்தில் சிங்கள மொழி கற்பதில் சிரமங்களை எதிர்கொண்டன். ஓர் கட்டத்தில் சிங்கள மொழியைக் கட்டாயம் கற்க வேண்டும் எனும் எண்ணம் என்னில் தோற்றம் பெற்றது. விருப்பம் இல்லாமல் கற்ற அந்த மொழியால், தமிழிலுள்ள பல விடயங்களை சிங்கள மொழிக்கு கொண்டு செல்லலாம் எனும் எண்ணம் என்னில் தோற்றம் பெற்ற பின்னர் அதனை விரும்பி கற்கத் தொடங்கினேன்.

- **இதுவரையிலான மொழிபெயர்ப்பு முயற்சிகள் பற்றி...**

பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் கற்கும் காலபகுதியில், மொழிபெயர்ப்பு தொடர்பில் ஆர்வம் ஏற்பட்டது. அதற்குக் காரணமாக அமைந்தவர் யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளரும், சிறந்த மொழிபெயர்ப்பாளருமான விமல் சுவாமிநாதன் அவர்கள். அவர்களின் வழிகாட்டல் ஊடாக தமிழில் போர்க் கால அனுபவங்களைப் பதிவுசெய்திருந்த பிரதானமாக போர்ச் சூழலில் வாழ்ந்த மக்களின் வாழ்நிலை அவர்களின் வாழ்வு பற்றி எழுதியிருந்த கவிஞர் சிவராஜா கருணாகரனின் இப்படி ஒரு காலம் எனும் கட்டுரை நூலினை கன்னி முயற்சியாக மொழிபெயர்த்தேன்.

அதேபோன்று தமிழ் பெண் ஒருவர் வேறு இனங்களுக்கு மத்தியில் வாழும்போது எதிர்கொண்ட பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நிஷ்ஷங்க விஜேமான்னவின் 'தாராமகே தெய்வதுவ' எனும் சிங்கள நாவலை "தாராஷியா மலீகுமாரசுவாமி" என தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தேன்.

- **கவிஞர் கருணாகரனின்' 'மதகவன்னிய' நூல் மொழிபெயர்ப்பு அனுபவத்தை விளக்குவீர்களா?**

இப்படி ஒருகாலம் எனும் கட்டுரை நூலினை முதலில் என் கையில் தந்தது சுவாமி நாதன் விமல் அவர்கள், அந்த நூலினை வாசித்த போது, எனக்குத் தெரியாத பல விடயங்கள் உள்ளன என்பவற்றை உணர்ந்தன். முக்கியமாக அந்த நூலில் போரிற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம், அவர்களின் வாழ்க்கை முறை பற்றியும், போருக்கு பின்னர் தமது வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும் இழந்த மக்களின் வாழ்வு பதிவாகி இருந்தது.

அக்கால பகுதியில் வாழ்ந்த மக்கள் தமது உணர்வுகளை அன்பு, பாசம் என்பவற்றையும் வாழ்க்கையையும் கடிதங்கள் ஊடாகப் பரிமாறிக் கொண்டனர் என்பதனை அறிந்து கொண்டேன். அது பற்றி எனது தந்தையிடம்கேட்ட போது, போருக்கு முன்னரான காலப் பகுதியில் மக்கள் செழிப்பாக வாழ்ந்ததாகவும், கடிதங்கள் ஊடாகவே தமது அன்பு, பாசங்கள் என அனைத்து உணர்வுகளையும் பரிமாறிக் கொண்டனர் என அக்கால நினைவுகளை மீட்டி எனக்குச் சொன்னார். அவர்தனது அக்கால நினைவுகளை மீட்டி எனக்குக் கூறிக் கொண்டிருந்தபோது இக்காலப்பகுதியில் எமது மக்கள் எவ்வாறு வாழ்ந்து கொண்ருக்கின்றார்கள் எனும் எண்ணமே எனக்குத் தோன்றி அது பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

தமிழ் மக்கள் போருக்கு முன்னர் வாழ்ந்த வாழ்க்கையும் அவர்களின் வாழ்க்கை முறைமைகளும், போருக்குப் பின்னரான அவர்களின் வாழ்க்கையும், வாழ்க்கை முறைமைகள் பற்றியும் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் என்னுள் தோற்றம் பெற்றது. அதனால் அந்தநூலினை மொழி பெயர்க்க முடிவு செய்தேன். அதுமட்டுமே என்னால் செய்யகூடியதாக இருந்தது. அதனைச் செய்ய முடிந்தது நான் சிங்கள மொழி கற்றதனால்தான்.

- **இந்த நூலுக்கு சிங்கள சமூகத்திடம் வரவேற்பு இருந்ததா?**

நான் எதிர்பார்த்ததை விட பல மடங்கு கூடுதலாக இருந்தது. புத்தக அறிமுக நிகழ்வு நடத்த முன்னர் சமூக ஊடகங்கள் ஊடாக இவ்வாறு ஒரு புத்தகம் வெளியிடப்பட உள்ளதாக பகிர்ந்து மூன்று நாட்களுக்குள் 1000 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன. கொழும்பில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் அந்த நூலினை பலர் வாங்க முயன்ற போதும், பிரதிகள் முடிவடைந்து விட்டன. அந்த நூலினை வாசித்த பலர் தம்மையும் தமது இனத்தையும் விமர்சனத்திற்கு உள்ளாக்கத் தொடங்கினார்கள்.

அதன் பின்னர் இந்த நூல் தொடர்பில் விமர்சனங்கள், பாராட்டுக்கள் என பல கடிதங்கள் எனக்கு வந்தன. அவை எனக்கு மட்டும் அல்ல அந்த நூலினை தமிழ் எழுதிய கவிஞர் கருணாகரனுக்கும் பல கடிதங்கள் சென்றன. பலபிரபலமான சிங்கள எழுத்தாளர்கள்அந்த நூலினை சிங்களமொழிக்கு மொழிபெயர்த்தமைக்கு நன்றி தெரிவித்ததுடன் தமது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

நூல் வெளியிட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. கடந்த வாரம் கூட ஒரு கடிதம் வந்தது. அதனை அது ஒரு சிரேஸ்ட சட்டத்தரணி எழுதியிருந்தார். அந்த நூலினை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தமைக்கு நன்றி தெரிவித்ததுடன், அந்த நூலில் யாழில்.இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமரசாமியின் வழக்கு தொடர்பில் தான் தேடி வருவதாகவும் எழுதியிருந்தார்.

அந்த நூலினை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தமை ஊடாக சில சிங்கள மக்கள் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தமையை நினைத்து நான் பெருமை கொண்டேன்.

- **போருக்குப் பிந்திய இலங்கையில் சிறுபான்மை சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒரு மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் சிறுபான்மை சமூகங்கள் ஆகிய நாம் எதிர்கொள்ளும் பிரச்சனையாக நான் காண்பது, போரின் போது அவர்கள் இழந்தவைக்கு நீதியை கோருகின்றோம். தற்போதைய நடவடிக்கைகள் காயங்களை சுத்தம் செய்யாது மருந்து போடுவது போன்ற செயற்பாடுகளே. இது காயத்தினை பெரிதாக்குமே தவிர காயத்தினை மாற்றாது.

போர் நடந்த பகுதிகளில் வாழும் மக்கள் வறுமையில் வாழ்கின்றார்கள், அவர்களுக்காக கொண்டு வரப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அவர்களிடம் போய்ச் சேர்வதில்லை. அவை வேறு இடங்களுக்குப் போய்ச் சேர்கின்றது. எஞ்சியுள்ள ஒரு சில வாழ்வாதாரத்தையும், சில பிரிவினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதனால் அந்த மக்கள் அந்த வாழ்வாதாரத்தையும் இழந்து நிற்கின்றோம்.

முக்கியமாக குடிநீர் , நிலம் போன்றவை கூட நாம் இழந்து கொண்டே இருக்கின்றோம். இவற்றில் துரதிஸ்டமான விடயம் யாதெனில் எமது மக்கள் பிரதிநிதிகளே எமது மக்களின் வாழ்வை பறித்துக் கொண்டு உள்ளனர். தெளிவாகக் கூறுவதாயின், அரசியல் பலத்திற்காக போராடும் சில அரசியல்வாதிகள் தமிழ் தேசியம் பற்றி உணர்வுபூர்வமாக பேசினாலும், அந்த தேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை பற்றிய சிந்தனை இன்றி உள்ளார்கள். போருக்கு பின்னரான காலப் பகுதியில் தற் போது மிக தேவையானது ஒரு நிழல். அந்த நிழலை எமது பிரதிதிகள் பெற்றுத் தர இயலாதவர்களாக உள்ளனர். இது தனியே சிறுபான்மை மக்கள் மத்தியில் உள்ள பிரச்சனை இல்லை. அனைத்து இனமக்கள் மத்தியிலும் இந்தப் பிரச்சனை உள்ளன.

- **சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை மொழிபெயர்ப்பு முயற்சிகள் ஊடாக சாத்தியப் படுத்தலாம் என்பதில் நம்பிக்கை கொண்டா உங்களது பயணத்தைத் தொடர்கிறீர்கள்?**

மக்களின் மனதில் இனங்கள் தொடர்பில் ஊட்டி விட்ட பொய்யான உணர்வுகள், பொய்யான விடயங்கள், நிறைய உள்ளன. அந்நிலையில்தான் நாம் உண்மைகளை அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டிய தேவை உள்ளது. நீதிக்காக மக்களை சிந்திக்கவைப்பதற்கு கலைகள் ஊடாக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அந்தவகையில் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், திரைப்படங்கள், பாடல்கள் என்பவற்றின் ஊடாக அவற்றை முன்னெடுக்கின்றார்கள். அவை கடந்த கால வரலாற்றில் இருந்தே நடந்து கொண்டே இருக்கின்றது.

எத்தகைய கலைகள் ஊடாக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும், எமது மக்களின் மனநிலை என்ன இடத்தில் உள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடியும். புத்தகங்கள் எழுதுவதால், மொழிபெயர்ப்பின் ஊடக நூறுக்கு நூறுவீதமான மாற்றத்தை எங்களால் எதிர்பாக்க முடியாது ஆனால் ஒரு சில சதவீதமாக மாறும் எனும் நம்பிக்கையில் நாம் முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். அந்த மாற்றத்திற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிகளை முன்னெடுப்போம்.


- **தமிழ்த் திரைப்படங்கள் குறித்து சிங்கள மொழியில் வெளியான உங்களது நூல் குறித்துச் சொல்ல முடியுமா?**

தமிழ் சினிமாவில் இலங்கையில் முயற்சி எனும் பெயரில்தான் அந்த நூல் வெளியாகவுள்ளது. அதில் இலங்கை தமிழ்த் திரைப் படம் ஆரம்பம் முதல் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம்திரையிட்ட கோமாளி கிங்ஸ் வரை பதிவாகியுள்ளது. குறிப்பாக 83 ஆம் ஆண்டில் நடை பெற்ற கலவரத்தின் பின்னர் தமிழ்த் திரைப்படத் துறை காணமல் போய் விட்டதாக பலரும் கூறினார்கள். ஆனால்,

(பக்.14)

---

## எழுவாய், பயனிலை



அபூ ஷாமில்

## கலண்டர் மட்டும் விற்பனைக்கு

பள்ளிவாசல்களின் ஒழுங்குகளில் அடிக்கடி பல புதிய விடயங்கள் வந்து போவதுண்டு. தொழுவதற்காக விரிக்கப்படுகின்ற முஸல்லாக்களில் இருக்கின்ற அலங்காரங்கள் தொழுகையில் கவனத்தை ஈர்க்கின்றது என்று கூறி சில காலம் இமாமுடைய முஸல்லாவுக்கு மேலால் வெள்ளைப் புடவை விரித்துத் தொழுதார்கள். பின்னால் திரும்பிப் பார்த்தால் ஏராளமான மஃமூன்கள் அலங்கரிக்கப்பட்ட விரிப்புக்களில் தொழுது கொண்டிருந்தார்கள். அத்துடன் அலங்கரிக்கப்பட்ட முஸல்லா கவனத்தைக் கலைக்கும் விடயம் அல்ல என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள்.

அதுபோல ஒரு நடைமுறைதான் கலண்டர்கள். பள்ளிவாசல்களில் வர்த்தக விளம்பரங்கள் செய்யக் கூடாது என்று கூறி கலண்டர் வழங்கிய நிறுவனத்தின் பெயர் அச்சடிக்கப்படாத கலண்டர்களை தற்பொழுது தொங்க விட்டு வருகிறார்கள். ஒரு காலத்தில் தமது வியாபாரத்தில் பரக்கத் பெருக வேண்டும் என்பதற்காக தமது வியாபார நிலையத்தின் பெயர் பொறித்த கலண்டர்களை வர்த்தகர்கள் பள்ளிவாசல்களில் தொங்க விட்டார்கள். எதற்கும் பள்ளிவாசலை முற்படுத்துகின்ற காலப்பிரிவுகளில் இது பொதுவான விடயமாக நடந்து வந்தது.

பிற்பட்ட காலங்களில் தான் பள்ளிவாசல்களில் வர்த்தக விளம்பரங்களுக்கான தடை விதிக்கும் உணர்வு வந்தது. அதனால் நிறுவனங்களின் பெயர்கள் இல்லாத, வெறுமனே ஹிஜ்ரி வருடத்தை மட்டும் பொதித்த கலண்டர்களை பள்ளிவாசல்களில் தொங்க விடத் தொடங்கினார்கள். பள்ளிவாசல்களை வர்த்தக நிலையங்களுக்கான விளம்பரப் பொருளாக எடுத்துக் கொள்வதனால் பல பிரச்சினைகளை பள்ளிவாசல்கள் எதிர்நோக்கின என்பது உண்மை தான். இந்த வர்த்தகருடைய கலண்டரைப் போட்டால் அடுத்த வர்த்தகருடைய கலண்டரையும் தொங்க விட வேண்டிய நிலை பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு. இப்படியே இடம் கொடுத்தால் பள்ளிவாசலின் சுவர்களெல்லாம் ஒரே கலண்டர் மயமானதாக அமைந்து விடும். அதனால் பள்ளிவாசல்கள் பெரும்பாலும் வர்த்தக நிறுவனங்களுடைய கலண்டர்களை இப்போது தொங்க விடுவதில்லை.

ஆனாலும் காலப் போக்கில் ஏன் இந்த நடைமுறையை தேர்ந்தெடுத்தோம் என்பதே உரியவர்களுக்கு மறந்து போய் விட்டது. பின்னர் பள்ளிவாசல் நோடீஸ் போர்டில் வர்த்தக விளம்பரங்களை காட்சிப்படுத்தத் துவங்கினார்கள். இன்று பள்ளிவாசல்களின் நோடீஸ் போர்டுகளில் ஏராளமான வர்த்தக விளம்பரங்கள் வாரா வாரம் வந்து குவிகின்றன. இந்த மத்ரஸாவில் மாணவர்கள் சேர்க்கிறார்கள், கட்டணம் இவ்வளவு, இந்த மத்ரஸாவில் புதிதாக ஹிப்ழ் பிரிவு தொடங்குகிறார்கள், கட்டணம் இவ்வளவு என்ற விளம்பரங்கள் நோடீஸ் போர்டை நிறைத்த வண்ணம் உள்ளன. இலவசமாக சேவை அடிப்படையில் செய்யப்படாத எதுவுமே வர்த்தக நோக்கில் செய்யப்படுபவை தான்.

இன்னும் சில இடங்களில் கம்பியூட்டர் வகுப்புகள், தையல் பாடநெறிகள் என்றெல்லாம் தொழுகைக்குப் பின்னரே எழும்பி விளம்பரங்கள் வாசிக்கப்படுகின்றன. பள்ளிவாசலில் தொங்கும் கலண்டரில் மட்டும் தான் விளம்பரங்களை காண முடிவதில்லை. சில இடங்களில் பெருநாள் சாப்பாட்டு விளம்பரங்கள் கூட பள்ளிவாசலின் அறிவித்தல் பலகையில் காணக்கிடைக்கின்றன. இன்னும் சில இடங்களில் இலக்றோனிக் கடிகாரத்தைத் தொங்க விட்டு அனுசரணையாரின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிவாசல் நிர்வாகிகள் பலரும் வியாபாரிகளாக இருப்பதால் தத்தமது வியாபாரத்தை விளம்பரப்படுத்தக் கூடிய ஏதேனும் ஒன்று பள்ளிவாசலில் காட்சிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்.

ஆனால் கலண்டரில் விளம்பரம் இருக்காது. இப்படி ஏன் செய்கின்றோம் என்பது தெரியாத பல நடைமுறைகள் பள்ளிவாசல்களுக்குள்ளால் இருக்கின்றன. இபாதத் விடயங்களில் கூட இது விதி விலக்கல்ல.

இனி பள்ளிவாசல்கள் வர்த்தக விளம்பரங்களுக்கான இடங்களல்ல என்ற தீரமானத்துக்குப் பள்ளிவாசல்கள் ஏகோபித்து முடிவெடுப்பார்களானால் எல்லா வகையான விளம்பரங்களையும் பள்ளிவாசல்களில் இருந்து தூரமாக்குவது தான் ஏற்புடையது. பள்ளிவாசல்களின் விடயங்களில் யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள் என்பதற்காக கண்ட கண்ட விளம்பரங்களையெல்லாம் பள்ளிவாசலில் தொங்கவிடத் தொடங்கினால் பள்ளிவாசலும் வர்த்தக மையமாகிவிடும்.

இப்பொழுது கலண்டருக்கான காலம் துவங்கியிருக்கிறது. மத்ரஸாக்களின் மாணவர்கள் வீடு வீடாக தமது மத்ரஸாவுக்கு நிதி சேகரிக்கும் நோக்கில் வீதி வலம் வர இருக்கிறார்கள். இந்த மத்ரஸாக்களுடைய கலண்டர்கள் கூட பள்ளிவாசல்களில் தொங்க விடப்படுவதில்லை. ஆனால் விளம்பர நோடீஸ்கள் அறிவித்தல் பலகையில் தொங்கவிடப்படும். அப்படியானால் கலண்டர்கள் தான் பிழை. பள்ளிவாசலில் வர்த்தக விளம்பரங்கள் செய்வது பிழை அல்ல என்ற போக்கு தான் இங்கே தெரிகிறது.

இப்படித் தான் பல விடயங்கள் காலப்போக்கில் ஏன் துவங்கினோம் என்பதன் விளக்கம் இன்றி தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருவர் தனது அபிப்பிராயப் படி ஏதோ ஒன்றை நடைமுறைப்படுத்த அடுத்து வருபவர்களும் அதனை ஒரு மாற்றமுடியாத கைங்கரியமாகத் தொடர... பல பிற் சேர்க்கைகள் இப்படித்தான் நமக்குள் ஆழமாக நுழைந்திருக்கின்றன.

எனவே ஏன் இந்த நடைமுறையை எடுத்தோம் என்பது தொடர்பில் சிந்தித்துப் பார்ப்பது வெறுமனே கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதை விட சிறப்பானது. புதிதாக எதையுமே யோசிப்பதற்கு நம்மில் பலருக்கு முடியாமல் இருப்பது, புதிதாக அவர்கள் எதையுமே கற்றுக் கொள்ளவில்லை என்பதன் அடையாளம்தான்.

ஆளுகை மையங்கள் அறிவு மையங்களாக மாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## சவூதி அரசின் கொள்கைகளை எதிர்க்கும் சட்டத்தரணி கஹ்தானி



சவூதியின் முன்னாள் சட்டத்தரணியும் சட்டத்துறை ஆலோசகருமான முஹம்மத் அல் மிஷைல் அல் கஹ்தானி சவூதி அரசாங்கத்திற்கும் அதன் கொள்கைகளுக்கு தான் எதிர்ப்பைத் தெரிவிப்பதாக அறிவித்துள்ளார். யூடியுப் ஒளி நாடாவில் தோன்றிய கஹ்தானி, சவூதி அரசாங்கத்தின் அடக்குமுறை கொள்கைகளும் சவூதி குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதும் மோசமான நிலைக்குச் செல்லும் வறுமையும் நாடு முழுவதிலும் நீடிக்கும் வேலையில்லாப் பிரச்சினையுமே தனது எதிர்ப்புக்கான காரணம் என்று விளக்கியுள்ளார்.

தற்போது கஹ்தானி பிரிட்டன் தலைநகர் லண்டனில் வாழ்கிறார். சவூதி அரசாங்கத்தை எதிர்க்கின்ற அனைவரோடும் ஒத்துழைத்துச் செல்ல தான் தயார் என்று அறிவித்துள்ள கஹ்தானி, சவூதியின் இன்றைய ஆட்சி சர்வதிகாரமும் ஊழலும் நிறைந்தது என்று தெரிவித்துள்ளார்.

புத்திஜீவிகளையும் ஆலிம்களையும் கைதுசெய்து சித்திரவதை செய்யும் நிலைமைக்கு சவூதி அரசாங்கம் வந்துள்ளதை கஹ்தானி கண்டித்துள்ளார்.

## ஐ.நா காலநிலை அறிக்கை - உலக நாடுகளை எச்சரிக்கின்றது

2030 இல் உலக வெப்பநிலை 1.5 டிக்கிரி செல்சியஸினால் உயரும் என்று ஐ.நா. காலநிலை அறிக்கை எச்சரிக்கின்றது. தற்போதைய பூகோள வெப்ப நிலை இதே அளவு நீடிக்குமானால் 2030 இல் அது இன்னும் 1.5 செல்சியஸால் உயரும் என்று காலநிலை விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.




உலகின் பல நாடுகள் வெப்பநிலையைக் குறைப்பதற்கு எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காத நிலையில் இதைத் தவிர்க்க முடியாது என்று காலநிலை சார் விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட ஐ.நா. அறிக்கை கூறுகின்றது.

2015 இல் பாரிஸில் இடம்பெற்ற மாநாட்டில் கண்டடையப்பட்ட உடன்பாட்டை நடைமுறைப்படுத்தும் வகையில் அரசாங்கக் கொள்கை வகுப்பாளர்களுக்கு இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் யுகத்திற்கு முந்திய அளவில் பூகோள வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதே இப்புதிய அறிக்கையின் பிரதான நோக்கம். அதேவேளை 2030 இற்குள் ஏற்படப் போகும் 1.5 செல்சியஸ் வெப்ப அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது இதன் அடுத்த நோக்கமாகும்.

எரிபொருள் நுகர்வு மற்றும் காபனைக் கட்டுப்படுத்துவதற்கும் பசுமைத் தொழில்நுட்பத்தை அமுல்படுத்தவும் நாடுகள் முன்வர வேண்டும் என இந்த அறிக்கை கூறுகின்றது.

## பாகிஸ்தானில் தேசத் துரோக குற்றச்சாட்டில் முன்னாள் பிரதமர்கள் நீதிமன்றில் ஆஜர்





பாகிஸ்தானின் முன்னால் பிரதமர் நவாஸ் ஷரீப் மற்றும் அப்பாஸி ஆகியோருக்கு எதிரான தேசத் துரோக குற்றச்சாட்டு லாஹூரிலுள்ள நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதேவேளை, முன்னணி பத்திரிகையாளர் ஒருவருக்கு எதிரான குற்றப் பத்திரிகையையும் நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

பிரதமர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர்களான நவாஸ் ஷரீப் மற்றும் ஷஹீத் அப்பாஸி ஆகியோருக்கு எதிரான வழக்கை கடந்த வாரம் 3 நீதிபதிகளைக் கொண்ட லாஹூர் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

பாகிஸ்தானின் இராணுவம் மற்றும் உளவுத் துறையினரை 2008 இல் மும்பாயில் நடந்த தாக்குதலுக்கு துணை போவதற்கு ஷரீப் பக்க பலமாக இருந்தார். அத்தாக்குதலில் 160 பேர் கொல்லப்பட்டனர். இது நவாஸ் ஷரீப் இழைத்த தேசத் துரோகம் என்று நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

அதேவேளை, நவாஸ் ஷரீப் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களையும் கடந்த ஆண்டில் எதிர்கொண்டிருந்தார். அதன் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த மாதமே ஷரீப் அவரது மகள் மர்யம், மருமகன் முஹம்மத் ஸப்தார் பிணை மனுவில் விடுவிக்கப்பட்டனர். இவர்களது வழக்கு தொடர்ந்தும் விசாரணை செய்யப்படவுள்ளது.

## சர்வதேச நிவாரணத்தை நாடி நிற்கும் யெமன் குழந்தைகள்

சுமாராக ஒவ்வொரு யெமன் குழந்தையும் சர்வதேச நிவாரணத்தை நாடியுள்ளனர் என்று ஐ.நா. சிறுவர் நிதியம் (Unicef) அறிவித்துள்ளது.

சமகால உலகில் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள முதலாவது நாடாக யெமன் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. நான்காவது வருடமாகத் தொடரும் போரினால் தேசிய அளவிலான பொருளாதார மந்தமும்



அரச சேவை மந்தமும் உணவு மற்றும் மருத்துவ போதாமைகளும் ஏற்பட்டுள்ளன.


உயர் பணவீக்கம், வாழ்க்கைச் செலவை அதிகரித்துள்ளதோடு, வறுமையையும் போஷாக்கின்மை நெருக்கடியையும் கொண்டுவந்துள்ளது. 1.5 மில்லியன் கடும் வறுமைக்கு உட்பட்ட குடும்பங்கள் யெமனில் வாழ்கின்றன. உலக வங்கியினால் வழங்கப்படும் அவசர பணப் பரிமாற்றத்தினால் 9 மில்லியன் மக்கள பயனடைகின்றனர். எனினும், 1.5 மில்லியன் மக்கள் தொடர்ந்தும் உணவுப் பற்றாக் குறையை எதிர் கொண்டுள்ளனர் என்று யுனிசெப் கூறுகின்றது.

பட்டினி, கொள்ளை நோய், வாந்தி பேதி, வயிற்றோட்டம் என்பன குழந்தைகளுக்கு மத்தியில் பரவி வருவதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. கடந்த காலங்களில் 6000 குழந்தைகள் போரில் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காய மடைந்துள்ளனர்.

சுகாதாரம், குடிநீர், கல்வி போன்ற அடிப்படைக் கட்டுமானங்களை போர் முடக்கிப் போட்டுள்ளது என்று யுனிசெப் அறிவித்தள்ளது.

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யெமனில் அதிகரித்து வருவதோடு, இரண்டு மில்லியனுக்கு அதிகமான யெமன் குழந்தைகள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் என்றும் யுனிசெப் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

## பாலியல் தொந்தரவுகளை எதிர்த்த பாடசாலை மாணவிகளுக்கு அடித்துத் தண்டனை




12 முதல் 14 வரையான 34 பாடசாலை மாணவிகள் பாடசாலை மாணவர்களால் அடித்துத் துன்புறுத்தப்பட்ட சம்பவமொன்று இந்தியாவின் சுப்பாஉல் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளது. அரச நிறுவனங்கள் பாலியல் தொந்தரவுகளை எதிர்நோக்கும் பெண் குழந்தைகளைப் பாதுகாக்குமாறு பீகார் மாநில மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இந்திய அரசை வேண்டியுள்ளனர்.

பீகாரிலுள்ள சுப்பாஉல் மாவட்ட பெண்களுக்கான கஸ்தூரி பாய் காந்தி பாலிகா வித்தியாலயத்தில் கற்கும் 34 மாணவி களுக்கு வெளிப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் விரசமான குறுஞ் செய்திகளை அனுப்பி தொந்தரவு செய்ததாக குற்றம் சுமத்தப்படுகின்றது. பின்னர் இவர்கள் பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் மாணவிகள் வீடு செல்லும்போது அவர்களுக்கு அடித்துத் துன்புறுத்தியதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. சில மாணவிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான மாணவிகள் 6 ஆம் 7 ஆம் ஆண்டுகளில் கற்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இத்லிப் போர் நிறுத்தம் தற்காலிகமானது:

### ஆஸாத் தெரிவிப்பு



ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் இடையில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையும் இத்லிப் மீதான போர் நிறுத்தமும் தற்காலிகமானது என்று சிரியாவின் ஜனாதிபதி பஷ்ஷார் அல் அஸத் தெரிவித்துள்ளார். இத்லிபைக் கட்டுப்படுத்தும் சிரிய அரசாங்கத்தின் நோக்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படும் என்று அஸத் தெரிவித்தார்.

நாட்டுக்கு எதிரான அனைத்து சர்வதேசத்தின் திட்டங்களையும் சிரிய அரசாங்கம் தோற்கடிக்கும் எனவும் ஆஸாத் அங்கு சூளுரைத்தார். இந்த தற்காலிகமான ஒப்பந்தத்தின் மூலம் அரசாங்கமே பல சாதனைகளை எட்டியுள்ளது என்றுஅவர் குறிப்பிட்டார்.

சிரியாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான சனாஆ இது குறித்து மேலும் வெளியிட்டள்ள செய்தியில், ''சிரிய அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவானது. இத்லிப் மாகாணமும் சிரியாவின் ஏனைய சில பிராந்தியங்களும் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவை சிரிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்.''

மூன்று மில்லியன் மக்கள் வாழும் இத்லிப் நகர் மீது சிரிய அரச படையினர் தாக்குதல் நடத்துவதை துருக்கியும் ரஷ்யாவும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. பெருமளவிலான மனித அழிவுகள் அங்கு ஏற்படலாம் என்ற அச்சமே இதற்கான காரணமாகும். ஆயினும் ரஷ்யாவும் சிரியாவும் தாக்குதலை முறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக போர் நிறுத்த காலத்தைப் பயன்படுத்துவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## கமரூன் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிப்பு



கமரூனின் எதிர்க்கட்சி வேட்பாளரான மௌரிஸ் கம்டோ நடந்து முடிந்த தேர்தலில் வெற்றியீட்டியுள்ளதாக அறிவித்துள்ளார். கமரூன் மீள்பிறப்புக்கான இயக்கம் எனும் கட்சியின் சார்பில் மௌரிஸ் போட்டியிட்டிருந்தார்.

''நான் மக்களிடமிருந்து தெளிவான மக்கள் ஆணையொன்றைப் பெற்றுள்ளேன். கடைசிவரை அதனைப் பாதுகாப்பேன். பதவி விலகிச் செல்லும் ஜனாதிபதி அதிகாரத்தை அமைதியான வழியில் கையளிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன் எனவும் மௌரீஸ் கம்டோ தலைநகரில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தான் பெற்ற வாக்குகளின் வீதாசாரத்தை அவர் குறிப்பிடவில்லை. அரசாங்கத்தின் தேர்தல் ஆணையகம் உத்தியோகபூர்வ இறுதி முடிவுகளை அறிவிப்பதற்கு முன்பாகவே கம்டோ வெற்றிக்கு உரிமை கோரியுள்ளார். கெமரூனின் ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிச் செயலாளர் ஒவோனா, கம்டோ நாட்டின் தேர்தல் சட்டத்தை மீறியுள்ளார் என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்

# அமெரிக்க - சீன வணிகப் போரும் உலகப் பொருளாதாரமும்




உலகத்தை இன்று சூழ்ந்துள்ள அபாயங்களில் வல்லரசுகளுக்கிடையிலான வணிகப் போர்தான் மிகவும் ஆபத்தானது என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள். சிலபோது அணுவாயுதப் போரை விட வணிகப் போரின் விளைவுகள் பாரதூரமானவையாக உள்ளன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் சமூகங்களுமே வல்லரசுகளின் வணிகப் போருக்கு விலை கொடுக்க வேண்டியுள்ளது.

இன்றைய நாட்களில் இறக்குமதி பொருட்கள் மீதான சுங்கத் தீர்வையை விமானம் போல் உயர்த்துவதே வல்லரசுகள் வணிகப் போரில் பயன்படுத்தும் ஆயுதமாகியுள்ளது. ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது விதிக்கும் வரித் தொகையை மற்றொரு நாடு அதிகரிக்கின்றது. இதற்குப் பதிலளிக்கும் அடுத்த நாடும் வரியின் அளவை உயர்த்துகின்றது.

கடந்த இரண்டு மாதங்களாக அமெரிக்கா - சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் நடைபெற்று வரும் இந்த சுங்க வரித் தீர்வையை சடுதியாக அதிகரிக்கும் வணிகப் போர் கூர்மையடைந்து வருகின்றது. இதனால் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகளும் வறிய நாடுகளும் பயங்கரமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான சுங்கத் தீர்வையை சடுதியாக உயர்த்தினார். மொத்தமாக 34 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பண்டங்கள் மீது 25 சதவீத வரி அதிகரிப்பை அவர் அறிவித்தார். இந்த இறக்குமதிப் பொருட்களில் தொழில் ஆலைகளில் பயன்படுத்தப்படும் ரோபோக்கள் உள்ளிட்டு நவீன ரக கார்கள் வரையான பொருட்கள் அடங்குகின்றன. சீனாவின் 800 பொருட்கள் மீது ட்ரம்ப் இவ்வாறு இறக்குமதித் தீர்வையை உயர்த்தினார்.

இதற்குப் பதிலளித்த சீனா அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது வரியை உயர்த்தியது. மசகு எண்ணெய் முதல் சோயாஅவரை வரையான பொருட்கள் அதில் உள்ளடங்குகின்றன. சீனா தீர்வையை 25 சதவீதத்தால் உயர்த்தியுள்ளது.

இப்புதிய பொருளாதார நெருக்கடி குறித்து சீனத் தலைநகர் பீஜிங்கில் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த போதே அடுத்த கட்டத் தீர்வை குறித்து ட்ரம்ப் தனது அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். அதற்குப் பதிலளித்த சீனா மேலும் 25 சதவீத அதிகரிப்பை அறிவித்தது. இம்முறை அமெரிக்கா 279 வகையான சீனப் பொருட்கள் மீது தீர்வை உயர்த்தியது. இவற்றுள் கணினிகளைத் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள், இரசாயனங்கள், ரயில் உபகரணங்கள் அடங்குகின்றன.

சீனா பதிலடியாக 333 அமெரிக்க உற்பத்திகள் மீதான இறக்குமதி வரியை உயர்த்தியது. நிலக்கரி, செம்பு, உலோக உற்பத்திகள், மருத்துவ உபகரணங்கள், பேரூந்து வண்டிகள் என்பன இதில் அடங்குகின்றன.

உலகப் பொருளாதாரத்தை ட்ரம்பின் இந்த அதிரடி நடவடிக்கை கடுமையாகப் பாதித்து வருவதாக பொருளியல் வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவர்களின் கருத்தில் வொஷிங்டனின் இந்த அணுகுமுறை புத்திசாதுர்யமற்றது. அது உலகப் பொருளாதாரத்தை மட்டுமன்றி, அமெரிக்கப் பொருளாதாரத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும்.

வல்லரசுகள் என்பவை அரசியல் ஸ்திரத்திலும் பொருளாதாரத்திலும் இராணுவத்திலும் பலமானவை. ஒரு நாட்டை வல்லரசாக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த மூன்று சக்திகள் இவை. இம்மூன்றையும் தக்கவைப்பதிலும் பாதுகாப்பதிலும் அவை மிகுந்த சுயசார்புடையவை. அதற்கென சுயநலமிக்க கொள்கைகளையும் அணுகுமுறைகளையுமே அவை பயன்படுத்துகின்றன.

வணிக நலன்களைப் பாதுகாக்கும் வகையிலேயே வல்லரசுகள் -குறிப்பாக சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் தமது வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கின்றன. அடிக்கடி அவற்றை மாற்றியமைக்கின்றன. கூட்டுக்களை உருவாக்குகின்றன. ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது வரியை அதிகரிப்பதால் உள்நாட்டுச் சந்தையில் இறக்குமதிப் பொருட்களின் விலை விமானம் போல் ஏறி விடும். மக்கள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களைத் தவிர்த்து, உள்நாட்டுப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற நிலை உருவாகும். இதற்காகவே இந்தத் திட்டம் என்கிறார் ட்ரம்ப்.

ஆனால், இது நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான புத்திசாதுர்யமான அணுகுமுறை அல்ல. ஒரு நாடு ஏனைய நாடுகள் மீது இறக்குமதித் தீர்வையை உயர்த்தும் போது பாதிக்கப்பட்ட நாடும் பதிலுக்கு இறக்குமதி வரியை உயர்த்துகின்றது. அப்படி மாறி மாறி உயர்த்தப்பட்டால் உலகத்தில் ஒரு வணிகப் போரே உருவாகும். யதார்த்தத்தில் ட்ரம்பின் அறிவிப்பு பொருளாதாரம் சார்ந்தது அல்ல, மாறாக அரசியல் உள்நோக்கம் கொண்டது.

சீனா உலகப் பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறி வருகின்றது. அமெரிக்கா போன்ற வல்லரசுகளே கவனம் குவிக்காத நீலப் பொருளாதாரத்தில் கூட சீனா சுறுசுறுப்புடன் ஈடுபட்டுள்ளது. கடல், கடல் சார்ந்த உற்பத்தித் துறைகள், கடல் மார்க்கங்களைக் கட்டுப்படுத்தல், கேந்திரோபாயமிக்க வணிகத் துறை முகங்களைக் குத்தகைக்குப் பெறுதல், மீன் உள்ளிட்டு ஏனைய கடல்சார் பொருளாதார வளங்களையும் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல் என்பன அடங்கியதே நீலப் பொருளாதாரம் (Blue Economy).

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சீனா பெற்று வரும் வணிக ஆதிக்கம், ஆபிரிக்காவின் ஜிபூத்தி மற்றும் சூடான் வரை நீண்டு செல்கின்றது. இந்நிலைமை ஒன்றும் அமெரிக்காவுக்கு விரும்பத்தக்கதல்ல. நெருக்கடியின் ஆணிவேராக இருப்பது சீன-அமெரிக்க அரசியல் ஆதிக்கப் போர்தான். ஆனால் ட்ரம்ப் ஏதோ பொருளாதாரக் காரணங்களைக் கூறி வருகிறார்.

2016 ஆம் ஆண்டு சீனாவுக்கு விற்பனை செய்த பொருட்களை விட சீனாவிடமிருந்து வாங்கிய பொருட்களே அதிகம். ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் சமநிலை இல்லை என்பதனாலேயே சீனப் பொருட்களைக் கட்டுப்படுத்த இறக்குமதி தீர்வை அதிகரிக்கப்பட்டதாக ட்ரம்ப் நியாயம் கற்பிக்கிறார்.

இது ஒரு பிழையான ஊகமாகும். ட்ரம்ப் எந்த அரசியல் அனுபவமும் அற்றவர். குறைந்தபட்சம் ஒரு செனட்டராகக் கூட அவர் இருக்கவில்லை. வர்த்தக வானிலிருந்து 'தொப்' என்று வெள்ளை மாளிகையில் விழுந்தவர். அவர் ஒரு தொழிற்துறை முதலாளி என்பது உண்மையே. ஆனால் பொருளாதாரத் துறை வல்லுனர் அல்ல. அவர் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானமும் உணர்ச்சிகரமானது. சில போது அழிவுகரமானது.

துருக்கியின் இறக்குமதிப் பொருட்கள் மீதும் சீன இறக்குமதிப் பொருட்கள் மீதும் ட்ரம்ப் விதித்த தீர்வை அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்பதில் அணுவளவும் ஐயமில்லை. ட்ரம்பின் வணிகப் போர் சீனாவுடன் நிற்கவில்ல. துருக்கி, ஈரான் உள்ளிட்டு இலங்கையைக் கூட பாதித்துள்ளது.

துருக்கியின் பிரம்மிக்கத் தக்க வளர்ச்சியை அமெரிக்காவும் இஸ்ரேலும் பாதகமானதாகவே பார்க்கின்றன. துருக்கியின் அலுமினியம், உருக்கு ஆகியவற்றின் இறக்குமதிப் பொருட்கள் மீது ட்ரம்ப் விதித்த வரியினால் ஒரே நாளில் துருக்கியின் லீரா 25 சதவீதத்தால் வீழ்ந்ததது. தொடர்ந்தும் துருக்கி மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கிறார்.

ஆனால், இங்குள்ள பொருளாதார யதார்த்தம் என்னவென்றால், ஒரு நாடு இன்னொரு நாட்டின் பொருட்கள் மீது விதிக்கும் வரி தன் சொந்த நாட்டு மக்கள் மீது விதிக்கும் வரி போன்றதே. சந்தையில் பொருட்களின் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படப் போவது மக்களே.

300 மில்லியன் மக்களைக் கொண்ட அமெரிக்காவில் பெரும்பான்மையானவர்கள் வெளிநாட்டுப் பொருட்களையே விரும்பி வாங்குகின்றனர். அதிலும் சீனாவின் பொருட்களுக்கு அமெரிக்காவில் தனியான கிராக்கி உள்ளது. அமெரிக்காவில் கணினி உற்பத்தித் துறையைப் பாதுகாக்க சீனாவிலிருந்து இறக்குமதியாகும் உதிரிப் பாகங்களின் தீர்வையை அமெரிக்கா உயர்த்தலாம். அதன் மூலம் கணினி உற்பத்தித் துறை சார்ந்த சில தொழில்வாய்ப்புகளைப் பாதுகாக்கலாம். ஆனால் சகல தொழில் வாய்ப்புகளையும் அதன் மூலம் பாதுகாக்க முடியாது. காரணம் மூலப் பொருட்களை வாங்குவதற்குக் கம்பனிகள் அதிக விலைகொடுக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே ட்ரம்பினால் விதிக்கப்பட்ட தீர்வைகளால் மதுசார உற்பத்தி முதல் ஆடை உற்பத்தி வரை கம்பனிகள் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளன. மீண்டும் மீண்டும் வரி விதிப்பதன் மூலம் கூடுதல் பாதிப்பு ஏற்படுமே தவிர யாருக்கும் நன்மை கிடைக்கப் போவதில்லை. ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பானில் கூட இதன் எதிர்மறை சமிக்ஞைகள் தென்படத் தொடங்கியுள்ளன.

இன்றைய உலகப் பொருளாதாரத்தின் ஜாம்பவானாக விளங்கும் அமெரிக்காவின் ஒரே பலம் பூகோளப் பொருளாதாரம் டொலரை மையப்படுத்தியிருப்பதுதான். டொலரின் இடத்தை யூரோ அல்லது வேறு நாணயங்கள் பிடிக்கும் தருணமொன்றில் அமெரிக்கப் பூதம் சரிந்து விழும் என்பதில் சந்தேகமில்லை. இதுவே இன்றைய மீள் சிந்திப்புக்கான தொடக்கமாக இருக்கும்.

## துருக்கியில் காணாமல் போன சவூதி பத்திரிகையாளர்


### கொலை செய்யப்பட்டுள்ளதாக சந்தேகம்

அமெரிக்காவை வசிப்பிடமாகக் கொண்ட சவூதியின் பிரபல பத்திரிகையாளர் ஜமால் கசூகி துருக்கியிலுள்ள சவூதி தூதரகத்திற்கு சென்று திரும்பி வரவில்லை. ஒக்டோபர் 02 இல் அவர் காணாமல் போயுள்ளார். இது குறித்து துருக்கியின் ஜனாதிபதி அர்தூகான் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

இது போன்ற ஒரு சம்பவம் துருக்கியில் நிகழ்ந்தமை எமக்கு ஆழ்ந்த சங்கடத்தை உருவாக்குகின்றது எனவும் கசூகி உயிரோடு இருப்பதாகவே தாம் நம்புவதாகவும் ஜனாதிபதி அர்தூகான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜமால் கசூகி குறித்து கருத்து வெளியிட்டுள்ள ட்ரம்ப், ''இது குறித்து நான் கவனம் செலுத்துகின்றேன். இது போன்ற செய்திகளைக் கேட்பதற்கு நான் விரும்பவில்லை'' என்று வெள்ளை மாளிகையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தஞ்சம் பெற்று வாழ்ந்து வந்த சவூதி பத்திரிகையாளர் கசூகி கடந்த ஆண்டில் பட்டத்துக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் குறித்து பல விமர்சனக் கட்டுரைகளை எழுதி வந்தார். ஒக்டோபர் 02 இல் துருக்கிக்கு வருகை தந்த பத்திரிகையாளர், அங்குள்ள சவூதி தூதரகத்திற்கு சென்றதை அடுத்து மாயமாக மறைந்தார். துருக்கியின் அதிகாரிகள் பலர் சவூதி தூதரக கட்டடத்தில் ஜமால் கசூகி கொல்லப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளனர். சவூதி அதிகாரிகள் இதனை மறுத்துள்ளனர்.



ஜமால் கசூகி சவூதியின் முன்னணிப் பத்திரிகையாளர்களுள் ஒருவர். இத்துறையில் 30 ஆண்டுகள் அனுபவம் மிகுந்தவர். 1958 இல் மதீனாவில் பிறந்த இவர், சவூதியின் அரச குடும்ப வட்டாரங்களுக்கு நெருக்கமாக இருந்தவர். சவூதியின் பிராந்திய மற்றும் தேசிய கொள்கைகளை சமீபகாலமாக விமர்சித்து வருகின்றவர். அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கையைப் பூர்த்தி செய்த கசூகி, சவூதி கெஸட்டே பத்திரிகையில் ஆங்கில மொழி மூல செய்தியாளராகப் பணியாற்றியவர்.

1987 முதல் 1990 கள் வரை லண்டனைத் தளமாகக் கொண்ட சவூதியின் அஷ்ஷர்க்குல் அவ்ஸத் பத்திரிகையில் பணியாற்றினார். தொடர்ந்து அல் அறப் அல் ஹயாத் செய்திப் பத்திரிகையிலும் எட்டு ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, குவைத் மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் நெருக்கடிகளை வெளிக்கொணர்வதில் ஜமால் கசூகி ஆற்றிய ஊடகத் துறை பங்களிப்பு முக்கியமானவை. அல்காயிதா தலைவர் ஒஸாமா பின் லேடனைச் சந்தித்து பல முறை நேர்காணலை மேற்கொண்டவர் கசூகி. 1999 இல் சவூதி அரசாங்கம் நடத்தும் அறப் நியூஸ் பத்திரிகையின் பிரதி ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பின்னர் 'அல் வதன்' பத்திரிகையில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றி, 2003 இல் அதிலிருந்து விலகினார். அப்போதைய சவூதியின் புலனாய்வுத் துறை தலைவரான துருக்கி பின் பைஸலின் ஊடகத் துறை ஆலோசகராகவும் விளங்கினார்.

முஹம்மத் பின் சல்மான் பதவியேற்றதன் பின்னர் நாட்டில் கொண்டு வந்த மாற்றங்கள் மற்றும் யூத சியோனிஸ்டுகளுடனான ரகசி ஒப்பந்தங்கள் குறித்து பகிரங்கமான கட்டுரைகளை எழுதி வந்த பின்னர் சவூதி அரசாங்கம் அவரை இலக்கு வைத்ததாகக் கூறப்படுகின்றது.

இப்பத்தியை எழுதும்வரை ஜமால் கசூகி காணாமல் ஆக்கப்பட்டுள்ளாரா அல்லது படுகொலை செய்யப்பட்டுள்ளாரா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. தொடர்ந்தும் துருக்கி அரசாங்கம் தேடுதலை ஆரம்பித்துள்ளது. அர்தூகான் தூதரகத்தை விட்டு அவர் வெளியேறிச் சென்றார் என்பதை ஸ்தன்பூலிலுள்ள சவூதி தூதரக அதிகாரிகள் நிரூபிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்குறணை வெள்ளப் பெருக்கு:

## தூரநோக்கற்ற திட்டங்களின் கோர வியரீதங்கள்

கண்டி மாவட்டத்திலுள்ள அக்குற ணையில் 2001 ஆம் ஆண்டு முதல் கடந்த செப்தம்பர் மாதம் 29 ஆம் திகதி வரை பதின் நான்கு வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டுள்ளன. இவ்வெள்ளப் பெருக்கு களுக்கு பல்வேறு காரணங்கள் சொல் லப்படுகின்றன. அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்வதும் சில தீர்வுகளை முன்வைப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரைக்கான தரவுகள் Najimuddin , N. L. Zubair. (2017). Analysis of Historical Flooding Incident in Akurana. FECT என்ற ஆய்வறிக்கையில் இருந்து பெறப்பட்டுள்ளன.

வெள்ளத்திற்கான காரணம் என பரவலாகச் சொல்லப்படும் காரணம் தான் பொல்கொல்லை அணை. பொல் கொல்லை அணையின் வான்கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப் படாததனா லேயே வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது எனச் சொல்லப்படுகிறது. உண்மையில் இக்கருத்தில் உண்மை இருக்கிறதா?

அக்குறணை பொல்கொல்லை அணையில் இருந்து பத்து மீட்டர் (அண்ணளவாக 33 அடிகள்) உயரத்தில் இருக்கிறது. அதாவது மூன்று மாடிக் கட்டிடத்தின் உயரம். நம் அனைவருக் கும் தெரிந்த இலகுவான பௌதிகவியல் தான் திறந்த ஒரு இடத்தில் நீர் நிரம்பும் பொழுது அனைத்து இடங்களிலும் ஒரே மட்டத்தில் தான் நீர் இருக்கும். அப்படி யானால் அணையைச் சூழ நீர் 33 அடி உயராமல், அக்குறணையின் உயரத்தை நீர் மட்டம் அடைய முடியாது.

அக்குறணையில் ஐந்து அடிக்கு நீர் நிரம்புவதானால் 33 உடன் இன்னும் ஐந்து அடிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் கட்டுகஸ் தொட்டை, மடவலை, கண்டி என பல இடங்கள் நீரில் மூழ்கிய பின்னரே அக்குறணை நீரில் மூழ்க வேண்டும். எனவே சட்டவிரோதக் கட்டிடங்களை நிர்மாணித்திருப்பவர்கள் பொது மக்க ளின் காதில் பூ சுத்த முயற்சிக்கும் விடயமாகவே இதை நோக்க வேண்டி இருக்கிறது.

அக்குறணையின் ஊடாகச் செல்லும் பிங்கா ஓயாவின் ஆழம் குறைவதற்கு அணை ஒரு காரணம் எனவும் சில கருத்துகள் நிலவுகின்றன. பொதுவாக நீர்த்தேக்கம் ஒன்று நிறுவப்படும் பொழுது நீர் நிலையாக நிற்பதால் அதன் நீர்மட்டத்தின் உயரத்திற்கு சமனான அந்த நீர்த்தேக்கத்துடன் இணைந்திருக் கும் நீர்ப் பரப்புகளிலும் மண்படைகள் ஏற்படுவது உண்டு. அந்த வகையில் கட்டுகஸ்தொட்டைப் பகுதியில் கிளை ஆறுகளிலும் வண்டல் படைகள் ஏற்படு வதற்கு அணை காரணமாக இருக்கிறது என்பது உண்மை. என்றாலும் 33 அடி உயரத்தில் இருக்கும் அக்குறணையில் ஆறுகளில் வண்டல் படிவுகள் ஏற்படுவ தற்கு அணை காரணமாக இருக்க முடியாது.

வெள்ளத்துக்கு அணை காரணம் அல்ல என்ற உண்மையை மேற்குறிப் பிட்ட ஆய்வின் தரவுகளும் உறுதிப் படுத்துகின்றன. 1972 ஆம் ஆண்டி லேயே இந்த அணை கட்டப்பட்டுள் ளது. ஆனால் 2001 ஆம் ஆண்டு தொடக் கம் அதாவது 29 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் வெள்ளப்பெருக்குகள் அடிக்கடி ஏற்பட ஆரம்பித்துள்ளது. 1978 ஆம் ஆண்டு வெள்ளம் ஏற்பட்ட பொழுதிலும் அது ஒரு அசாதாரண கால நிலையிலேயே நிகழ்ந்துள்ளது. 1978 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட கடும் புயலின் போது அக்குறணைப் பகுதியில் பெய்த 263 மில்லி மீட்டர் கன மழையின் போதே இவ்வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. எனவே அசாதா ரண காலநிலையில் ஏற்பட்ட வெள்ளம் என்பதால் அதை நாம் ஏனைய வெள் ளங்களில் இருந்து வேறு படுத்தியே நோக்க வேண்டும்.

காலநிலை மாற்றமே வெள்ளத்திற் கான காரணமாக இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. காலாநிதி லரீப் குழுவினரின் அறிக்கையின் படி, மழை வீழ்ச்சியின் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழவில்லை. எனவே அது காரணமாக இருக்க முடியாது. அத்துடன் அதை பின்வரும் தரவுகளும் உறுதிப் படுத்துகின்றன.

1990 ஆண்டு 162 மி.மீ. மழையும் 1996 ஆம் ஆண்டு 161 மி.மீ. மழையும் பதிவாகி இருந்த போதிலும் எந்த வெள்ளப் பெருக்கும் ஏற்படவில்லை. ஆனால் 2001 ஆம் ஆண்டு 109 மி.மீ. மழையின் போதே வெள்ளம் ஏற்பட் டுள்ளது. 2006, 2014 ஆம் ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் முறையே 63 மி.மீ., 68 மி.மீ. ஆகிய சிறிய மழை வீழ்ச்சிக்கே வெள்ளப் பெருக்கு ஏற்பட் டுள்ளது. 29 ஆம் திகதி பெய்த மழை கூட 73 மி.மீ. ஆக பதிவாகியுள்ளது. எனவே இவ்வெள்ளப் பெருக்குகளுக் குக் காரணம் அதிக மழை வீழ்ச்சி அல்ல என்ற முடிவுக்கு நாம் வர முடியும். அப்படியானால் உண்மையில் வெள்ளப் பெருக்கிற்குக் காரணம் என்ன?

ஆய்வுகளின் படி அக்குறணையில் நிலப்பாவனையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதில் அதிக கட்டிடங்கள், பாதைகள், கொங் றீட் கான்கள் என்பன முக்கிய காரணங் களாக அமைந்துள்ளன, இவை நீர் நிலத்தினுள் உறிஞ்சப்படும் அளவு குறைவடைவதற்குக் காரணமாக உள்ளன. முன்னைய காலங்களில் மழை நீர் வீடுகளில் தொட்டிகளில் சேகரிக்கப் படும் நிலை இருந்தது. அவ்வாறான நிலை இன்று இல்லை. அதேபோல் தோட்டங்களில் குறுக்காக கான்கள் அமைத்து நீரை நிலத்திற்குள் செலுத்தும் நிலை இன்று இல்லாமல் போய் உள் ளது. இவ்வாறான காரணங்கள் மழை நீர் உடனடியாக ஆற்றை வந்தடைவதற் குக் காரணமாக அமைகிறது.



மழை நீர் உட்னேயே ஆற்றை வந்தடையாமல் தாமதமாக மெது மெதுவாக ஆற்றை சென்றடையும் வகையில் என்ன செய்ய முடியுமோ அவற்றை நாம் செய்ய வேண்டும். அது வெள்ளப் பெருக்கை குறைப்பது மட்டுமல்லாது ஆற்றில் தொடர்ந்து நீர் ஓடுவதற்கும் காரணமாக அமையும். முழு அக்குறணை மக்களும் கூட்டாகச் செயற்படுவதன் மூலமே எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்குகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

மரங்களின் அளவு குறைந்து வருவ தால் நிலத்தில் நீரை தேக்கி வைக்கும் தன்மை குறைவதுடன் மண் அரிக்கப் பட்டு ஆற்றை வந்தடைகிறது. கட்டிட நிர்மாணத்திற்காக வெட்டப்படும் மண் மழை காலங்களில் ஆற்றை வந்தடை கிறது. இதன்காரணமாக ஆற்றின் ஆழம் குறைகிறது. ஊரின் உயர்ந்த பகுதிகளில் திண்மக் கழிவுகள் குறிப்பாக பொலிதீன் போன்றவை முறையாக அகற்றப்படாத தால் அவையும் மழை காலங்களில் ஆற்றை வந்தடைகின்றன. இக்கழிவுகள் நீர் ஓட்டத்திற்குத் தடையாக இருந்து மென்மேலும் ஆற்றில் மண் படிவதற் கும் ஆற்றின் ஆழம் குறைவதற்கும் காரணமாக அமைவதுடன் மழை நேரங் களில் நீர் வேகமாக வெளியேறுவதற் குத் தடங்களாகவும் அமைகின்றன.

முன்பை விட அதிக நீர் ஆற்றை வந்தடைகிறது. ஆனால் நீர் வடிந்தோடு வதற்கான இடம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. அதற்குக் காரணம் ஆற்றின் மீது அமைக்கப்பட்டி ருக்கும் கட்டிடங்களும் பாலங்களு மாகும். ஆற்றின் மீது தூண்கள் எழுப்பப் பட்டு கட்டிடங்களும் பாலங்களும் அமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க லாம். அது நீர் வேகமாக வெளியேறு வதைத் தடுக்கின்றது. இது வெள்ளம் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

இவ்விடத்தில் பிங்கா ஓயாவுக்குக் குறுக்கான பாலங்களின் எண்ணிக்கை எவ்வாறு அதிகரித்துள்ளது என்பதை நோக்குவது பொருத்தமாக இருக்கும். 2010 ஆம் ஆண்டில் 28 பாலங்களே இருந்தன. அது 2016 ஆம் ஆண்டு, வெறும் ஆறு வருடங்களில் 43 ஆக அதிகரித்தி ருந்தது. அத்துடன் பாலங்கள் உரிய நிர்ணயங்களுக்கு ஏற்ப கட்டப்படு வதில்லை. ஒரு பாலம் அமைப்பதா னால் ஆற்றினுல் 40 அடிக்குட்பட்டு எந்த ஒரு தூணும் அமைக்க முடியாது. ஆனால் அக்குறணையில் அமைக்கப் பட்டிருக்கும் பாலங்களில் இடைக் கிடையே தூண்கள் இருப்பதை அவதா னிக்கலாம். இதற்குத் தீர்வு என்ன? அரசினால் செய்யப்பட வேண்டிய பகுதி, மக்கள் செய்ய வேண்டிய பகுதி என இரண்டு உள்ளன.

சட்டவிரோதமான அனைத்துக் கட்டிடங்களையும் பாலங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதே அதிகாரிகளின் பணியாகும். அது போன்று மக்களுக்கும் பல்வேறு பொறுப்புகள் உள்ளன. கட்டிடங்கள் கட்டும் பொழுது அது நிலத்தினுள் நீர் செல்வதைத் தடுக்காதவாறு கட்டப்பட வேண்டும். கூரைகளில் சேரும் நீரை முடியுமான அளவு நிலத்தில் செலுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வீட்டு முற்றங்களுக்கு கொங்றீட் இடு வதைத் தவிர்க்க வேண்டும். கொங்றீட் கான்களைக் குறைத்து முடியுமான அளவு சாதாரண மண் கான்களை அமைக்க வேண்டும்.

அக்குறணையில் உள்ள அனைவரும் முக்கியமாக குருகொடை, மல்வான ஹின்ன, தெழும்புகஹவத்தை, புழுகொகதென்னை போன்ற நீரேந்து பிரதேசங்களில் (Catchment Area) இருப்பவர்கள் மழைநீர் சேகரிக்கும் முறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். வீட்டுத் தோட்டங்களில் நீரோட்டத்துக்கு குறுக்காக கான் வெட்டும் முறையை மீண்டும் ஆரம் பிக்க வேண்டும். அதன் மூலம் நீரை நிலத்தினுள் செலுத்துதல், மண் அரித்துச் செல்லப்படல் மற்றும் நீர் நேரடியாக ஆற்றைச் சென்றடைவதைத் தடுக்க முடியும். அத்துடன் அதிகமாக மரங் களை நட வேண்டும். கட்டிட நிர்மா ணங்களுக்காக மண் வெட்டும் பொழுது அவை மழையில் அடித்துச் செல்லாத வகையில் ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

இவை சில ஆலோசனைகள் மட்டுமே, மழை நீர் உடனேயே ஆற்றை வந்தடையாமல் தாமதமாக மெது மெது வாக ஆற்றை சென்றடையும் வகையில் என்ன செய்ய முடியுமோ அவற்றை நாம் செய்ய வேண்டும். அது வெள்ளப் பெருக்கை குறைப்பது மட்டுமல்லாது ஆற்றில் தொடர்ந்து நீர் ஓடுவதற்கும் காரணமாக அமையும். முழு அக்குறணை மக்களும் கூட்டாகச் செயற்படுவதன் மூலமே எதிர்காலத்தில் வெள்ளப்பெருக் குகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.



அதிகாரிகளால் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் விளை வாகவே மாத்தளை - கண்டி வீதியில் அமைந்துள்ள அக்குறணையில் பிங்கு ஓயா பெருங்கெடுத்து சுமார் 8 அடி உயரம் வரை வெள்ளம் ஏற்பட்டது என அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சுமார் 75,000 அளவிலான மக்கள் வசிக் கும் அக்குறணைப் பகுதியில் 18 வருடங் களில் ஏற்பட்ட பாரிய வெள்ளமாகக் குறிப்பிடப்படும் இவ் அனர்த்தத்தின் ஊடாக 200க்கும் அதிகமான கடை களும், சுமார் 50 வாகனங்களும் பாதிப் படைந்துள்ளதுடன், சுமார் 250 மில்லி யன் ரூபாய்க்கு அதிகமான சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் மேலும் குறிப்பிடப்படுகின்றது.

செப்டம்பர் 29ஆம் திகதி பெய்த பலத்த மழையின் போது பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். ''அரைமணி நேரத்தில் எனது கடையில் 5 அடி உயரத்துக்கு நீர் நிரம்பியது. அத்துடன் சில இடங்களில் 8 அடி வரை வெள்ளம் ஏற்பட்டிருந்தது'' என அக்குரணை நகரில் New Light Glass and Electricals கடையின் உரிமையாளர் சலாஹுதீன் முஹம்மட் ரூமி குறிப்பிட்டார்.

வெள்ளம் வருவதானால் சுமார் 4 மணி நேரமேனும் மழை பொழிய வேண்டும். அதன் பின் வெள்ளம் சிறிது சிறிதாக உயர்ந்து வரும். பாதை மட்டத் துக்கு வரும் போது மக்கள் தமது உடைமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். ஆனால் இம்முறை ஒன்றரை மணித்தி யாலங்களிலேயே மழை பொழிந்து 8 அடி உயரத்தில் வெள்ளத்தை ஏற்படுத்தி விட்டது என அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சூறாவளியின் போது 1978 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக் கிற்குப் பின்னர் 2001 ஆம் ஆண்டு வரை எந்தவித வெள்ளப்பெருக்கும் ஏற்பட வில்லை எனினும் அதன் பின்னரான 17 ஆண்டுகளில் 14 வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டுள்ளதாக சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை தொழில்நுட்ப அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன. அக்குரணை நகரினூடாகச் செல்லும் பிங்கா ஓயா (Pinga Oya) பெருக்கெடுப்பதன் மூலமே அக்குரணை நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.

வெள்ளம் ஏற்பட்டு 14 மணித்தியா லங்களில் நீர் மட்டம் நில மட்டத்தை அடைந்திருந்ததுடன் சுத்திகரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விஷேட அதிரடிப்படையினரின் உதவி யுடன் மக்கள் சேதத்துக்கு உட்பட்ட பகுதியில் தேங்கியிருந்த சேதமடைந்த பொருட்கள் சேறு மற்றும் அழுக்குகளை அகற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீருக்குத் தீர்வு தரும் அல்-ஹாபிழ் ஷாகிர் அஹ்மத்

• அனஸ் அப்பாஸ்



கேகாலை மாவட்ட, ரம்புக்கனை நகரின், ஹுரிமலுவ கிராமத்தைச் சேர்ந்த அப்துல் ஜப்பார் - பாத்திமா ரிஸ்மினா தம்பதிகளின் அன்புப் புதல்வர் ஏ.ஜே. ஷாகிர் அஹ்மத், தாருல் உலூம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2018 க.பொ.த. சாதாரண தர கற்கை மாணவர் ஆவார். இவர் ''வன்நீரை குடிநீராக மாற்றப் பயன்படும் வடிப்பான்'' (Water Recycling and Reusing Machine) ஒன்றைக் கண்டு பிடித்து சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை, வடக்கு - கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் சுமார் 52 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்வதாக அரசு இடர் முகாமைத்துவ மையம் இறுதியாக வெளியிட்டுள்ள தகவல்களில் கூறப்பட்டுள்ளன. இந்த தொகையில் புத்தளம், அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்படாத நிலையில் இந்த எண்ணிக்கை இதனை விட அதிகம் என சுயாதீன தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஜனாதிபதியின் சொந்த மாவட்டமான பொலன்னறுவ மாவட்டத்திலே கூடுதலானோர் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொள்கின்றார்கள். இம்மாவட்டத்தில் மட்டும் 23 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 1 இலட்சத்து 11 ஆயிரம் பாதிக்கப்பட்டுள்ளனர்.




வடக்கு - கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை கிழக்கு மாகாணத்திலே கூடுதலான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இம்மாகாணத்தில் 20 ஆயிரத்து 500 குடும்பங்களை சேர்ந்த 70 ஆயிரம் பேர் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்வதாக இடர் முகாமைத்துவ மையத்தின் தகவல் குறிப்பு கூறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 16 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட 58 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் தெரிவிக்கப்படுகின்றது.

"Water Stress" "Zero Water City" ஆகியன சர்வதேச பேசுபொருளாகி, நீர் குறித்த சர்வதேச கரிசனை மிகைத்துள்ள சூழலிலேயே ஒரு இளம் கண்டுபிடிப்பாளர் தன்னாலான ஒரு தீர்வை இங்கு வெளிப்படுத்தி இருக்கின்றார்.


16 வயதேயான ஷாகிர் அஹ்மத் பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கமுடையவர். அவற்றில் வரும் சாதனையாளர்கள் பற்றிய தகவல்களே அவரை ஒரு கண்டுபிடிப்பாளராக மிளிர வேண்டுமென்ற ஊக்கத்தை கொடுத்திருக்கின்றன.

ஆகில் அஹ்மத், பாத்திமா ஹம்னா ஆகியோரின் மூத்த சகோதரரான ஷாகிர் அஹ்மத் கண்டுபிடித்துள்ள வன்நீரை குடிநீராக மாற்ற பயன்படும் வடிப்பான், குடிக்கப் பயன்படுத்த முடியாத வன்நீரை, சுத்திகரித்து குடிநீராக மாறுகின்றது.

இவ்வடிப்பான் சுகாதாரத்திற்கு உகந்த முறையில் களிமண்ணைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் நீரை ஊற்றும் பகுதியில் Ceramic - Dome எனும் சுத்திகரிப்பான் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் நீரின் வேகம் குறைக்கப்படும், சில பற்றீரியாக்களும் அழிக்கப்படும். அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட நீர், அதில் உள்ள சிறு துளையினூடாக வடிந்து, முற்றிலும் இயற்கை மூலிகைப் படைகளினால் அமைக்கப்பட்ட வடிகட்டி மூலம் நன்கு சுத்திகரிக்கப்படும். (அதில் உள்ள 9 படைகளினாலும் வன்நீர் சுத்திகரிக்கப்படும்போது, வன்நீரில் உள்ள இரசாயன பொருட்கள் முற்றாக அழிந்து குடிநீராக மாறிவிடும்)

பின்னர், அந்த குடிநீரை கீழே உள்ள பாத்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள Heater Coil மூலம் நன்கு கொதிக்க வைக்கப்பட்டு, அதில் உள்ள நுண்ணுயிர்களை அழித்து, பிறகு ஒரு சிறிய இயந்திரத்தின் ஊடாக நீர் அடுத்த பாத்திரத்திற்கு கடத்தப்படும். பிறகு, எமக்கு சுத்திகரிக்கப் பட்ட குடிநீரை பருக முடியும். (20 நிமிடங்களில் 2 லீட்டர் நீரை சுத்திகரிக்க முடியும்)

இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் அதிகரித்து வருகின்றனர். இதற்குத் தீர்வாக எளிய வீட்டு பொறிமுறையொன்றாகவும் இது அமைவதாக அவர் தெரிவிக்கின்றார். மேலும், தற்போது பாவனையில் உள்ள பிளாஸ்டிக் வடிப்பான்கள் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கின்றன. இதனைத் தீர்க்கும் விதமாக இயற்கைத் தீர்வாகவும் இவ்வடிப்பான் அமைகின்றது.



கண்டி, ஹக்கானியா அரபுக் கல்லூரியில் நான்கு வருடங்களில் புனித அல்-குர்ஆனை மனனமிட்ட 'அல்-ஹாபிழ்' பட்டமும் பெற்ற ஷாகிர் அஹ்மத் ''சஹஸக் நிமவும் -2018'' கண்டுபிடிப்பாளர் போட்டியில் மாகாண மட்ட சான்றிதழ் வென்றிருக்கின்றார். 2018 செப்டம்பர் 25 தொடக்கம் 28 ஆம் திகதி வரை கொழும்பு ரோயல் கல்லூரியில் நடைபெற்ற "Spark" கண்காட்சியில் கலந்துகொண்டு இவரது கண்டுபிடிப்புக்காக பணப்பரிசில், சான்றிதழ், நினைவுச் சின்னம் என்பவற்றை வென்றுள்ளார்.

மேலும், தேசிய கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி கொழும்பு BMICH மண்டபத்தில் மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அதிதியாக பங்குபற்றும் தேசிய கண்டுபிடிப்பாளர் தின நிகழ்வின் இறுதி முடிவுகளுக்கும் காத்திருக்கின்றார். இதில் தேசிய சாதனைகளுக்கான ஜனாதிபதி விருதும், 'சஹஸக் நிமவும் - 2018' விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

2018 ஆம் ஆண்டின் மீலாத் விழா போட்டியில் குர்ஆன் மனனப் போட்டியில் மாவனெல்லை கல்வி வலயத்தில் 2 ஆம் இடத்தையும், மாகாண மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் வென்றுள்ளார். இது தவிரவும் பல சான்றிதழ்களையும் இவர் வென்றுள்ளார்.


சாதாரண தர பரீட்சையை அடுத்து, ஹாபிழ் கற்கைநெறியில் உள்ள கிர்தான் கற்கையை பூர்த்தி செய்வதுடன், புதிய பல கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதே இவரது இலட்சியமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, வன்நீரை குடிநீராக மாற்ற பயன்படும் வடிப்பானை இன்னும் முன்னேற்றி, அதில் உபயோகிக்கப்படும் சக்தி வலுவை குறைத்து உணரிகள் (Censors) பொருத்தி, Remote System மூலம் இயக்குவதற்கு சிந்தித்துள்ளார். மட்டுமன்றி, எரிபொருள் பாவனையைக் குறைத்து சூழலை பாதுகாக்கக்கூடிய வகையில் கடல் நீரால் இயங்கும் மோட்டார் வாகனம் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்துள்ளார்.

இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை தனது முன்மாதிரியாகக் கொண்ட ஷாகிர் அஹ்மத், அல்ஹம்துலில்லாஹ்! எல்லாம் வல்ல இறைவனுக்கும், தனது பெற்றோருக்கும், சகோதர, சகோதரிகளுக்கும் (குறிப்பாக ஆகில் அஹ்மத்), பாடசாலை அதிபர் கௌரவ ஜாஹிர், ஆசிரியைகளான கன்சுல், அஸீஸா, பதுரியா, பாஹிரா, மர்ஜூனா ஆகியோர்க்கும் ஆசிரியை அஸீஸாவின் கணவர் ஷஹ்மிக்கும், ஆசிரியர்களான அஹ்ஸன், சுக்ரி ஆகியோர்க்கும், மாவனெல்லை வலய புத்தாக்கப் போட்டிக்கு பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் ஜயதிலக அவர்களுக்கும், உறவினர்களுக்கும், தந்தையின் நண்பர்களுக்கும், தனது நண்பர்களுக்கும், குறிப்பாக இன்ஸாப், மபாஸ் ஆகியோருக்கும், ஊர்மக்கள், நலன்விரும்பிகளுக்கும், பாடசாலைக்கே வந்து கண்டுபிடிப்பு சார் ஊக்கம் வழங்கி வழிகாட்டிய முன்மாதிரியும், மீள்பார்வை பத்திரிகையில் கண்டுபிடிப்பாளராக அறிமுகம் செய்யப்பட்ட சகோதரருமான ஸகி லதீப் அவர்களுக்கும் நன்றிகளை முன்வைக்கின்றார்.

''காலம் பொன்னானது. அதை பல முறை உணர்ந்திருக்கின்றேன். துரதிஷ்டவசமாக ஒரு சில கண்டுபிடிப்புக்கள் மட்டுமே முஸ்லிம் சமூகத்திலிருந்து தேசிய மட்ட அங்கீகாரத்துக்கு வருகின்றன. கல்வியில் சிறந்த வரலாற்றைக் கொண்ட நாம் இன்று பின்தங்கியுள்ளோம். மாற்றம் எம்மிலிருந்து உருவாக வேண்டும். இளம் வயதில் இருந்தே அதற்காக நாம் தயாராக வேண்டும்'' என்று இளையோர்க்கான அறிவுரை ஒன்றையும் இவர் முன்வைத்து விடைபெறுகின்றார்.

---

கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (11)



# பத்வாவுக்கும் ஆய்வுக்குமான ஐரோப்பிய கவுன்சில்

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

### தோற்றம்:

ஐரோப்பாவில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற அதே நேரம் ஐரோப்பாவை நோக்கிய முஸ்லிம்களின் வருகையும் தொடராக அதிகரித்து வருகின்றது. இதனால் அங்கு முஸ்லிம்கள் பல்வேறு புதிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வதும், ஐரோப்பிய மக்களுக்கு கால மாற்றங்களை கருத்திற் கொண்டு இஸ்லாத்தை எத்திவைப்பதும் முஸ்லிம் உம்மாவின் அறிஞர்களது கடமையாகும். கால, இட, சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப பத்வாக்களில் மாற்றங்கள் ஏற்பட முடியும் என்ற சட்டவிதி இதில் நோக்கத்தக்கது.

இவ்வகையில் 1997ம் ஆண்டு மார்ச் மாதம் 29-30ம் திகதிகளில் லண்டன் நகரில் பத்வாவுக்கும் ஆய்வுக்குமான ஐரோப்பிய கவுன்சிலின் அங்குரார்ப்பன நிகழ்வு நடைபெற்றது. தலைசிறந்த 15ற்கும் மேற்பட்ட அறிஞர்கள் இதில் கலந்து கொண்டனர். ஐரோப்பாவின் இஸ்லாமிய அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஒழுங்கு செய்திருந்தது.

இந்த பத்வா கவுன்சிலின் தலைவராக அல்லாமா யூசுப் அல் கர்ளாவி அவர்களும், அதன் பொதுச் செயலாளராக அயர்லாந்தைச் சேர்ந்த கலாநிதி ஹுஸைன் முஹம்மத் ஹலாவா அவர்கள் உள்ளனர். இதன் உதவித் தலைவராக ஈராக்கைச் சேர்ந்த கலாநிதி அப்துல்லாஹ் அல்ஜுதைஃ இருக்கின்றார்.

### இலக்குகள்:

1. ஐரோப்பாவில் வாழும் உலமாக்களுக்கு மத்தியில் நெருக்கத்தை ஏற்படுத்துவதும், அவர்களுக்கு மத்தியில் சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் காணப்படும் நிலைப்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான முயற்சியைச் செய்தலும்.

2. ஐரோப்பிய முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்களை ஐரோப்பிய சமூகங்களுடன் கலந்து வாழவும் ஷரீஆவின் சட்டங்கள், அதன் நோக்கங்களுக்கு ஏற்ப கூட்டு இஜ்திஹாதின் அடிப்படையில் பத்வாக்களை வெளியிடலும்.

3. ஷரீஆவின் நோக்கங்களையும், மனித சமூகத்தின் நலன்களையும் அடையும் வகையில் ஐரோப்பாவில் ஏற்படும் புதிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணும் வகையில் ஆய்வுகளை வெளியிடல்.

4. இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகள் மூலமாகவும், அதன் சீரான பத்வாக்கள் மூலமாகவும் பொதுவாக ஐரோப்பிய முஸ்லிம்களையும், குறிப்பாக அங்கு வாழும் வாலிபர்களையும் வழிகாட்டல்.

### அங்கத்துவ நிபந்தனைகள்

1. ஷரீஆ துறைசார்ந்த நிறுவனமொன்றில் பயின்ற தகுதியைப் பெற்றிருத்தல். அல்லது உலமாக்களின் சபைகளில் படித்து அரபு மொழித் திறனுடன் தகுதி பெற்றிருத்தல்.

2. நன்னடத்தை உடையவராகவும், இஸ்லாமியப் போதனைகளை கடைபிடிப்பவராகவும் இருத்தல்.

3. ஐரோப்பாவில் வாழ்கின்றவராக இருத்தல். அல்லது இஸ்லாமல்லாத தேசங்களில் வாழும் முஸ்லிம்களின் விவகாரங்களில் கவனம் செலுத்துபவராக இருத்தல்.

4. ஷரீஆ அறிவுடன் நடைமுறைசார் அறிவையும் பெற்றவராக இருத்தல்.

5. சபையின் பெரும்பான்மையினர் இவரது அங்கத்துவத்தை அங்கீகரித்தல்.

### பத்வாவின் மூலமும், வரையறைகளும்:

கீழ்வரும் அம்சங்களை கவனத்தில் கொண்டு பத்வாவுக்கும் ஆய்வுக்குமான ஐரோப்பிய கவுன்சில் தனது பத்வாவை வெளியிடுகின்றது.

1. பெரும்பான்மை அறிஞர்கள் உடன்பட்ட சட்ட மூலாதாரங்களான அல்குர்ஆன், சுன்னா, இஜ்மா, கியாஸை சட்ட மூலாதாரங்களாக எடுத்தல்.

2. கருத்து வேற்றுமையுள்ள சட்ட மூலாதாரங்களான இஸ்திஹ்ஸான், மஸ்லஹா முர்ஸலா, ஸத்துஸ் ஸராஇஃ, ஸஹாபிகளின் கூற்றுக்கள் போன்றவற்றை சட்டத்திற்கு ஆதாரமாக எடுத்தல். குறிப்பாக இவற்றில் சமூக நலன் காணப்படுமாக இருந்தால்.

3. நான்கு மத்ஹபுகளும், அறிஞர்களின் ஏனைய மத்ஹபுகளும் சட்டத்தில் கிடைத்த பொக்கிசங்களே. இவற்றில் சரியான ஆதாரமுள்ள, தெளிவான நலனுள்ள கருத்துக்களை தெரிவு செய்தல்.

4. சரியான முறையில் ஆதாரம் எடுத்தல், நடைமுறையை விளங்கி, ஷரீஅத்தின் இலகுத்தன்மையை கருத்திற் கொண்டு பத்வா வழங்கல்.

5. ஷரீஆவின் நோக்கங்களான மகாஸிதுகளை கருத்திற் கொள்ளலும், இவற்றை அடையும் வகையில் ஷரீஆவுடன் முரண்படும் தடுக்கப்பட்ட மாற்று வழித் தந்திரங்களை விட்டும் விலகியிருத்தலும்.

6. கவுன்சிலின் அனைவரின் ஒப்புதலுடன் அல்லது சமுகம் தந்தோரில் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஒப்புதலுடன் பத்வா வெளியிடப்படும். மாற்றுக் கருத்துடையோர் சபையில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும். ஆனால் இக்கருத்துக்கள் பிரசுரிக்கப்பட மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் மத்ஹபுப் விவகாரம்

## இணக்கப்பாட்டிற்கான சில முன்மொழிவுகள்-01

• அஷ்ஷெய்க்
அறபாத் கரீம் (நளீமி) MA



முஸ்லிம் சட்டத்தில் கூடிய கவனத்தை மத்ஹபுப் விவகாரம் பெறுகிறது. இஸ்லாமிய பிக்ஹை சட்ட ஏற்பாடுகளுக்குள் கொண்டுவரும் போது கருத்து மயக்கங்களின்றி, தெளிவான தீர்ப்புக்களை கொண்டவையாக அவை காணப்பட வேண்டும் என்பது சட்ட நியதியாகும். குறித்ததொரு சட்ட விவகாரத்தில் இஸ்லாமிய பிக்ஹ் பல்வேறு நிலைப்பாடுகள் கொண்டதாகக் காணப்படும் போது குறித்ததொரு சட்ட மத்ஹபை மாத்திரம் சட்டமாக்குவது ஒரு சவாலாக நோக்கப்படுகிறது. இதே சிக்கல்கள் இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் மறுசீரமைப்பிலும் ஏற்பட்டுள்ளன.

இஸ்லாமிய வரலாற்றில் ஆரம்ப காலப் பிரிவுகளில் சட்டப் பிரச்சினைகள் குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் தகுதி வாய்ந்தவர்களால் தீர்க்கப்பட்டன. காலப்போக்கில் இஸ்லாமிய பிக்ஹின் இயல்பான போக்கிற்கேற்ப பல்வேறு கருத்துக்கள், சட்ட மரபுகள் தோன்றி சட்ட விவகாரங்களைக் கையாள்வதற்கு எந்த மத்ஹபை அடிப்படையாகக் கொள்வது என்ற சட்டச் சிக்கல் தோன்றியது.

மிகவும் பொதுவாக குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் தீர்க்கப்பட்டு வந்த வழக்கு விசாரணைகள் அப்பாஸியக் காலப்பிரிவில் குறித்ததொரு பிக்ஹு நூலை அடிப்படையாகக் கொண்டு அல்லது எல்லோருக்கும் பொதுவான சட்டமொன்றைத் தயாரித்து, அதனூடாக வழக்குகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற பிரேரணைகள் முன்மொழியப்பட்டன. அப்பாஸி கலீபாக்கலான அபூ ஜஃபர் மன்ஸூர், ஹாரூன் ரஷீத் முதலானோர் இமாம் மாலிகின் 'முஅத்தா' என்ற ஹதீஸ் மற்றும் பிக்ஹை உள்ளடக்கிய நூலை அரசாங்கத்தின் சட்ட நூலாக ஆக்குவது தொடர்பாக ஆலோசனையை இமாம் மாலிகிடம் தெரிவித்த போது குறித்ததொரு நூலை மாத்திரம் சட்ட அடிப்படையாகக் கொள்வதை அவர் அங்கீகரிக்கவில்லை.

பல்வேறு அறிஞர்களது கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு சட்ட சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டும் என்ற விரிந்த சிந்தனையை இமாம் மாலிக் கொண்டிருந்தார் என்பதற்கு இது சான்றாகும். அதே போன்று அப்துல்லாஹ் இப்னு முக்பிஃ கலீபா மன்ஸூரிடம் பொதுவானதொரு சட்ட நூலொன்றை தயாரித்து அதனை அடிப்படையாகக் கொண்டு வழக்குகள் கையாளப்பட வேண்டும் என்ற பிரேரணையை முன் வைத்த போதிலும் அதுவும் ஏதோவொரு காரணத்தினால் அங்கீகாரம் பெற்றதொரு கருத்தாக காணப்படவில்லை.

அப்பாஸிய ஆட்சியில் ஹனபி மத்ஹப் சிந்தனை செல்வாக்குப்பெறத் துவங்கியது. ஹனபி மத்ஹபை சார்ந்த இமாம் அபூ யூஸுப் அரசின் பிரதான காழியாக நியமிக்கப்பட்ட போது ஹனபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு வழக்குகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலை காணப்பட்டது.

குறித்ததொரு மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்புக்களைச் சொல்லும் கலாசாரம் இஸ்லாமிய வரலாற்றில் அப்பாஸிய கிலாபத்தின் இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றியதோடு, தொடர்ந்து வந்த காலப்பிரிவுகளில் குறித்த மத்ஹப் சார்ந்து நீதிமன்றங்கள் நடாத்தப்பட்டதை வரலாறு சான்று பகர்கின்றது.

இஸ்லாமிய பிக்ஹை சட்ட ஏற்பாடுகளுக்குள் கொண்டு வந்தபோது மத்ஹப் விவகாரம் பல்வேறுபட்ட வடிவங்களைப் பெற்றிருந்ததை வரலாற்றில் முஸ்லிம் சட்டம் குறித்து நோக்கும் போது புரிந்துகொள்ள முடிகின்றது.

### I- குர்ஆன், ஸுன்னாவை சட்டத்தின் அடிப்படையாகக் கொள்ளல்.

நபி (ஸல்) அவர்கள், ஸஹாபாக்கள், மற்றும் ஆரம்ப காலங்களில் குர்ஆன், ஸுன்னாவை நேரடியாக அணுகி சட்ட விவகாரங்கள் தீர்க்கப்பட்டன.

குறித்ததொரு மத்ஹபை அல்லது சட்ட நூலொன்றை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றங்கள் முன்னெடுக்கப்படுவதை ஆதரிக்காத போக்கு இஸ்லாமிய வரலாற்றில் ஆரம்ப காலப்பகுதிகளில் செல்வாக்குச் செலுத்தியிருந்தமையைக் காணலாம். இமாம் மாலிகின் முஅத்தாவை உத்தியோகபூர்வ சட்ட நூலாக ஆக்குவதற்கு இமாம் மாலிக் இணக்கம் தெரிவிக்காமை இதற்கு போதிய சான்றாகும்.

### II- குறிப்பிட்டதொரு மத்ஹபை சட்டத்திற்கான அடிப்படையாகக் கொள்ளல்.

குறிப்பிட்டதொரு மத்ஹபை மையப்படுத்தியதாக முஸ்லிம் சட்டம் வகுக்கப்பட்டு வழக்குகள் தீர்க்கப்படல் வேண்டும் என்றதொரு வடிவத்தையும் சட்ட வரலாறு கொண்டிருந்தது. அப்பாஸிய கிலாபத்தில் இமாம் அபூ யூஸுப் நீதிபதியாக நியமனம் பெற்ற போது ஹனபி மத்ஹபின் அடிப்படைகளைக் கவனத்திற் கொண்டு தீர்ப்பளிக்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டமை இதற்கு சான்றாகும்.

பொதுவாக அப்பாஸிய ஆட்சிக் காலத்திலும் துருக்கிய கிலாபத்திலும் ஹனபி மத்ஹபை அவ்வரசுகள் பிக்ஹில் பிரதிநிதித்துவப்படுதியமையினால் முஸ்லிம் சட்டம் இக்காலப் பிரிவுகளிலே ஹனபி மத்ஹபை மையம் கொண்டதாகவே இருந்தது. நவீன காலத்தில் 19 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய பொருளாதார சட்டங்களை உள்ளடக்கிய ''மஜல்லதுல் அஹ்காம் அல் அத்லிய்யா'' என்ற சட்ட நூல் உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தில் ஹனபி மத்ஹபை அடிப்படையில் வடிவமைக் கப்பட்டது.

### III- பிரதான நான்கு மத்ஹப்களையும் அடிப்படையாகக் கொள்ளல்.

அஹ்லுஸ் ஸுன்னாக்களின் பிரதான நான்கு மத்ஹப்களையும் கவனத்திற் கொண்டதாக முஸ்லிம் சட்டம் அமையப் பெற்றமை மற்றொரு வகை சட்ட ஒழுங்காகும். ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியின் காலத்தில் ஹனபி, மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி முதலான நான்கு சட்ட மரபுகளையும் கவனத்திற் கொண்டதாக பாடவிதானம், பத்வா மற்றும் சட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தமை முஸ்லிம் சட்டத்தின் மற்றொரு வடிவமாகும்.

நவீன காலத்தில் முதன் முதலாக துருக்கியில் 1917 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற முஸ்லிம் தனியார் சட்டமான ''குடும்ப உரிமைகள் சட்டம்'' வெறுமனே ஹனபி மத்ஹபை மாத்திரம் அடிப்படையாக கொள்ளாது நான்கு பிரதான மத்ஹபுகளையும் கவனத்திற் கொண்டு, அவற்றில் காலத்துக்கு மிகவும் பொருத்தமானவற்றை தெரிவு செய்து சட்டமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே போக்கையே எகிப்து முஸ்லிம் தனியார் சட்டம் கொண்டிருந்ததாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. எகிப்திய தனியார் சட்டம் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு திருத்தங்களைப் பெற்று வந்ததோடு நான்கு மத்ஹபுக்கு வெளியில் சென்றும் சட்டத் தீர்ப்புக்களை உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### IV- குறித்ததொரு நாடு குறித்ததொரு மத்ஹபை சட்டத்திற்கான அடிப்படையாகக் கொள்ளல்.

குறித்ததொரு நாடு குறித்ததொரு மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சட்டத்தை வகுப்பது மற்றொரு வகை சட்ட ஒழுங்காகும். கி.பி 16 ஆம் நூற்றாண்டில் உஸ்மானிய சாம்ராஜ்ய காலப்பிரிவில் எகிப்து, லெபனான், சிரியா, ஜோர்தான் முதலான நாடுகளது சட்டம் ஹனபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நவீன காலத்தில் சவூதி அரேபியா ஹன்பலி மத்ஹபையும் சிரியா, துருக்கி, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஹனபி மத்ஹபையும், சூடான், மொரோக்கோ மாலிக் மத்ஹபையும், இந்தோனேசியா, மலேஷியா முதலானவை ஷாபிஈ மத்ஹபையும் சட்ட அடிப்படையாக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### V- குறிப்பிட்ட மத்ஹபின் குறிப்பிட்ட சில நூல்களை சட்டத்திற்கான அடிப்படையாகக் கொள்ளல்.

குறிப்பிட்ட மத்ஹபின் குறிப்பிட்ட சில நூல்களை மையப்படுத்தி முஸ்லிம் சட்டம் அமைக்கப்பட்டமை மற்றொரு சட்ட ஒழுங்காகும். குறித்த மத்ஹபின் சில நூல்களை தேர்ந்தெடுத்து அவற்றினடியாக சட்ட ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருந்தன. ஸவூதி அரேபியாவில் ஹன்பலி மத்ஹபின் 'ஷரஹுல் முன்தஹா' மற்றும் 'ஷரஹுல் இக்னா' முதலான நூல்கள் உசாத்துணைகளாக காணப்பட்டன.

### VI- குறித்த மத்ஹபின் பலமான கருத்துக்களை மாத்திரம் சட்டத்தின் அடிப்படையாகக் கொள்ளல்.

குறித்த மத்ஹபின் பலமான கருத்துக்களை தேர்ந்தெடுத்து அவற்றினடியாக முஸ்லிம் சட்டத்தை உருவாக்குவது மற்றொரு வகை சட்ட ஒழுங்காகும். ஸூலைமான் அவ்வல் அல்லது ஸுலைமான் கானூனி என்றழைக்கப்பட்ட கி.பி 16 ஆம் நூற்றாண்டில் துருக்கி சாம்ராஜ்ய மன்னனது கட்டளையின் பேரில் ஹனபி மத்ஹபின் பல்வேறு சட்ட நிலைப்பாடுகளில் மிகவும் பலமானதை தெரிவுசெய்து அஷ்ஷெய்க் அஹ்மத் ஜலபி சுருக்கமாக ஹனபி பிகஹ் நூலொன்றை தயாரித்தார். 'முல்தகா அப்ஹூர்' என்று அந்நூல் அழைக்கப்பட்டது.

அதே போன்று இந்தியாவில் கி.பி 16 ஆம் நூற்றாண்டில் முஹலாய மன்னர் ஔரம்கஸீபின் கட்டளையின் பிரகாரம் ஆறு பாகங்களை கொண்ட ஹனபி மத்ஹபின் ''பதாவா ஹின்திய்யா'' அல்லது ''பதாவா ஆலம்கீரிய்யா'' என்ற நூல் தொகுக்கப்பட்டது. ஆனால் இந்த நூல்கள் அரச அங்கீகாரம் பெற்ற சட்ட நூல்களாக ஆக்கப்படவில்லை. இந்திய ஹனபி பிக்ஹ் நூல் சட்ட நூலின் வடிவமைப்பை பெற்றிருக்கவுமில்லை.

### VII - குறித்ததொரு மத்ஹபிற்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மத்ஹபுகளை துணையாகக் கொள்ளல்.

குறித்ததொரு மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சட்டத்தை வடிவமைப்பதோடு வேறு சில மத்ஹப்களையும் துணையாக கொள்வது மற்றொரு சட்ட ஒழுங்காகும்.

எனவே இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு ஒழுங்குகளில் சட்டத்தின் அடிப்படை காணப்பட்டதை தெளிவாக புரிந்துகொள்ள முடிகின்றது. எனவே சட்டத்தின் அடிப்படை (substantive law) இறுக்கமானதொரு அமைப்பைப் பெறாது ஒவ்வொரு காலப்பிரிவிலும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல வடிவங்களை கொண்டிருந்தமையை வரலாறு நிரூபிக்கின்றது. வரலாற்றில் பிரயோகிக்கப்பட்ட சட்ட அடிப்படைகளில் ஏதாவது ஒன்றை இலங்கை முஸ்லிம் சட்டத்திற்கு அடிப்படையாகக் கொள்வது ஷரீஆவுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்க முடியாது. இலங்கை சூழ்நிலைக்கு பொருத்தமானதொரு சட்ட அடிப்படையைத் தெரிவு செய்வதே இங்கு முக்கியமானதாகும்.

---

## ஜம்இய்யதுல் உலமா பத்வா வழங்கும் முறை

1924 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா 15 உப பிரிவுகள் ஊடாக முஸ்லிம் சமூகத்துக்கு பல பணிகளை ஆற்றி வருகின்றது. இவற்றில் பத்வா வழங்கும் பணி மிக மகத்தான ஒன்றாகும்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவில் பத்வா வழங்குவதற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் நாடளாவிய ரீதியில் துறைசார்ந்த ஆலிம்கள் அங்கம் வகிக்கின்றனர். ஷாபி மத்ஹபைச் சேர்ந்த ஆலிம்கள் பலர் இதில் இருப்பதுடன் ஹனபி மத்ஹபைச் சார்ந்தவர்கள் உட்பட தஃவா அமைப்புக்களைச் சேர்ந்த ஆலிம்களுமாக மொத்தம் 43 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

பத்வாக் குழு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நிறைவேற்றுக் குழுவால் தெரிவுசெய்யப்படுகிறது. மேலும் பத்வாவின் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக பத்வாக் குழுவிலிருந்து 13 ஆலிம்கள் அடங்கிய அவசர பத்வாக் குழுவும் நிறைவேற்றுக் குழுவால் தெரிவுசெய்யப்படுகின்றது.

ஜம்இய்யா ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் ஷாபி மத்ஹபின் அடிப்படையிலேயே பத்வாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2003.09.24 ஆம் திகதி நடைபெற்ற பத்வாக் குழுக் கூட்டத்திலும், 2017.01.12 ஆம் திகதி நடைபெற்ற பத்வாக் குழுக் கூட்டத்திலும் ஷாபி மத்ஹப் அடிப்படையிலேயே பத்வா வழங்க வேண்டும் என்ற விடயம் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதாரங்களை நோக்கும் விதம் வேறாக இருந்தாலும், நான்கு மத்ஹபுகளும் ஆதாரங்களை அடிப்படையாக வைத்தே மார்க்க விடயங்களைச் சட்டமாக்கியுள்ளன. நான்கு மத்ஹபுகளிலும் ஷாபி மத்ஹப் ஒரு நடுநிலையான மத்ஹப் மட்டுமல்லாமல் ஸுன்னாவுக்கு மிகவும் நெருங்கிய ஒரு மத்ஹபாகும் என்பதைக் கற்றறிந்த யாவரும் அறிவர். ஷாபி மத்ஹபில் ஏற்றுக் கொள்ளப்பட்ட (ராஜிஹான) கருத்தை பத்வாவில் கூறுவதுடன் தேவைப்படும் பட்சத்தில் ஏனைய மத்ஹபுகளின் கருத்துகளும் பத்வாவில் குறிப்பிடப்படுகின்றன. இவை அனைத்தும் பத்வாக் குழுவின் ஒப்புதலுடனேயே வெளியிடப்படும்.

இரத்த தானம், IVF முறையில் கருத்தரித்தல் போன்ற தற்காலத்தில் ஏற்பட்டுள்ள நவீன மார்க்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தற்கால பத்வா வழங்கும் அமைப்புக்களின் கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்பட்டு, பத்வாக் குழுக் கூட்டத்தில் நன்கு கலந்துரையாடப்பட்டு சமுகமளித்தவர்களின் பூரண ஒப்புதலுடன் பத்வா வழங்கப்படுகிறது.

மேலும், பத்வாக் குழுக் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையும் அவசர பத்வாக் குழுக் கூட்டம் குறைந்த பட்சம் மாதத்துக்கு இரண்டு முறைகளும் நடைபெறுகின்றது. அவசர பத்வாக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் பத்வாக்களின் மாதிரி வடிவம் எழுதப்பட்டு அது பத்வாக் குழு உறுப்பினர்களுக்கு மாத்திரம் உள்ள வட்ஸ்அப் குழுவில் அனுப்பப்படும். உறுப்பினர்கள் கருத்துக் கூறுவதற்கு மூன்று நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு உறுப்பினர்களிடம் இருந்து கருத்துக்கள் ஏதும் வராதவிடத்து அனைவரதும் அங்கீகாரமாகக் கருதப்பட்டு பத்வா வெளியிடப்படும்.

இவ்வடிப்படையில் இதுவரை 345 பத்வாக்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த வருடம் 300 பத்வாக்களை நூல்வடிவில் வெளியிடும் நோக்கில் அதன் தொகுப்பை தற்போதைய பத்வாக் குழுவின் கருத்துக்களைக் கண்டறியும் முகமாக பத்வாக் குழுவின் பல உறுப்பினர்களுக்குக் கையளிக்கப்பட்டது. இதுவரை எவ்வித கருத்துக்களும் உறுப்பினர்களிடமிருந்து எழுத்து மூலம் முன்வைக்கப்படவில்லை என்றிருந்தாலும் எதிர்காலத்தில் முன்வைக்கப்படுமிடத்து அவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும் MMDA திருத்தம் விடயத்தில் ஷாபிஈ மத்ஹபைப் பின்பற்றுபவர்கள் தமது விவாக மற்றும் விவாகரத்து விடயங்களை ஷாபிஈ மத்ஹபின் அடிப்படையில் செய்து கொள்வதற்கு ஏதுவாக திருத்தங்கள் உள்வாங்கப்பட வேண்டும் எனும் விடயத்தில் மிகவும் உறுதியாக உள்ளது. இதனால் ஜம்இய்யா பல சவால்களைச் சந்தித்துக் கொண்டிருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

பத்வாக் குழுவின் செயற்பாடுகள் அனைத்தும் குழு உறுப்பினர்களுக்கு மத்தியில் வெளிப்படையாகவே நடைபெறுகின்றன. இதுபற்றிய தெளிவுகள் ஏதும் தேவைப்படின் அல்லது கருத்துக்கள் ஏதும் கூற இருப்பின் தலைமையகத்தையோ அல்லது பத்வாக் குழுவின் செயலாளர் M.L.M. இல்யாஸ் ஆகிய என்னையோ தொடர்பு கொள்ளலாம்.

**அஷ்ஷைக் எம்.எல்.எம். இல்யாஸ்,**
செயலாளர், பத்வாக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணி



சமூகம் பாடசாலையின் கண்ணாடி என்பது போல் பாடசாலை சமூகத்தின் கண்ணாடி என்பர். அதாவது இவையிரண்டும் ஒன்றையொன்று பிரதிபலிப்பவை. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் மீது சமூக நடத்தைக் கோலங்களுக்கும் தன்மைக்கும் பிரத்தியேகமான ஒரு தாக்கம் உள்ளது. கல்விச் சமூகவியல் இது குறித்து ஆராய்கின்றது. ஒரு சமூகத்தின் கலாசார விழுமியங்கள், அறநெறிக் கோட்பாடுகள், பொருளாதார, கல்வி நன்னிலை மாணவர்களின் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஆய்வுகள் நிறுவியுள்ளன.

அந்த வகையில் சமூகத்திலுள்ள பிழையான சீராக்கம் பெற்ற நடத்தைகள், போதைப் பொருள் பாவனை, மதுப் பழக்கம், ஒழுக்க முறைகேடுகள், கல்விக்கு மதிப்பளிக்காமை என்பன அச்சமூகத்தில் வாழும் மாணவர்களின் மனோநிலையிலும் நடவடிக்கைகளிலும் தாக்கம் செலுத்துகின்றன. சமூகத்தில் காணப்படும் போதைப் பொருள் பாவனை மற்றும் நெறிபிறழ்வான நடத்தைகள் மாணவர்களின் பிறழ்வான நடத்தைகளுக்கும் வகுப்பறைக் குழப்படிகளுக்கும் காரணமாகின்றன. (Town Shend, Flisher - King 2007)

மாணவர்களின் பாடசாலைக் கல்வியிலும் கற்றல் ஆர்வத்திலும் தொடர்ச்சியான வரவிலும் அவன் வாழும் சமூக சூழல் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குறித்து இதுகாறும் இடம்பெற்ற ஆய்வுகளின் மூலம் சில கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சமூகக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு (Social Control Theory), பிரச்சினையைத் தூண்டும் நடத்தைக் கோட்பாடு (Problem – Prone Behaviour Theory), சமூகக் கற்றல் கோட்பாடு (Social Learning Theory) மற்றும் விலகல் நடத்தை உள்ளவர்களுடன் சகபாடிகள் இணைவது தொடர்பான கோட்பாடு (Devient Affliation Theory) என்பன அவற்றுள் முக்கியமானவை.

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் குறிப்பிட்ட மாணவன் வாழும் சமூக சூழலின் தாக்கத்தால் போதை வஸ்துப் பாவனை, இளவயதுக் கர்ப்பம், வறுமை, உலகாயுத நோக்கு, கடும் சமூகப் போட்டி என்பவை தொடர்பான பிரச்சினைகளுக்கு மாணவர்கள் உட்படுகின்றனர். விளையாத பாடசாலைகளுக்கு மாணவர்கள் முறையாக சமூகம் தராமை, தாமதித்த வருகை, வீட்டு வேலைகளைக் கவனியாமை, ஆசிரியர் வழங்கும் ஒப்படைகளை மேற்கொள்ளாமை போன்றவற்றால் மாணவர்கள் வகுப்பறையிலிருந்து இடைநிறுத்தப்படுகின்றமை கண்டறியப்பட்டது. இத்தகைய மாணவர்கள் பாடசாலையை மையப்படுத்திய செயற்பாடுகளில் மிகக் குறைவாகவே ஈடுபடுகின்றனர் என்பதும் ஆய்வில் தெரிய வந்தது.

பிள்ளையின் பாடசாலைக் கல்வியில் இடைநிலைக் கல்வி ஒரு மைல்கல்லாக விளங்குகின்றது. மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கட்டங்கள் குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், முன் கட்டிளமைப் பருவம், கட்டிளமைப் பருவம், முதிர் பருவம் என உளவியலாளர்களால் வகுக்கப்பட்டுள்ளது. அதில் பிற காரணிகளின் செல்வாக்கிற்கு அதிகம் உட்படுவது முன் கட்டிளமைப் பருவமும் கட்டிளமைப் பருவமுமாகும். கனிஷ்ட, சிரேஷ்ட இடைநிலைக் காலத்தில் கற்பவர்கள் இப்பருவத்திலேயே உள்ளனர்.

ஒரு பிள்ளை, பிள்ளைப் பருவத்தைத் தாண்டி கட்டிளமைப் பருவத்திற்குள் நுழையும்போது பெற்றோரின் பாதுகாப்பிலிருந்தும் கண்காணிப்பிலிருந்தும் விலகி தனக்கென ஒரு எண்ணக்கருவை (Self Concept) வகுத்துக் கொண்டு சகபாடிகள், நண்பர்களின் அழுத்தங்கள், ஆலோசனைகளுக்கேற்ப செயற்படுகின்றது. இந்நிலையில் பெற்றோரின் பாதுகாப்பும் அரவணைப்பும் அன்பும் கண்காணிப்பும் நிச்சயமாக இடைநிலைப் பருவ மாணவர்களுக்கு இன்றியமையாதவை. எதிரிடையாக பெற்றோர் இவற்றை வழங்காத போது பிள்ளைகள் சகபாடிக் குழுக்களின் தாக்கத்திற்கு அதிகம் உட்படுவர். அத்தாக்கத்தின் தன்மை, சகபாடிகளின் பண்புகளைப் பொறுத்ததாக இருக்குமென ஆய்வுகள் நிறுவியுள்ளன. (Jim and Ju 2012)

மாணவர்களின் சமூக தொடர்பாடலில் சகபாடிகளுடனான உறவு முக்கியமானது. அது மாணவர்களது கற்றலையும் பாடசாலை வருகையையும் குறிப்பிடத் தக்களவு பாதிக்கின்றது. வயது 01 முதல் 08 வரை ஒரு பிள்ளையின் நடத்தை மீது பெற்றோரால் 100 சதவீதம் தாக்கம் செலுத்த முடியும் எனவும் 08 முதல் 12 வயது வரை அத்தாக்கம் 60 வீதமாகக் குறைகின்றது எனவும் 13 வயதுக்குப் பின்னர் பிள்ளைகளின் நடத்தை மீதான பெற்றோர் தாக்கம் 20 ஆகக் குறைகின்றது எனவும் பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு ஆய்வு கூறுகின்றது. (Alexis 2009)

பிள்ளைகள் பதின்ம வயதை எட்டும் போது அவர்களின் நடத்தைகளில் 60% செல்வாக்குள்ள குழுவாக சகபாடிகள் உள்ளனர். எஞ்சியுள்ளவற்றில் 20% ஐ ஊட கங்களும் அடுத்த 20% ஐ பெற் றோரும் எடுத்துக் கொள்கின்றனர் என அந்த ஆய்வு தெரிவிக்கின்றது. சகபாடி களின் தாக்கம் பிரிட்டன் ஆய்வு கூறுவது போன்று உலகெங்கிலும் அதே சதவீதத் தில்தான் காணப்படும் எனக் கூற முடியா விட்டாலும் அவர்களது தாக்கம் ஒப்பீட்டு ரீதியில் அதிகம் என்பது ஏற்கத்தக்கது.

லிவ் விக்கொட்ஸி, ஜீன் பியாஜே, எரிக்ஸன், ஹரி ஸ்டேக் பேன்ற உளவியலாளர்கள் பதின்ம வயதினர் மீது அவர்களது நண்பர்கள் கொண்டுள்ள செல்வாக்குக் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர். அறிகை விருத்தி, சமூக விருத்தி, மனவெழுச்சி விருத்தி போன்ற விருத்தி நிலைகளிலும் இந்தத் தாக்கம் உள்ளதென்று இவர்கள் நிறுவியுள்ளனர். (றவூப் ஸெய்ன் 2014)

மனித நடத்தையிலும் சிந்தனையிலும் அவன் சார்ந்துள்ள நண்பர்களின் தாக்கம் அதிகம் என்கிறார் கூலி எனும் உளவியலாளர். ஜே.எஸ். ஹரிஸ் எனும் உளவியலாளர் தனது Nature of Assemption எனும் நூலில் ஒரு மனிதனின் தனியாள் விருத்தியிலும் அறிகைத் தொழிற்பாட்டிலும் சகபாடிகளின் தாக்கம் குறிப்பிடத்தக்கது என்கிறார்.

சம வயதினரிடையே காணப்படும் ஒத் துப்போகும் ஆர்வம் (Desire for Conformity) மற்றும் சகபாடிகளின் அழுத்தம் (Peer Pressure) ஆகிய இரண்டும் சம வயதுக் குழுவினர் மீதான தாக்கத்தின் அடிப்படைகளாக உள்ளன. இள வயது சகபாடிகள் தமது குழுவின் முறைகளுடனும் போக்குகளுடனும் எந்தளவுக்கு ஒத்துப் போக முடியுமோ அதே அளவு குழுவின் அங்கீகாரம் தமக்குக் கிடைக்குமென எண்ணுகின்றனர்.

இங்கு ஒரு மாணவன் சகபாடிகளின் அழுத்தத்திற்கு ஆட்படுவதன் மூலம் அவனது நடத்தை கட்டுப்படுத்தப்படுகின்றது. ஒரே மனப்பாங்குடன் இயங்குவதும் ஒரே வகையாக சிந்திப்பதும் ஒரே பெறுமானங்களுக்கு மதிப்பளிப்பதும் பொதுவாக சகபாடிகளின் பண்புகளாகும். இது ஒரு மாணவனின் ஆளுமையை எதிர்மறையாகவும் பாதிக்கலாம். எனவே திறமையான ஒரு மாணவன் அல்லது கற்றல் ஆர்வமுள்ள ஒரு மாணவன் மோசமான நட்பின் மூலம் அல்லது சகபாடிகள் மூலம் பிழையாக வழிநடாத்தப்படலாம். அவனது திறமை மழுங்கடிக்கப்பட்டு கற்றல் ஆர்வம் குறைந்து பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தக் கூட சகபாடிகள் காரணமாகலாம்.

முதல் நிலை சமூக மயமாக்கல் கோட்பாட்டின் (Primary Socialization Theory) படி முன்கட்டிளமைப் பருவத்தினரின் சமூக மயமாக்கலில் சகபாடிகளின் செல்வாக்கே அதிகமாகும். போதைப் பொருள் பாவிக்கும் ஒரு மாணவன் பாடசாலையை விட்டு இடைவிலகும் போது குறிப்பிட்ட மாணவனின் நண்பனும் பாடசாலையை விட்டு இடைவிலகிச் செல்லலாம்.

Peer Cluster Theory இன் படி பிள்ளைகளின் நடத்தைகளில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு வகுப்பறைகளில் அதிகமாகும். மோசமான சகபாடிகளுடன் உறவாடும் ஒரு பிள்ளை காலப்போக்கில் மோசமான பண்பு கொண்ட பிள்ளையாக மாறுகின்றது. இதே கருத்தை Devient Affliation Theory மற்றும் Differential Association Theory யும் முன்வைத்துள்ளன.

எனவே, எப்போதும் தமக்கு ஊக்கமளிக்கின்ற, கல்வியில் போட்டி போடுகின்ற, சேர்ந்து கற்பதற்கு உற்சாகம் கொண்டுள்ள சகபாடிகள் இல்லாத போது வீதியில் அலைகின்ற, நேரத்தை வீணடிக்கின்ற, ஊர் சுற்றித்திரிகின்ற, பாடசாலை வேளைகளில் அக்கறையற்றிருக்கின்ற சகபாடிகளுடனான தொடர்பாடல்கள் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கின்றது. சில மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகிச் செல்வதற்கும் சகபாடிகள் பங்களிக்கின்றனர்.

---

மனநலம் 23

# மனச் சோர்வு (Depression)



மனச்சோர்வு பொதுவான ஆனால் பெரும்பாலும் தீவிரமான ஒரு கோளாறாகும். 50 சதவீத பெண்களும் 25 சதவீத ஆண்களும் அவர்களது வாழ்வில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனச்சோர்வினால் பாதிக்கப்படுகின்றார்கள். பொதுவாக, பதின்ம பருவத்தினரிடம் மனச்சோர்வு அதிகம் காணப்படுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

இளம் சிறார்களையும் அது விட்டு வைப்பதில்லை. துரதிஷ்டமாக அது மீண்டும் மீண்டும் வரக் கூடியதாக இருக்கின்றது. இதனால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையினர் விட்டு விட்டு வரும் இந்த நோயால் அவதிப்படுகின்றனர்.

Living with a Stranger எனும் நூலில் Valarie still well எனும் உளவியலாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''மனச்சோர்வு உடல் அடிப்படையிலான பல நோய்களோடும் அதிக ஆபத்தான தற்கொலையுடனும் தொடர்புடையதாகும். மனச்சோர்வுக்கு மூட்டழற்சி (ஆதரைடீஸ்), இரத்த மிகை அழுத்தம், நீரிழிவு போன்ற உடல் நோய்களோடு இருக்கும் தொடர்பை விட உளவியல், சமூகம், மற்றும் பணி சார்ந்த பிரச்சினைகளோடு உள்ள தொடர்புதான் அதிகமாக இருப்பதாகத் தோன்றுகிறது. எடுத்துக் காட்டாக, குழந்தை பிறப்புக்கு முன் ஒரு தாய்க்கு ஏற்படும் மனச்சோர்வால் குழந்தையின் ஆரம்ப கால வளர்ச்சி வேகம் குறைவதற்கான வாய்ப்புண்டு. மனச்சோர்வு வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பதோடு, குடும்ப உறவுகளுக்கும் இடையூறாக இருக்கலாம்.''

மனச்சோர்வு பரவலாகக் காணப்பட்டாலும் அதை அடையாளம் காண்பது சிலபோது கடினமாக இருக்கும். சில போது மனச்சோர்வு அவமானத்திற்குரியது என்ற எண்ணம் பலரிடம் இருக்கின்றது. தமது உணர்வுகளைப் பற்றிப் பேசினால் வீட்டிலும் பணியிடத்திலும் பிரச்சினைகள் ஏற்படலாம் என்று பலரும் கவலைப்படுகின்றார்கள். மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்களைப் பார்க்கச் சென்றாலும் அவர்களிடம் மனச்சோர்வுக்கான அறிகுறிகள் இருக்கும் என உறுதியாகக் கூறமுடியாது என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

சில நேரங்களில் மனச்சோர்வை அடையாளம் காண்பது கடினமாக இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன.

1. நோயாளிகளிடமும் மருத்துவர்களிடமும் உணர்வெழுச்சி சார்ந்த பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதில் பொதுவான ஒரு தயக்கம் உண்டு.

2. உடல் சார்ந்த நோய்களைப் பற்றி மருத்துவர்களிடம் பேச்சைத் தொடங்குவதற்குத் தயங்கும் மனோநிலை நோயாளிகளிடம் உள்ளது.

3. பல மருத்துவப் பராமரிப்புச் சூழல்களில் மருத்துவர்களோடு பேசி ஆலோசனை பெறும் காலம் மிகக் குறைவாகவே கிடைக்கின்றது.

மனச்சோர்வுக்கு உட்பட்ட நோயாளிகள் குறித்த மருத்துவர்களின் மனப்பாங்கும் வெவ்வேறு விதமாக இருக்கிறது என்பதையும் ஆய்வுகள் காட்டுகின்றன.

சில மருத்துவர்கள் அதனை ஆர்வத்துடன் கூடிய சவாலாக எடுத்துக் கொள்கின்றனர். வேறு சிலரோ உளவியல் பிரச்சினைகளுக்கு மருத்துவம் செய்யும் போது சங்கடத்தை உணர்வதோடு, மனச்சோர்வு நோயாளிகளுக்கு மருத்துவம் செய்வது மனநிறைவைத் தராத என்று நம்புகிறார்கள்.

### மனச்சோர்வு என்றால் என்ன?

மனச்சோர்வு என்ற சொல்லுக்கு தள்ளப்படுதல் அல்லது அழுத்தப்படுதல் என்று பொருள். நம்பிக்கையற்ற உணர்வுடன் அல்லது சோகத்துடன் இருப்பதே அதன் பிரதான அடையாளம். அது எந்த வயதிலும் அல்லது எந்தச் சூழ்நிலையில் உள்ள எவரையும் பாதிக்கலாம். மனச்சோர்வு என்பது ஒருவரது மனநிலையோ அவரது தனிப் பண்பில் உள்ள குறைபாடோ அல்ல. மாறாக, மருத்துவ அடிப்படை யிலான நோய் என்று அடையாளம் காணப்பட்ட ஒன்றாகும்.

இந்நோய்க்கான காரணங்களும் சிகிச்சை பற்றிய ஆய்வுகளும் மூளையில் ஏற்படும் உயிர் வேதியியல் மாற்றங்களையே மையப்படுத்துகின்றன.

நோர் அட்ரனெலின், செரடோனின் என்னும் இரு நரம்பு ஊடு கடத்திகள் இதில் ஈடுபட்டுள்ளன. மனச்சோர்வு பாதிப்புள்ள ஒருவரிடம் இவற்றின் செயற்பாடு குறைவாகவே இருக்கும். ஆனால் அவர்கள் நோயிலிருந்து மீண்டு வந்ததன் பின்னர் அவை இயல்பு நிலைக்குத் திரும்புகின்றன.

மனச்சோர்வில் பல வகைகள் உள்ளன. மெனிக் டிப்ரெஷன் என்பது ஒரு வகை. தீவிர மனவெழுச்சி தளர்ச்சிப் பிறழ்வு என்று இது அழைக்கப்படுகின்றது. இதன்போது ஒருவர் அதிக ஆற்றல், அதிக களிப்பு ஆகியவற்றின் உச்ச எழுச்சியில் இருப்பார். அதற்குப் பின்னர் முழுமையான மந்த நிலையும் நம்பிக்கை இழக்கக் கூடிய மனோநிலையும் தொடர்ந்து வரும்.

மனச்சோர்வின் அறிகுறிகள் பல. அவற்றுள் பிரதானமானவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மனதை ஒருமுகப்படுத்த இயலாமை
2. சோக உணர்வும் அழுவதற்கான மனப்பாங்கும்
3. மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியிருத்தல்
4. எதிர் மறைச் சிந்தனைகளிலேயே ஈடுபட்டிருத்தல்
5. தன் மீதே பழிசுமத்தல்
6. மட்டுமீறிய உடற் சோர்வு
7. வாழ வேண்டும் என்ற விருப்பமின்மை
8. ஊக்கமில்லாமை
9. நம்பகத் தன்மை இல்லாமை
10. சுயநம்பிக்கையில்லாமை
11. பாலுறவில் விருப்பமில்லாமை
12. மிக அதிகமாகவோ மிகைக் குறைவாகவோ சாப்பிடுதல்
13. மட்டுமீறி மதுபானம் அருந்துதல்
14. தூக்க முறையில் குழப்பம்
15. குழப்பமான சிந்தனைகள்
16. நீண்ட நேரம் அல்லது திடீரெனத் தோன்றும் உடல் வலி
17. அமைதியின்மை
18. அச்ச உணர்வும் தற்கொலை உணர்வும்

இவற்றில் எந்த அனுபவமும் தோன்றலாம். அத்துடன் காரணமற்ற அச்சங்களும் ஏற்படலாம். இது ஓர் அச்சுறுத்தல் பட்டியல். ஆயினும் ஒரு நல்ல செய்தியும் இங்கு உள்ளது. அது என்னவென்றால், மனச் சோர்வு எப்போதுமே ஓரளவு குணப்படுத்த முடியுமானதுதான். அது சாத்தியமாகும் போது நோய்க் குறிகளை பெருமளவு நீக்கிக் கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபையில்... (01 ஆம் பக்கத் தொடர்)

முஸ் லிம் சமூகத்துக்குப் பாதகமான இந்த அறிக்கை தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதிலும் அவர் ஆர்வமாக இருந்தார்.

இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அதனை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவரான கலாநிதி ஏ. எஸ்.எம். நௌபல் இது தொடர்பில் மீள்பார்வைக்குத் தெரிவிக்கையில்,

இந்த அறிக்கையில் புதிதாக எதனையும் இந்தக் குழுவினால் செய்ய முடியாது. அறிக்கையை மீளாய்வு செய்வது தான் எமது பணி. ஆனால் அமைச்சு மட்டத்திலிருந்து பரிந்துரைகள் வரும் பொழுது அவை கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அந்த வகையில் கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை, கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம், கொழும்பு மாவட்டங்களின் பல பிரதேசங்களிலும் பல் அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதன் மூலம் முஸ்லிம் சமூகம் தனது பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. இது தொடர்பில் குறித்த பிரதேசங்களில் இருந்து முன்மொழிவுகள் எம்மை வந்து சேருமாக இருந்தால் அதனை கவனத்தில் எடுக்க முடியும் என கலாநிதி நௌபல் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குழுவினரின் அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு நேரடியாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளன. இப்படி இந்த மீளாய்வு அறிக்கையும் சட்டமாக்கப்பட்டால் முஸ்லிம் சமூகம் மாகாண சபைத் தேர்தலில் தனது பிரதிநிதித்துவத்தை குறைவாகவே பெற்றுக் கொள்ளும் நிலையே உருவாகும். அதற்கு முன்னர் இந்த விடயம் கவனத்தில் எடுக்கப்படாவிட்டால் முஸ்லிம் சமூகத்தின் அலட்சியத்தினால் தமது பிரதிநிதித்துவத்தை இழக்கும் நிலை உருவாகும் என பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

## முன்மொழிவுகளை... (01 ஆம் பக்கத் தொடர்)

லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனமும் கலாநிதி ஹஸ்புல்லா உறுப்பினராக இருந்த வேளையில் குறித்த குழுவுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தது. பல்அங்கத்தவர் தொகுதிகளாக வர வேண்டிய பகுதிகள், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ள பிரதேசங்கள் போன்றவையெல்லாம் அந்த முன்மொழிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தோற்கடிக்கப்பட்ட அந்த அறிக்கையில் இவை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வுக் குழுவினர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

மீளாய்வுக் குழுவினரின் பணி தொடர்பில் அவர் விளக்கமளிக்கும் பொழுது, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையை மீளாய்வு செய்வது, பாராளுமன்றத்தில் இந்த அறிக்கை முன்வைக்கப்பட்ட போது இரு தடவைகளும் நடந்த விவாதத்தில் பேசப்பட்டவைகளை ஹன்சாட் மூலம் பெற்று அந்த அவதானங்களைப் பெறுவது, கட்சிகளுடன் பேசி அவர்களின் கருத்துக்களைப் பெறுவது போன்ற விடயங்களே இந்த மீளாய்வுக் குழுவினரின் பணியாக வரையறுக்கப்பட்டுள்ளது என்றார்.

ஒக்டோபர் 28 ஆம் திகதியுடன் காலாவதியாகும் இந்தக் குழுவினருக்கு இதுவரை குறித்த அறிக்கை கூட வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும், குறித்த ஹன்சாட் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை எனவும் மொத்தத்தில் குழுவினர் தமது பணியை இதுவரை ஆரம்பிக்கவே இல்லை எனவும் தெரிய வருகிறது. எந்தவகையிலும் இந்த மீளாய்வுக் குழுவின் அறிக்கை குறித்த காலத்தை விட தாமதமாவதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளன.

## அரச செலவீனம்... (01 ஆம் பக்கத் தொடர்)

இம்முறைய ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் 2057 பில்லியன் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் கடன் மீளச் செலுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட அதிகூடிய நிதி இது வாகும். இதில் உள்நாட்டுக் கடன்கள் 1271 பில்லியன் மீளச் செலுத்தப்படும் அதேவேளை வெளிநாட்டுக் கடன்களில் 786 பில்லியன் (4650 மில்லியன் டொலர்) மீளச் செலுத்தப்படுகிறது. 2019 இன் துண்டு விழும் தொகையை நிரப்புவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 1944 பில்லியன் கடனாகப் பெறப்படவுள்ளது.

அரச சேவைகளின் செலவீனங்களில் மீண்டுவரும் செலவுக்காக 1456 பில்லியனும், மூலதனச் செலவுக்காக 856 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன. 11 இலட்சம் அரச சேவையாளர்களின் சம்பளத்துக்கும் 06 இலட்சம் பேருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுக்குமென 1000 பில்லியன் அளவில் ஒதுக்கப்பட்டுள்ளது.

கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தை முதல் மீரிகமை வரையுள்ள பகுதியையும், பேலியகொட முதல் துறைமுகர் வரை தூண்களில் நிர்மாணிக்கப்படும் நுழைவு வழிக்கும் மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்திக்குமென 175 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தமான துண்டு விழும் தொகை 644 பில்லியன் ரூபாவாகும்.

வரவுசெலவுத் திட்டத்திட்ட இரண்டாம் வாசிப்பை எதிர்வரும் நவம்பர் 05 ஆம் திகதி நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த போதிலும் குறித்த தினத்தில் இது சாத்தியப்படாது என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின், ஒரு மாதத்தின் பின்னரே இரண்டாம் வாசிப்பு விவாதம் நடாத்தப்பட வேண்டும் என, எதிர்க்கட்சியின் பிரதம கொரடா அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து குறித்த திகதி தொடர்பில் கலந்துரையாடி முடிவொன்றுக்கு வர முடியும் என சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டினார்.

## மக்கள் தாம்... (07 ஆம் பக்கத் தொடர்)

அந்தக் காலப் பகுதியில் கூடஓர் கட்டத்தில் திரைப்படங்கள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தது என்பது அந்தப் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

அதுமட்டுமின்றி புலம்பெயர் தேசங்களில் உருவாகும் தமிழ் திரைப்பட முயற்சிகள் குறித்தும் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விசேடமாக ஒவ்வொரு காலப் பகுதியிலும் இலங்கை தமிழ் சினிமா துறையில் ஈடுபட்ட கலைஞர்கள் சிலர் இந்த நூலின் ஊடாக தமது சினிமா வாழ்வைப் பற்றி உரையாடுகின்றார்கள்.

- **மொழிபெயர்ப்புக்கான நூல்களை எந்த அறத்தின் அடியாக தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

சமூகங்களுக்கு முக்கியமான விடயங்களைக் கூறும் நூல்களைத்தான் தேர்ந்தெடுப்பேன். மொழிமாற்றம் பெறும் அந்த நூல் அந்த சமூகத்திற்கு எவ்வளவு தூரம் முக்கியமானது, எவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதனை கருத்தில் கொண்டே நூல்களைத் தேர்ந்தெடுக்கிறேன்.

நன்றி - www.insafsalahudeen.com

## அறிக்கையின்றி... (01 ஆம் பக்கத் தொடர்)

குறித்த சட்டத்துடன் தொடர்புடைய முஸ்லிம் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் தமிழ் மொழிப் பாவனையாளர்களாக இருக்கும் நிலையில் ஆங்கில மொழியில் இருக்கும் இந்தச் சட்ட மூலத்தை வாசித்து விளங்கிக் கொள்வதில் மக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். சட்டவசனங்கள் அதிகமாக உள்ள இந்த அறிக்கைகளில் நீதியரசர் சலீம் மர்சூபின் அறிக்கை 313 பக்கங்களையும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ். ரிஸ்வி முப்தியை முன்னிலைப்படுத்தி கையெழுத்திடப்பட்டுள்ள அறிக்கை 10 பக்கங்களையும், இணைப்புகளாக 302 பக்கங்களையும் கொண்டுள்ளன. இவற்றை ஆங்கில மொழியில் வாசித்தறிவதனை விட தமது சொந்த மொழியில் வாசிப்பதற்கான உரிமையை மக்கள் கோருகின்றனர்.

இது தொடர்பாக நீதி அமைச்சினை மீள்பார்வை தொடர்பு கொண்டபோது, மொழிபெயர்ப்பாளர்கள் இன்னும் இவற்றை மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தனர்.

கேள்வி: எட்டு மாதங்களாக மொழி பெயர்க்கிறார்களா ?

பதில்: ஆம். இன்னும் மொழி பெயர்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

கேள்வி: ஒப்படைப்பதற்கான இறுதித் தினம் ஏதும் வழங்கப்பட்டுள்ளதா ?

பதில்: இல்லை. அவர்கள் வேலையை முடித்துத் தரும் வரை காத்திருக்கிறோம்.

எட்டு மாதங்களாகியும் மொழிபெயர்ப்பாளர்களே மொழிபெயர்த்து முடிக்காத அறிக்கை தொடர்பில் முஸ்லிம் சமூகம் கலந்துரையாடல்களையும் அபிப்பிராயங்கள் வெளியிடுவதையும் தற்போது நடத்தி வருகின்றது.

## சரியானதை... (03 ஆம் பக்கத் தொடர்)

அம்மக்களது வாழ்வியல் பிரதேச அரசாங்க, சமூக சூழல் என்பவற்றை அடிப்படையாக கொண்டு குர்ஆன், சுன்னா அடிப்படையில் விளக்கமளிக்கப்பட்டவை. இவ்வாறான விளக்கங்களும், தீர்வுகளும் நமது நாட்டு முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு பிரயோகிக்கும் போது பொருத்தமானது என்றல்ல, மிகப் பொருத்தமானது தானா என்று கூடிய அவதானம் செலுத் தப்பட வேண்டும்.

பெண்ணுரிமை, ஆணாதிக்கம் என்பவற்றை கருத்திற் கெடுப்பவர்கள், மேற்கத்தியம் பேசும் சுதந்திரம், பெண்ணுரிமை, சமஉரிமை இஸ்லாமிய கருத்துக்களோடு ஒப்பிட்டு பார்க்காமல் இஸ்லாத்தின் பார்வையில் ஆணாதிக்கம், பெண்ணுரிமை, சுதந்திரம் என்பவற்றுக்கே கூடியதும், முழுமையானதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள், பிள்ளைகளது பாதுகாப்பு, பராமரிப்பு என்பவற்றில் ஆண்களுக்கான உரிமையும், கரிசனையும் கூடியதும் பொறுப்பு வாய்ந்ததுமாகும் என்பவையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இருக்கின்ற முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தினை நடைமுறையில் பிரயோகிக்கப்படுத்தும் போது கூடுதலாக பாதிப்படைந்தது, பெண்களும், பிள்ளைகளும் தான் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கசப்பான உண்மை. வலியாக வருபவரும், காதியாக பதவி பெறுபவரும் தமக்குக் கிடைக்கின்ற உரிமைகளைப் பயன்படுத்துவதில் காட்டுகின்ற முழுமையான கவனத்தை, தமது அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது இஸ்லாத்தில் பெண்களுக்கானதும், பிள்ளைகளுக்குமான உரிமை, பாதுகாப்பு, எதிர்கால வாழ்க்கை, சமூகச் சீரழிவு என்பவற்றில் கவனக் குறைவாகவே இருக்கின்றனர்.

எனவே கையெழுத்து இட்டு கொடுத்த சிபார்சுகள் தான் முடிந்த முடிவு,எத்தகைய மாற்றத்திற்கும் இடமில்லை என்று இரு தரப்பும் பிடிவாதப் போக்கில் நில்லாமல் சுயகௌரவம், பதவிநிலை அந்தஸ்து, பட்டம் என்பவற்றுக்கு அப்பால் மார்க்கம், எதிர்கால முஸ்லிம் சமூக வாழ்வியல் ஒழுங்கை நிர்ணயிப்பதில் இருக்கும் சமூக பொறுப்பு என்பவற்றை உணர்ந்து விட்டுக் கொடுப்புக்களோடு ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

பெண் வலி எனும் உரிமையை பெறுதல், பெண் காதியாக நியமனம் பெறுதல், சட்டத்தரணிகளே காதியாக நியமிக்கப்படுதல் போன்றவற்றில் ஏற்படக்கூடிய மார்க்க பிறழ்வுகள், சமூக ஏற்புடைமை, நடைமுறை சாத்தியம் என்பவை கருத்திற் கொள்ளப்பட்டு மாற்று முடிவுகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

அதேவேளை காதியின் நியமனம், ஜூரிகளின் (காதியாரினால் தெரிவுபெறும் அவருக்கான ஆலோசனைக் குழுவில் பெண்களும் அடங்குதல்), வலியின் உரிமை, அதிகாரத்தை பிரயோகப்படுத்தல் என்பவற்றின் வரையறை, மணப் பெண்ணின் சம்மதம், மணப்பெண் கையெழுத்திடல், ஆக குறைந்தது, திருமணப் பதிவாளர், இரு சாட்சிகள், மணவாளன், நிகாஹ் நடத்துபவர் ஆகியோர் முன்னிலையிலாவது மணப்பெண் தனது சம்மத ஒப்புதலை வெளிப்படுத்துதல், இவற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட்டால் பெண்ணின் வயதெல்லை என்பது சர்ச்சைக்குரியதாக இருக்க மாட்டாது.

சீதனம் பெறப்படுமாயின் அவற்றை முழுமையாக பதிவில் வெளிப்படுத்துதல் போன்றவற்றில் ஒரு பொதுவான இணக்கப்பாட்டிற்கு இரு சாராரையும் கொண்டு வரவேண்டும்.

இலங்கையில் ஷாபி மத்ஹபை பின்பற்றுபவர்களே மிகப் பெரும்பான்மையினர் என்ற அடிப்படையில், பொதுவாக அதனையே பின்பற்றுதல், ஆனால் ஏனைய மத்ஹபுகளை பின்பற்றுவோர், ஏனைய பிரிவினர்கள் அவர்களுடைய மத்ஹபின் பிரகாரம் செயற்பட மாற்று ஏற்பாடுகளுக்கு வழி சமைத்திருக்க வேண்டும்.

எனவே இந்த முரண்பாட்டில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் மிக முக்கிய பதவிநிலை உறுப்பினர்கள் ஒரு பிரிவின் சிபார்சில் கையெழுத்திட்டிருப்பதால் உலமா சபையினர் தவிர்ந்த வேறு மூன்றாம் தரப்பினர் இப்பிரச்சினையை சுமுகமான இணக்கப்பாட்டிற்கு கொண்டுவந்து இரு பிரிவு சிபார்சுகளிலும் உள்ள நல்ல விடயங்களை ஷரீஆவிற்கு முரண்படாமலும் நடைமுறைப்படுத்தும் போது எழுகின்ற சிக்கல்கள், குறைபாடுகள் எழாத முறையிலும் ஒருங்குபடுத்தி ஒரே சிபார்சுகளாக முன்வைக்க வேண்டும்.

நடுநிலை நின்று ஒருமுகப்படுத்தலுக்காக செயட்படும் குழுவானது மிக முக்கியமாக ஷரீஆவை முழுமையாகப் பேணுதல், நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக் கூடிய பாதிப்புக்கள், நடைமுறை சிக்கல்கள், குறிப்பாக ஆதாரமற்றுப் போகும் பெண்கள், குழந்தைகள், என்பவற்றை முக்கிய கருத்தில் எடுத்து ஒரே முறை யிலான சிபார்சுகளை முன் வைக்க வேண்டும்.

நடுநிலைமையாக முன்னின்று செயற்படும் அமைப்புக்களாக தேசிய சூரா சபை, முஸ்லிம் மீடியா போரம், தேசிய முஸ்லிம் கவுன்ஸில் என்பன முன்வர வேண்டும்.

முன்னுதாரண சமூகம், உலகின் சகல வாழ்க்கை பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை தன்னகத்தே கொண்டிருக்கும் சமூகம், தனது சமூகத்திற்குட்பட்ட பிரச்சினைக்கு வேறுபட்டு நிற்பது கவலையானதும், வேறு சமூகங்கள் விமர்சிக்க இடங்கொடுப்பதுமாகி விடும்.

எனவே விரைவாக சரியான வழிமுறையை பின்பற்றி சரியான தீர்வு சரியான முறையில் முன்வைக்கப்பட வேண்டும்.

## இலங்கையின்... (04 ஆம் பக்கத் தொடர்)

(இ) பொதுமக்களை மையமாக கொள்ளல்.

(ஈ) பொதுமக்களை எச்சரித்து விழிப்பூட்டல்.

(உ) கூட்டாக இயங்குதல்.

(ஊ) ஜனநாயகத்தை அத்தியவசியமான பொதுமக்கள் சொத்தாக கருதுதல். வர்த்தக நிறுவனங்கள், தொழில் நிறுவன ஊழியர்கள், மாணவர் இயக்கங்கள், விவசாய அமைப்புகள், நகர - கிராம இளைஞர்கள், பெண்கள், தொழில் அமைப்புகள், சமூக சிந்தனை கொண்ட மத நிறுவனங்கள், ஊடக அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், ஜனநாயக பற்றுள்ள நாட்டுப் பிரஜைகள் என பல தளங்களில் அவர்கள் பரவியிருப்பார்கள்.

### ஜனநாயக எதிர்ப்பு

இவர்கள் சிறு தொகையினராக இருப்பினும் இக்குழு சார்ந்தவர்களில் சிலரே ராஜ பக்ஷ சகோதரர்களது எதேச்சாதிகார ஆட்சிக்கெதிரான எதிர்ப்பை ஓரளவு வெளிக்காட்டினர். அரசியல் கட்சிகளது புதிய கூட்டு ஜனநாயக எழுச்சிக்கான தளமொன்றை தோற்று வித்திருக்கிறது. சிவில் குழுக்கள் மிகவும் செயலற்றதாக உள்ளன. அவை புதிய, புத்துணர்வுடன் கூடிய அணிதிரட்டலொன்றையும் ஒத்துழைப்புடன் கூடிய செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தலையும் எதிர்பார்த்திருக்கின்றன.

சிதறிப்போயுள்ள ஜனநாயக சமூக இயக்கங்களுக்கான நிறுவனமயப்பட்ட தலைமைத் துவமொன்றை வழங்குவதே தற்போது போதிய வளங்களைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் சிவில் சமூக அமைப்புகளது அவசர கடமை. ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் எதிர்த்து நிற்கவுமான புதியதொரு சமூக இயக்கத்தை வடிவமைக்கவும் ஜனநாயகத்துக்குப் பதிலாக தோன்ற முடியுமான எதேச்சாதிகாரம் மிக்க வலதுசாரி சீர்திருத்த வேலைத்திட்டத்தை எதிர்த்து நிற்கக்கூடிய பலமான கூட்டமைப்பொன்றை கட்டியெழுப்பவும் அவர்களுக்கு இன்னும் ஒரு வருடம் மாத்திரமே - அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் - இருக்கிறது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான புதிய சமூக இயக்கத்தினது அரசியல் சில ஒழுங்கு முறைகள் கொண்ட அடித்தளத்தின் மீது கட்டி யெழுப்பப்பட வேண்டும்:

(அ) அது சமூக இயக்கங்களது விரிந்ததொரு கூட்டணி. அது ''ஜனநாயக பன்மைத்துவம்'' என்பதன் அடிப்படைகள் மீது கட்டப்படல்.

(ஆ) மையம் இல்லாத, குறிப்பிட்ட சிந்தனையொன்றின் இரும்புப் பிடியில்லாத, நிர்வாக படிநிலை இல்லாத தொடர்ந்து வளர்ந்து செல்லும் வகையிலான இறுக்கமில்லாத கட்டமைப்பு கொண்டதாக இருத்தல்.

(இ) பெரும் அரசியல் கட்சிகளுடன் முழு மையான தந்துரோபாய கூட்டணி அமைக்கக் கூடியதாகவும் அதேநேரம் அதன் அரசியல் சுயாதீனத்தை எக்கட்டத்திலும் விட்டுக் கொடுக்காததாகவும் செயற்படல்.

(ஈ) சிறிய அரசியல் கட்சிகளுடனும் அவர் களது தேர்தல் வேலைத்திட்டத்தில் சிக்கிக் கொள்ளாத வகையில் நெருங்கிய கூட்டுறவுகளை வைத்துக்கொள்ளல்.

(உ) அது புதியதொரு அரசியல் மொழியொன்றை உருவாக்குவதனூடாக நாட்டுப் பிரஜைகளது ஜனநாயக மற்றும் சுதந்திர அரசியல் கனவையும் அடைந்துகொள்ள துணை செய்வதாக இருத்தல்.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் நேஷ்

நோபல் பரிசு பெற்ற இவர், கணிதத்திற்கு மிகப்பெரும் பங்காற்றியவர். இவர் கண்டுபிடித்த ஆட்டக் கோட்பாடு பொருளாதாரம், அரசியல், உயிரியல், கணினி அறிவியல் எனப் பல இடங்களிலும் பயன்படுகிறது. சைசோப்ரேனியா என்னும் மன நோயால் பாதிக்கப்பட்ட நேஷ், ஜாமெட்ரி, டிபரென்சியல் சமன்பாடு முதலியவற்றிற்கும் முன்னோடியாய்த் திகழ்ந்தவர்.

தீவிர மன நோயால் பாதிக்கப்பட்ட இவர், கற்பனையாக சில விஷயங்களை புனைந்து கொண்டு பயப்படுவார் என்று அவரது மனைவி கூறியுள்ளார். ஆனாலும் தனக்கு மிகவும் பிடித்த கணிதத்தை அவர் ஒருபோதும் ஒதுக்க வில்லை. கணிதத்தோடு வாழ்ந்ததால்தான் அவர் நீண்ட காலம் உயிரோடு இருந்தார் என அவருக்கு நெருக்க மானவர்கள் கூறுகின்றனர். 1994-ம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் நினைவுப் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.



# போரடித்தல்

வயலில் விளைந்த நெற்பயிரினை அறுவடை செய்யும்போது, நெற்பயிரின் அடிப்பகுதியில் ஒருசாண் அளவிற்கு விட்டு அறுவடை செய்வர்.

பின் களத்து மேடுகளில் அறுத்த நெற்பயிரிலிருந்து நெல்மணிகள் தனியாக உதிர்ந்து விடுமாறு அடித்து பிரிப்பர். இதற்கு போரடித்தல் என்று பெயர்.

போரடித்து பிரிக்கப்படும் நெல்மணிகளுடன் தூசு, குறைந்த விளைச்சல் கொண்ட நெல்மணிகளான சாவி போன்றவையும் சேர்ந்து இருக்கும்.

போரடித்து வரும் நெல்லை காற்று வீசும்போது அள்ளி தூற்றுவர். இவ்வாறு தூற்றும்போது நல்ல நெல்கள் நேராக கீழேயும், தூசு, பதர் என்று சொல்லப்படும் விளைச்சல் குறைந்த நெல்கள் காற்றின் பிடியில் சிக்கி சற்றுத் தள்ளியும் விழும்.

நல்ல நெல்லினை இம்முறையில் எளிதில் பிரித்து எடுக்கலாம். இதுவே இப்பழமொழிக்கான நேடியான பொருளாகும். ஆனால் இந்தப் பழமொழிக்கு மறைமுகப் பொருள் ஒன்றும் உள்ளது.

# தோட்டக்காரர்



முன்னொரு காலத்தில் காட்டின் அருகே அழகிய தோட்டம் ஒன்று இருந்தது. அந்தத் தோட்டத்தில் பழம் தரும் மரங்கள், மூலிகைச் செடிகள், அழகான கொடிகள் உள்ளிட்ட நிறைய தாவரங்கள் இருந்தன.

அந்த அழகிய தோட்டத்தை ஒரு தோட்டக் காரர் தினமும் நீர் ஊற்றி பராமரித்து வந்தார். காட்டில் இருந்த சில குரங்குகள் தோட்டக் காரரின் நடவடிக்கைகளை தினமும் கவனித்து வந்தன. சில நாட்களில் அவை தோட்டக் காரரிடம் நட்பாகப் பழகி சிநேகம் கொண்டன. தோட்டக்காரருக்கு தோட்டத்தைப் பராமரிப் பதில் அவை உதவி செய்தன.

ஒரு நாள் தோட்டக்காரர் வெளியூரில் வசிக்கும் தன் மகனைப் பார்க்க எண்ணி னார். ஆனால் தோட்டத்தைப் பராமரிக்க வேறு யாரும் இல்லாததால் அவரால் வெளியூர் செல்ல இயலவில்லை. அதனால் மிகவும் மனம் வருத்தம் கொண்டார்.

குரங்குகள் தோட்டக்காரரின் மனவருத் தத்தைக் கண்டன. அவை தோட்டக்காரரிடம் ''தோட்டக்கார ஐயா, தங்களின் மனவருத்தத் திற்கு காரணம் என்ன?'' என்று கேட்டன.

தோட்டக்காரரும் ''என் அருமைத் தோழர்களே. எனது மகன் வெளியூரில் வசிக்கிறான். நான் அவனை சென்று பார்க்க வேண்டும்'' என்றார்.

குரங்குகள் தோட்டக்காரரிடம் ''நல்ல விசயம் தானே. தாங்கள் சென்று தங்களின் மகனை காண வேண்டியது தானே'' என்றன.

அதற்கு தோட்டக்காரர் ''அதில்தான் சிக்கல் ஒன்று இருக்கிறது. நான் வெளியூர் சென்று விட்டால் யார் எனது தோட்டத்தில் இருக்கும் செடி, கொடி, மரங்களைப் பரா மரிப்பது?. இவற்றிற்கு தண்ணீர் பாய்ச்சா விட்டால் இவை வாடிவிடும். இதுதான் எனது கவலை'' என்று கூறினார்.

குரங்குகள் ''ஐயா, தாங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் உங்களின் தோட் டத்தை நீங்கள் வெளியூரிலிருந்து வரும் வரைப் பார்த்துக் கொள்கிறோம்'' என்று கூறின.

தோட்டக்காரரும் ''மிக்க மகிழ்ச்சி. நான் வரும்வரை நீங்கள் தாவரங்களுக்கு தேவை யான நீரினை ஊற்றி பாதுகாத்து வாருங் கள்'' என்று கூறினார்.

''ஐயா, எவற்றிற்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்பதை மட்டும் கூறுங்கள்'' என்று குரங்குகள் கேட்டன.

அதற்கு தோட்டக்காரர் ''ஆழமான வேரினை உடையவைகளுக்கு அதிக நீரும், ஆழம் குறைந்த வேரினை உடையவை களுக்கு குறைந்த நீரும் ஊற்றுங்கள்'' என்று கூறினார்.


குரங்குகளும் சந்தோசமாக ''சரி ஐயா, நீங்கள் நாளைக்கு வெளியூருக்கு கிளம்புங்கள். நீங்கள் வரும்வரை பத்திரமாக தோட்டத்தைப் பார்த்துக் கொள்வோம்'' என்று கூறின.

தோட்டக்காரரும் மறுநாள் வெளியூருக்கு கிளம்பினார். ஒரு சில நாட்கள் கழித்து அவர் தோட்டத்திற்கு வந்தார். தோட்டத்தில் இருந்த தாவரங்கள் எல்லாம் பிடுங்கப்பட்டுக் கிடந்தன. இதனைக் கண்ட தோட்டக்காரர் அதிர்ச்சி அடைந்தார். அவர் குரங்குகளிடம் ''ஏன் தாவரங்களைப் பிடுங்கினீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு அவை ''நீங்கள் தானே ஆழமான வேரினை உடையவைகளுக்கு அதிக நீரும், ஆழம் குறைந்த வேரினை உடையவைகளுக்கு குறைந்த நீரும் ஊற்றுங்கள் என்று கூறினீர்கள். ஆதலால் எவற்றின் வேர் ஆழமாக உள்ளது, எவை குறைந்த ஆழத்தினை உடைய வேர்களைக் கொண்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள தாவரங்களைப் பிடுங்கினோம்'' என்று பதில் கூறின. தோட்டக்காரர் புத்தியில்லாதவர் களின் செயல்களை எண்ணி வருந்தினார்.

இக்கதை கூறும் கருத்து புத்தியில்லாத வர்களிடம் பொறுப்பான செயல்களை ஒப்படைக்கக் கூடாது.

# மாலையாக்கிக் கொள்வார்கள்



- கஸ்ஸாலி அஷ்ஜெம்ஸ் -

*பள்ளிவாசல் சிலருக்கு*
*சரண்டலின் வாசல்!*
*வக்பு சொத்துக்களிலும்*
*வகை தொகையின்றி மோசடி!*

*மோடியை விடவும்*
*மோசடி பிரசித்தம்*
*நிர்வாக சபைகள் சில*
*நிர்வாண சபைகளாக....*

*கணக்கு வழக்குகளில்*
*கணக்கு வழக்கின்றி*
*களவு*
*அப்பம் சாப்பிடுவது போல்*
*விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்*
*அப்பன் வீட்டுச்*
*சொத்தாகக் கருதி.*
*அல்லாஹ்வின் சொத்துக்கள்*
*அநாதரவாக நடுத்தெருவில்.*

*அல்லாஹ்வின் கூலிக்கு*
*அஞ்சாத ஆசாமிகள்*
*ஆள்பார்த்துக் கொடுக்கிறார்கள்*
*குறைந்த கூலிக்கு*
*வக்பு சொத்துக்களையுமே*
*பேசி முடிவெடுப்பதற்குப் பதிலாக*
*இரகசியம் பேசியே*
*முடிவு செய்தும் விடுகிறார்கள்*

*தகுதியற்றவர்கள்*
*தொங்கிக் கொள்ளும் இடமாக*
*மாறிவிட்டன மஸ்ஜித்கள்*

*முடியாட்சி இன்னும்*
*முடிவதாகத் தெரியவில்லை*
*மஸ்ஜித்களில் மட்டும்*
*வக்பு சொத்து மோசடியில்*
*பெரிய பெரிய சாதனைகள்*
*படைக்கப்பட்டு வருகின்றன*
*பெரிய பள்ளிவாசல்களிலும்*

*பொறுப்பான அமைச்சு*
*பொறுப்பிலிருந்து ஒதுங்கினால்*
*மஸ்ஜித் கற்களையுடைத்து மாலையாக்கிக் கொள்வார்கள்*
*பொறுக்கிப் பயல்கள்!*

## எல்லோரையும் ஏற்றுக்கொள்ளுங்கள்

தனி வாழ்வில் மிக மோசமாக இருந்தவர்கள், பொது வாழ்வில் மக்களுக்கு நல்லது செய்யும் நல்ல வர்களாக இருந்தார்கள். தனி வாழ் வில் நல்லவராக இருந்தவர், லட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவிக்கும் கொடுங்கோலனாகப் பொது வாழ்வில் இருந்தார்கள்.

நான் கூறியது உங்களுக்கு விசித்திர மாக இருக்கலாம். ஆனால் அதுவே உண்மை.எவரையும் அவருடைய நடவடிக்கைகளை வைத்து எடைபோடுவது தவறு.

ஒருவரின் குணநலன்கள் என்பது சிக்கலான நிகழ்வு. ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் முக்கியமான வர்கள். யாரையும் நியாயப்படுத்தவும் செய்யாதீர்கள்; புறந்தள்ளவும் செய்யாதீர்கள்.

எல்லோரையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.




எந்த ஊருக்கு போகப் போகிறோம் என்று தெரியாமல் நீங்கள் பேருந்து நிலையத்திற்குச் செல்வீர்களா? அப்படிச் சென்றால் என்ன ஆகும்? இந்தப் பேரூந்தில் ஏறுவதா? அந்தப் பேருந்தில் ஏறுவதா என்ற குழப்பம் தான் மிஞ்சும். எங்கும் போக முடியாது. போனாலும் மகிழ்ச்சி இருக்காது.

வாழ்க்கையிலும் அப்படித்தான். திட்டமிடாமல் வாழ்க்கையை நாம் நகர்த்திக் கொண்டே சென்றால் குழப்பம் தான் மிஞ்சும். எந்த ஒரு முன்னேற் றத்தையும் நாம் காண முடியாது. வாழ்க்கையில் நமக்கு ஒரு இலக்கு இருந்தால் நாம் சிறப்பாக வாழலாம்.

மாணவப் பருவத்தில் இருப்பவர்கள் அடுத்து என்ன ஆக வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு மருத்துவராக, பொறியியலாளராக, முதலாளியாக, அறிவியல் அறிஞராக, பத்திரிக்கையாளராக, ஆசிரியராக, விளையாட்டு வீரராக அல்லது எழுத்தாளராக வேண்டுமென இலக்கைத் தீர்மானிக்கலாம்.

மற்றவர்கள் தங்கள் வாழ்வில் அடைய விரும்பும் குறுகிய கால மற்றும் நீண்டகால இலக்குகளை முடிவு செய்து கொள்ள வேண்டும். உங்கள் இலக்கை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். உங்களைப் பற்றி நன்கு யோசித்து, உங்களின் பலம் பலவீனங்களைப் பட்டியலிட்டு நல்ல இலக்கைத் தீர்மானியுங்கள்.

உங்களைப் பற்றித் தாழ்வாக எண்ணாமல் 'உங்களால் முடியும்' என்ற எண்ணத்தோடு இலக்கைப் பற்றி யோசியுங்கள்.

உங்கள் இலக்கு எப்படி இருக்க வேண்டும்?

**தெளிவாக:** (எடுத்துக்காட்டு) நான் ஒரு தொழிலதிபராக விரும்புகிறேன்.

**அளவிடக்கூடியதாக:** நான் கோடிக்கணக்கில் வர்த்தகம் செய்யும் தொழிலதிபராக விரும்புகிறேன்.

**அடையக்கூடியதாக:** உங்களுடைய தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். உதாரணமாக 60 வயதிற்குப் பிறகு, உடல்நிலை மோசமான பிறகு ஒலிம்பிக் போட்டிகள் பற்றி யோசிக்கக் கூடாது.

**தொடர்புடையதாக:** இலக்கு உங்களுக்குத் தொடர்புடையதாக இருந்தால் அதை அடைவது எளிது. மேலும் இலக்கை நிர்ணயித்த பின் அது தொடர்பான அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். தேவையானவற்றைச் செய்ய வேண்டும்.

**கால வரையறை உள்ளதாக:** நான் இன்னும் 5 வருடத்தில் கோடிக்கணக்கில் வர்த்தகம் செய்யும் தொழிலதிபராக வருவேன்.

இப்படிச் சிறப்பான இலக்கினை நாம் வகுத்துக் கொண்டால் நம் மனம் அதை அடைவது எப்படி என்று சிந்திக்க ஆரம்பித்துவிடும். நம் செயல்களும் அதற்கேற்றவாறு அமைய ஆரம்பித்துவிடும். எனவே வாழ்வில் முன்னேற முதற்கட்டமாய் நல்ல இலக்கை அமைத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு





இன்ஷா அல்லாஹ்

மீள்பார்வை கலண்டர்


நவம்பரில்...

உங்கள் பிரதிகளை பெற்றுக்கொள்ள...

Contact: Peer Mohideen - 0777798096

FOCUS MEDIA (Pvt) Ltd






வெளிவந்து விட்டது

வைகறை

வாழ்வியல் சஞ்சிகை

இதழ் 48

விலை: 60/-

FOCUS MEDIA (Pvt) Ltd





## பார்சிலோனாவில் பயிற்சி

பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் மைலோ நடத்திய 'ரோட் டு பார்சிலோனா' உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் சிறப்பாக விளையாடிய ஆறு பேர் மேலதிகப் பயிற்சிக்காக ஸ்பெய்ன் சென்றுள்ளனர். 12 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களிடையேயே இந்தச் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது. இறுதிப் போட்டிகள் அண்மையில் பதுளையில் நடைபெற்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட 800 மாணவர்களில் இருந்தே இந்த 06 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆறு பேரிலும் கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி மாணவன் எம்.ஐ.எம்.ஸைட், கிண்ணியா அல்அக்ஸா மாணவன் சுல்ஹிம், கிளிநொச்சி புலவர் மணி ஷரீப்டீன் மாணவன் ஏ. சைமர், கண்டி திரித்துவக் கல்லூரி மாணவன் மொஹமட் ஷான் ஆகியோரும் இந்தப் பயிற்சிக்காக புறப்பட்டுச் சென்றுள்ளனர். இவர்கள் பார்சிலோனா கால்பந்தாட்டக் கழகத்தின் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளதோடு எஸ்கோலா புட்போல் கிளினிக், காம்ப் நோஉ வகுப்பறைப் பயிற்சிகள், மைதானத்திலான நுட்பங்கள் தொடர்பிலான பயிற்சிகள் போன்றவற்றிலும் கலந்து கொண்டனர்.

## 16 வயது வேக இளைஞன் ரஸ்மி அஹமடுக்கு பலத்த வரவேற்பு

அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவின் மெய்வல்லுனர் போட்டித் தொடரில் சாதனை நிலைநாட்டிய பொல்கஹாவெல அல் இர்பான் மாணவன் ரஸ்மி அஹமட் அவரது ஊரில் பாராட்டு வழங்கி வரவேற்கப்பட்டார்.

34 ஆவது அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவின் மெய்வல்லுனர் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டர் போட்டியில் புதிய சாதனையொன்றை நிலைநாட்டினார். 100 மீற்றர் தூரத்தை 11.16 நிறைவு செய்தே அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

சாதனை நிலைநாட்டி விட்டு ஊர் திரும்பும் வழியில் இவருக்கான பலத்த வரவேற்பு ஏற்பாடுகள் அவரது பாடசாலையினாலும் ஊர் மக்களினாலும் செய்யப்பட்டிருந்தன.








துருக்கி நாட்டின் உதவித் திட்டமான (TIKA _ Turkish Cooperation and Coordination Agency) பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு (3 டி) டிஜிட்டல் பிரிண்டர் ஒன்றை அன்பளிப்புச் செய்தது. துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் துன்கா ஒக்கந்தர், பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் காமினி புஸ்பக்குமாரவிடம் இவ் இயந்திரத்தைக் கையளித்தார் மற்றும் பீடத்தின் தலைவர் பேராசிரியர் மவ்ஜூட் பேராசிரியர் பத்மராஜாவும் இவ் வைபத்தில் கலந்து கொண்டனர். (அஷ்ரப் ஏ. சமத்)

## கஹட்டோவிட்ட அல்பத்ரியாவில் பாராட்டு விழா







கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று ஒக்டோபர் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் பாடசாலையில் நடைபெற்றது. அல்பத்ரியா அலும்னி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கலந்துகொண்டார். விசேட அதிதியாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மதும், கௌரவ அதிதிகளாக எம்.எ.எம். அக்ரம், எம்.ரி.எம். இஸ்மாயில், எம்.ஏ.ஏ. நூருல்லா (நளீமி) ஆகியோரும் பங்கேற்றனர்.

சிறப்பு அதிதிகளாக கம்பஹா கல்வி வலய கல்விப்பணிப்பாளர் டபிள்யு. மல்லிகா, கம்பஹா கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) டபிள்யு, என்.ஏ. விஜேந்தர, உதவிப் பணிப்பாளர் அனுர குமார, கோட்டக் கல்வி பணிப்பாளர் ஜி.ஏ.பி. குலதுங்க, உதவிப் பணிப்பாளர் (தமிழ்ப் பிரிவு) எஸ்.எல்.எம். ஜெஸீம், ஆகியோரும் பாடசாலை பழைய மாணவர்களை நலன்விரும்பிகள் உட்பட பெருந்திரளானோர் இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Maninda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org